
# தமிழக வேந்தர்




நா. பாலுசாமி, M.A.,

A.T.N. நாகலிங்கம் & கம்பெனி
புதுமண்டபம், மதுரை.

# தமிழக வேந்தர்

ஆசிரியர்:

**நா. பாலுசாமி, M. A.,**

தமிழ் விரிவுரையாளர்,

தியாகராசர் கல்லூரி,

மதுரை,

வெளியிடுவோர்:

**A. T. N. நாகலிங்கம் & கம்பெனி**

புதுமண்டபம், மதுரை.

உரிமை பதிவு செய்யப்பட்டது.

விலை ரூ. 1—12—0 / 1—75

முதற் பதிப்பு—1955.
இரண்டாம் பதிப்பு—1959.

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை - 130.

[library stamp: ... UNIVERSITY]

# முகவுரை

தமிழக வேந்தர் என்னும் பெயரோடு வெளிவரும் இந்நூல் கல்லூரி வகுப்புக்களுக்கு ஏற்ற நடையுடனும் மேற்கோள்களுடனும் எழுதப்பட்டுள்ளது. இதன்கண் சோழன் கரிகாலன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் என்னும் முப்பெரு வேந்தர்களது வரலாறும், அவர்களைப்பற்றிப் புலவர் பெருமக்கள் பாடியுள்ள செய்திகளும் விளக்கமாக இடம் பெற்றுள்ளன.

சங்ககாலச் சோழருள் தலை சிறந்தவன் கரிகாலன்; அங்ஙனமே பாண்டியருள் புகழ் பெற்றவன் நெடுஞ்செழியன்; சேரருள் சிறந்தவன் செங்குட்டுவன். இவர் தம் வரலாறுகளும் இவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடப்பெற்ற பாட்டுக்களும் சங்க காலத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன் தமிழரசர் ஆண்ட தமிழகத்தின் நிலையும், தமிழ் மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் இவ்வரலாறுகளால் நன்கு விளங்கும். இதனைத் தமிழ் மாணவர் படித்துப் பயன் பெறுமாறு செய்யத் தமிழறிஞர்களை வேண்டுகிறேன்.


இந்நூலை மிகச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ள மதுரை **A. T. N.** நாகலிங்கம் கம்பெனியாருக்கு எனது நன்றி உரியதாகும்.

ஆசிரியர்.

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | சங்க காலத் தமிழகம் | 1 |
| II | சோழன் கரிகாலன் | 9 |
| III | பாண்டியன் நெடுஞ்செழியன் | 35 |
| IV | சேரன் செங்குட்டுவன் | 82 |

# சங்ககாலத் தமிழகம்



# தமிழக வேந்தர்

## 1. சங்ககாலத் தமிழகம்

[library stamp]

### பழந் தமிழ் நூல்கள்

இன்றுள்ள தமிழ் நூல்களுள் காலத்தால் தொன்மையானவை சில உள. அவை தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன. அந்நூற் செய்திகளை நோக்கின், அவை எழுந்த காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட சில நூற்றாண்டுகளாக இருத்தல்வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அக்காலமே மதுரையில் **தமிழ்ச் சங்கம்** நிலவிய காலம். ஆதலால் அதனைச் **சங்க காலம்** என்றும், அக்காலத்தில் தோன்றிய நூல்களைச் **சங்க நூல்கள்** என்றும் அறிஞர் கூறுவர்.

மேலே கூறப்பெற்ற சங்க நூல்களைக்கொண்டு, சங்க காலத் தமிழகத்தின் எல்லைகள், அக்கால நெடுநில மன்னர், குறுநில மன்னர் பற்றிய செய்திகள், புலவர்களின் வரலாறுகள், பொது மக்களின் வாழ்க்கை முறைகள், கலைகளின் வளர்ச்சி, உழவு, தொழில், வாணிகம், சமயம்பற்றிய விவரங்களை நாம் அறிந்து மகிழலாம்.

### தமிழக எல்லைகள்

"வேங்கடத்து உம்பர் மொழிபெயர் தேயம்" என்று சங்க காலப் புலவர் கூறியுள்ளமையால், வேங்கடம் சங்க காலத் தமிழகத்தின் வட எல்லையாக இருந்தது என்பது தெளிவு.

"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்...கடல்"[1]

என்ற காக்கைபாடினியார் கூற்றால் தெற்கே இந்துமாக்கடலும், கிழக்கே வங்கக்கடலும், மேற்கே அரபிக்கடலும் தமிழகத்தின் எல்லைகள் என்பது தெளிவாகிறது. ஆகவே சங்ககாலத் தமிழகம் வடக்கே வேங்கட மலைத் தொடரையும், தெற்கே குமரி முனையையும் கிழக்கிலும் மேற்கிலும் கடலையும் எல்லைகளாகக் கொண்ட நிலப் பரப்பு என்பது விளங்கும்.

சங்க காலத் தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, மலையமாநாடு, கொங்குநாடு என்னும் பிரிவுகளைத் தன்னகத்தே பெற்றுத் திகழ்ந்தது. அவற்றுள் சேர சோழ பாண்டிய நாடுகளைச் சேர, சோழ பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தர் ஆண்டுவந்தனர்; எஞ்சிய நாடுகளைச் சிற்றரசர் ஆண்டுவந்தனர். சில காலங்களில் கொங்குநாடு சேரர் ஆட்சியிலும், தொண்டைநாடு சோழர் ஆட்சியிலும் இருந்தன.

**சேர நாடு**

சேரநாடு என்பது இக்காலக் கொச்சி — திருவிதாங்கூர் நாடுகளும், மலையாள மாவட்டமும், மேலைக் கடற்கரை வெளியும் சேர்ந்த நிலப் பகுதியாகும். மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றி அரபிக்கடலில் கலக்கும் பேரியாற்றங்கரையில் கடலுக்கு அண்மையில் அமைந்திருந்த **வஞ்சி மாநகரமே** சேரர் தலைநகரம். அந்நாட்டின் சிறந்த துறைமுக நகரங்கள் **முசிறி, தொண்டி** என்பன

1 தொல்-செய்யுளியல் உரை.

கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே அத்துறைமுக நகரங்கள் கடல் வாணிகத்திற் சிறந்து விளங்கின. மலைபடு பொருள்களாகிய மிளகு, அகில், சந்தனக்கட்டை, ஏலம், யானைத்தந்தம் முதலியன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இயற்கை வளம் செறிந்த சேர நாட்டைச் **சேரர்** என்ற மரபரசர் ஆண்டுவந்தனர். அவர்களது அரசியல் இலச்சினை வில்; மாலை பனம் பூ மாலை. சேரர் பைந்தமிழைப் பாங்குற வளர்த்தனர். அவர் தம் வரலாற்றைப் பதிற்றுப்பத்து, புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய நூல்களைக்கொண்டு அறியலாம். சேர வேந்தருள் **செங்குட்டுவன்** என்பவன் தலைமணியாகக் கருதத்தக்கவன்.

**பாண்டிய நாடு**

பாண்டிய நாடு என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைக் கொண்டது. அந்நாடு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐவகை நில அமைப்பை உடையது. அந்நாட்டின் தலைநகரம் வையை ஆற்றங்கரையில் அமைந்துள்ள **மதுரை**. **கொற்கை, தொண்டி** என்பன அந்நாட்டுத் துறைமுகப் பட்டினங்கள். கொற்கை முத்துக்குப் பெயர் பெற்றது. பாண்டிய நாட்டிலிருந்து மெல்லிய ஆடை வகைகளும் முத்துக்களும் மிகுதியாக வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்யப் பட்டன. அந்நாட்டைப் **பாண்டியர்** என்ற மரபரசர் பல நூற்றாண்டுகளாக ஆண்டுவந்தனர். அவர்கள் மதுரையில் சங்கம் நிறுவித் தமிழை வளம்பெற வளர்த்தனர். பாண்டியர் வரலாற்றைப் புறநானூறு, பரிபாடல், சிலப்பதிகாரம், முதலிய நூல்களைக் கொண்டு அறியலாம். பாண்டிய மன்னருள்

தலைசிறந்த வீரன் தலையாலங்கானத்துச் செரு வென்ற **நெடுஞ்செழியன்** என்பவன். பாண்டியர் இலச்சினை கயல்; மாலை வேப்பம்பூ மாலை.

**சோழ நாடு**

தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைக் கொண்ட நிலப் பகுதி சோழநாடு எனப்படும். சோழ நாட்டின் பண்டைத் தலைநகரம் **உறையூர்**. பின்னர், காவிரியாறு கடலொடு கலக்குமிடத்தில் அமைந்திருந்த **காவிரிம்பூம்பட்டினம்** சோழர் கோநகரமாக விளங்கியது. சோழநாடு மருதவளம் செறிந்த நாடு. காவிரியாறு தன் கிளையாறுகளுடன் பாய்ந்து சோழ நாட்டை வளப்படுத்தியது; இன்றும் வளப்படுத்திவருகின்றது. சோழநாட்டில் வயல்களும், வாழைத் தோட்டங்களும், தென்னந் தோப்புக்களும், மாஞ் சோலைகளும் கண்ணைக் கவர்வனவாகும்.

வளம் மிகுந்த அந்நாட்டை ஆண்டவர் **சோழர்** எனப்பட்டனர். சோழர் இயற்றமிழில் வல்ல புலவரையும், இசைத் தமிழில் வல்ல பாணரையும், நாடகத் தமிழில் வல்ல கூத்தரையும் போற்றிப் புரந்தனர். அவர்தம் வரலாற்றைப் புறநானூறு, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களால் அறியலாம். சேரர்க்கு விற்கொடியும் பாண்டியர்க்கு மீன் கொடியும் இருந்தாற்போலவே சோழர்க்குப் புலிக்கொடி இருந்தது. புலியே சோழரது முத்திரை. அவர்தம் மாலை ஆத்தி மாலை.

**தொண்டை நாடு**

தொண்டை நாடு என்பது வடபெண்ணையாற்றுக்கும் தென்பெண்ணையாற்றுக்கும் இடைப்

பட்ட நிலப்பகுதியாகும். அதற்கு **அருவா நாடு** என்ற பெயரும் உண்டு. அந்நாட்டு மக்கள் **அருவாளர்** என்று அழைக்கப்பெற்றனர். தொண்டை நாட்டின் வடபகுதியாகிய நெல்லூர், சித்தூர் மாவட்டப் பகுதிகள் 'அருவா வடதலை நாடு' எனப் பெயர் பெற்றிருந்தன. அதன் தலைநகரம் **பவத்திரி** என்பது. அப்பவத்திரி இன்றை நெல்லூர் மாவட்டத்துக் கூடூர்த் தாலுகாவில் உள்ள ரெட்டிபாளையம் என்பதைக் கல்வெட்டுக்களால் அறியலாம். அந்நகரைத் **திரையன்** என்பவன் ஆண்டு வந்தான். அத்திரையனுக்கு வேங்கட மலைத்தொடர் உரியது. இதனை,

'வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை'

என்னும் அகநானூற்றுப் பாடலடி தெளிவாக்குகிறது. திரையர 'தொண்டையர்' என்றும் வழங்கப்பெற்றனர். இது,

"வினை நவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்(டு)
ஓங்குவெள் ளருவி வேங்கடம்" 2

என்னும் அகநானூற்று அடிகளால் தெளிவாதல் காண்க. தொண்டைமான் இளந்திரையன் என்பவன் காஞ்சியை ஆண்டதாகப் பெரும்பாணாற்றுப் படை கூறுகிறது. இதுகாறும் கூறப்பெற்ற உண்மைகளை நோக்க, தொண்டை நாட்டின் வடபகுதியைத் தொண்டைமான் திரையனும், காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டைநாட்டின் தென்பகுதியைத் தொண்டைமான் இளந்திரையனும் ஆண்டுவந்தனர் என்று கொள்வது பொருத்தமாகும்.

2 அகநானூறு. செ. 213

இத்தொண்டை நாடு இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிந்திருந்தது. அவையாவன: 1. ஆம்பூர்க் கோட்டம் 2. இளங்காட்டுக் கோட்டம் 3. ஈக்காட்டுக் கோட்டம் 4. மணவிற் கோட்டம் 5. ஊற்றுக்காட்டுக் கோட்டம் 6. எயிற்கோட்டம் 7. கடிகைக் கோட்டம். 8. கலியூர்க் கோட்டம் 9. களத்தூர்க் கோட்டம் 10. குன்றவட்டானக் கோட்டம் 11. சேத்தூர்க் கோட்டம் 12. செங்காட்டுக்கோட்டம் 13. செங்திருக்கைக் கோட்டம் 14. செம்பூர்க் கோட்டம் 15. தாமல் கோட்டம் 16. படுவூர்க் கோட்டம் 17. பல்குன்றக் கோட்டம் 18. புழல் கோட்டம் 19. புலியூர்க் கோட்டம் 20. பையூர்க் கோட்டம் 21. வெண்குன்றக் கோட்டம் 22. வேங்கடக்கோட்டம் 23. மணவூர்க் கோட்டம் 24. வேலூர்க் கோட்டம். கரிகாற் சோழனது உருவம் பொறிக்கப் பெற்ற சிலை ஒன்று காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோவிலில் இருக்கின்றது.

**நடுநாடு**

சிதம்பரத்திற்கு வடக்கே உள்ள வெள்ளாற்றுக்கும் தென்பெண்ணையாற்றுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி 'நடுநாடு' எனப் பெயர்பெற்றது. அது சங்க காலத்தில் 'மலையமாநாடு' என வழங்கியது.

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட மலையமான்கள் அந்நிலப்பகுதியை ஆண்டுவந்தனர். அவர்கள் சிறந்த போர்ப்பயிற்சி உடையவர்கள். மலையமான் திருமுடிக்காரி என்பவன் புகழ்பெற்ற சங்ககால வள்ளல்களில் ஒருவன்.

**கொங்கு நாடு**

சேலம், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களைக் கொண்டது கொங்கு நாடு. பொன் கிடைத்த காரணம்

பற்றி அந்நாடு [3] கொங்குநாடு எனப்பெயர்பெற்றது என்று சிலரும், தேன் மிகுதியாகக் கிடைத்தமை பற்றி அந்நாடு [4] கொங்கு நாடு எனப் பெயர் பெற்றது என்று சிலரும் கூறுகின்றனர். அந்நாட்டைச் சுற்றிலும் சேர சோழ பாண்டிய நாடுகள் அமைந்திருந்தமையால், மூவேந்தரும் கொங்கு நாட்டைக் கைப்பற்றப் பன்முறை முனைந்தனர். சங்ககாலத்தில் சேரரே கொங்குநாட்டில் மிகுதியாக ஆணை செலுத்தினர். அப்பொழுது கொங்கு நாட்டுக் **கரூர்** சேரர்க்குரிய தலைநகரங்களுள் ஒன்றாக விளங்கியது.

கொங்கு நாட்டில் தகடூரைத் தலைநகராகக் கொண்ட பகுதியை **அதியமான்கள்** என்ற சிற்றரச மரபினர் ஆண்டுவந்தனர். அவர்கள் ஆண்ட தகடூர் நாடு, இக்காலத் தருமபுரி என்னும் தாலூகாவும் அதன் சுற்றுப்புற பகுதியுமாகும். **குமணனும்** அவனைச் சார்ந்தவரும் முதிரமலைப் பகுதியை ஆண்டு வந்தனர். அப்பகுதி இன்றைய உடுமலைப்பேட்டைத் தாலுகாவும் அதன் சுற்றுப்புறப் பகுதியுமாகும். கொல்லிமலைப்பகுதி **ஓரி** என்பவனாலும் அவன் மரபினராலும் ஆளப்பட்டு வந்தது. அச்சிறிய நிலப்பகுதிகளை ஆண்டுவந்த சிற்றரசர்கள் சில சமயங்களில் தம்முள் போரிட்டனர்; சில காலங்களில் ஒரு முடிமன்னனோடு சேர்ந்து மற்றொரு முடிமன்னனை எதிர்த்தனர். மண்ணாசையால் இவ்வாறு நெடுநில மன்னரும் குறுநில மன்னரும் ஓரோவழிப் போரிட்டனர். ஆயினும், தாய்மொழியாகிய தமிழ் மொழியை வளர்ப்பதில் அனைவரும் முனைந்திருந்தனர் என்று கூறுதல் அமையும். ஆண்பாற் புலவ

3 கொங்கு - பொன். 4 கொங்கு - தேன்.

ரும் பெண்பாற்புலவரும் அவர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டனர். அந்த அறச்செயலால் சங்க காலத் தமிழகத்தில் முத்தமிழும் முழங்கின.

தமிழகத்தின் 'பொற்காலம்' என்றுகருதத்தகும் சங்ககாலத்தில், சோழருட் சிறந்த **கரிகாலன்**, பாண்டியருட் சிறந்த தலையாலங்கானத்துச் செரு வென்ற **நெடுஞ்செழியன்**, சேரவேந்தருட் சிறந்த **செங்குட்டுவன்** என்னும் முடிமன்னர் மூவர் வரலாறுகளை அடுத்துவரும் பகுதிகளில் காண்போம்.

# II. சோழன் கரிகாலன் ★

## 1. போர்ச் செயல்கள்

### சோழ அரசன்

சங்ககாலச் சோழர் மரபில் தோன்றியவன் இளஞ் சேட்சென்னி என்ற ஏந்தல், திரையன் — இளந்திரையன், குமணன் — இளங்குமணன் என வரும் முறைப்படி, சேட்சென்னி — இளஞ்சேட்சென்னி என்ற பெயர்கள் வழங்கிவந்தன. அவற்றுள், சேட்சென்னி முடி அரசனைக் குறிப்பது என்பதும், இளஞ்சேட்சென்னி முடிபுனையாதவனைக் குறிப்பது என்பதும் நன்கு விளங்கும். இளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேள் மகளை மணந்து கொண்டான். அவ்விருவருக்கும் பிறந்தவனே சோழர் குலமணியாகிய **கரிகாலன்.**

கரிகாலன் வளர்பிறை என வளர்ந்து, பல கலைகளும் பயின்று, இணையற்ற இளஞ்சிங்கமாக இலங்கினன். அப்பொழுது சோழவேந்தனாக இருந்த அவனது பெரிய தந்தை இறந்தனன்; அவனது தந்தையும் மண்ணுலக வாழ்வை நீத்தான். இறந்த வேந்தனது மைந்தன் முடிபுனைய முனைந்தனனோ, அன்றி யாது நடந்ததோ தெரிந்திலது. நாட்டில் குழப்பம் உண்டாயிற்று. கரிகாலன் சோழர் தலைநகரான உறையூரினின்று நீங்கிப் பல இடங்களில் அலைந்து திரிந்தான். தாயத்தார் ஒருபால் பூசல் விளைத்தனர். அரசாங்க உயர் அலுவலர் அக்கால வழக்கப்படி, கழுமலத்து இருந்த வேழத்தைக்

---

★ திரு. K. N. சிவராஜபிள்ளையவர்கள் ஆராய்ச்சி முடிவுப்படி இரண்டாம் கரிகாலனைக் கொண்டு இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது.

கட்டவிழ்த்துவிட்டு, அரசுக்கு உரியவனைக் கொணரு மாறு ஏவினர். அவ்வேழம் நாட்டின் பல இடங் களிலும் அலைந்து திரிந்தது; இறுதியில் கரூரில் இருந்த கரிகாலனைத் தன்மீது அமர்த்திக்கொண்டு உறையூரை அடைந்தது. அதுகண்ட பெருமக்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர். கரிகாலனைச் சோழ வேந்தனாக்கினர்.

**போர்ச் செயல்கள்**

சோழவேந்தருள் கரிகாலன் பேரரசனாக விளங் கினமைக்குப் பின்வரும் போர்களே காரணமாகும். அவனுடைய போர்ச்செயல்கள் பொருநர் ஆற்றுப் படையிலும் பட்டினப்பாலையிலும் சிலப்பதிகாரத் திலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

கரிகாலன் தமிழகம் முழுவதிலும் தனது ஆட்சியை நிலைநாட்ட விரும்பினான். அதனால் அப் பெருமகன் பெரும்படையுடன் சென்று பாண்டி யனைத் தாக்கினான். பாண்டியனுக்கு உதவியாகச் சேரனும் சேர்ந்தனன். வெண்ணி என்ற இடத்தில் கடும்போர் நிகழ்ந்தது. சோழர் படையும் அதனை எதிர்த்த சேரபாண்டியர் படைகளும் கொடும்போர் உடற்றின. பகைவராகிய கடலில் கரிகாலனாகிய போர்க்கப்பல் தங்குதடையின்றிச் சென்றது. புலிக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதை ஒப்பப் பகைவர் கூட்டத்துள் கரிகாலன் பாய்ந்து அருஞ்சமர் புரிந் தான். தம் வேந்தனது வீரப்போரைக் கண்ட சோழப்படையினர் வீறுகொண்டு முன்னேறிப் பாய்ந்து கடும்போர் செய்தனர். பகைவர் படை நிலை கலங்கியது. குருதி யாறு பெருக்கெடுத்து ஓடியது. கரிகளும் பரிகளும் துண்டிக்கப்பட்டன; வீரருள் தலையிழந்தோர் பலர்; கைகளை இழந்தோர்

பலர்; கால்களை இழந்தோர் பலர். அதிகம் அறைவ தேன்? சேரனும் பாண்டியனுமே போர்க்களத்தில் உயிர் இழந்தனர். வளவன் வாகை சூடினன். இதனைப் பொருநர் ஆற்றுப்படையில் **முடத்தாமக் கண்ணியார்** என்ற புலவர் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்;

"இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை
அரவாய் வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி வேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத்(து) அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்."[5]

இங்ஙனம் சேர பாண்டியரை வென்ற கரிகாலன் பன்றி நாட்டிற்குச் சென்றனன். பன்றிநாடு என்பது நாகப்பட்டினமும் அதனைச் சூழ்ந்த நிலப் பகுதியுமாகும். அந்நாட்டை ஒளிநாகர் என்பார் ஆண்டுவந்தனர். கரிகாலன் அவர்களை வென்று அந்நாட்டைக் கைப்பற்றிக்கொண்டான்.

பின்னர்க் கரிகாற்சோழன் முல்லைநிலத் தலைவர் களாக இருந்த 'பொதுவர்' என்பவரை வென்ற னன்; இருங்கோவேள் முதலிய வேளிரைத் தனக்கு அடங்கிய சிற்றரசராக்கினன்.

இங்ஙனம் தமிழகத்தை அடிமைப்படுத்திய கரிகாலன் அருவாநாட்டையும் கைப்பற்ற எண்ணி வடக்கு நோக்கிச் சென்றான்; வழியில் நடுநாடு எனப் பட்ட மலையமானாட்டை அடைந்தான். மலையமான் சோழப்பேரரசனுக்கு அடங்கியவன் ஆகினன். பின்பு கரிகாலன் அருவாநாட்டில் வாழ்ந்த குறும்

5. பொருநர் ஆற்றுப்படை வரி. 143—148.

பரை அடக்கினன்; அருவாளரை வென்றான். தொண்டைநாட்டின் இருபத்துநான்கு கோட்டங்களிலும் அவர்களை நிலைபெறச்செய்தான்; வேளாளர் பலரை அந்நாட்டிற் குடியேற்றினன்.[6]

அருவாநாட்டை வென்ற பெருவீரனை கரிகாலன் வலிமிக்க தன் தானையுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டான்; வடுகச் சிற்றரசர் பலரை வென்றான்.

**வடநாட்டுச் செலவு**

பின்னர்ச் சோழப்பேரரசன் தன் பெரும்படையுடன் இமயம் வரையில் சென்று மீண்டான். அப்பொழுது பாடலிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட மகதநாட்டு மன்னன் கரிகாலனோடு நட்புக்கொண்டு, தனது நட்புக்கு அறிகுறியாகப் **பட்டிமண்டபம்** கொடுத்தான்; கோசாம்பியைத் தலைநகராகக் கொண்ட வச்சிரநாட்டு வேந்தன் **கொற்றப்பந்தர்** அளித்தான்; உச்சனியைத் தலைநகராகக்கொண்ட அவந்திநாட்டு வேந்தன் **தோரண வாயிலைத்** தந்தான். இச்செய்திகளைச் சிலப்பதிகாரம் சித்திரிக்கின்றது:

“மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோன்இறை கொடுத்த கொற்றப் பந்தரும்,
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும்,

---

6. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கோவூர், சூனம்பேடு முதலிய இடங்களிலுள்ள தொண்டைமண்டல முதலிமார்கள் **தம்மைக் கரிகால் வளவனால் குடியேற்றப்பெற்ற வேளாள மரபினர்** என்று கூறுகின்றனர். பண்டித உலகநாதபிள்ளை, ‘கரிகாற்சோழன்’ பக். 34.

அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபில் தோரண வாயிலும்
பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
நுண்வினைக் கம்மியர் காணா மரபின," 7

## இலங்கைப் படையெடுப்பு

தமிழகத்திற்குக் கிழக்கிலும் தெற்கிலுமாகக் கடலிற் பரவியுள்ள இலங்கைத் தீவின்மீது கரிகாலனது கருத்துச் சென்றது. சிங்கள அரசன் ஒருவன் அத்தீவை ஆண்டுவந்தான். கடற்படையையுடைய கரிகாலன் தக்க படையுடன் இலங்கைத்தீவில் இறங்கினான். இலங்கை வீரரும் சோழவீரரும் கடும்போர் புரிந்தனர். இறுதியில் கரிகாலன் வெற்றிபெற்றான். இலங்கைத் தீவு சோழராட்சிக்கு உட்பட்டது.

# 2. அரசியல்

## சோழப்பெருநாடு

கரிகாலன்பெற்ற வெற்றிகளை நோக்க, தமிழகம் முழுவதும் அவனது ஆட்சியில் இருந்தது என்பதை உணரலாகும். கடப்பை மாவட்டத்தில் பிற்காலத்தில் ஆண்டுவந்த ரேனாண்டு சோழரும், பொத்தப்பி, நெல்லூர், சித்தூர் முதலியவற்றை ஆண்டுவந்த தெலுங்கச் சோழரும் தம்மைக் 'கரிகாலன் மரபினர்' எனச் கல்வெட்டுகளில் குறித்து மகிழ்ந்தனர்; கன்னட நாட்டிலும் சிற்றரசர் பலர் தம்மைக் 'கரிகாலன் மரபினர்' என்று கல்வெட்டுகளில் பொறித்தனர். காஞ்சி நகரத்தை கரிகாலன் புதுப்பித்தான்; தொண்டை மண்டலத்தைக் காடு கெடுத்து நாடாக்கினான் என்று பெரிய புராணம் கூறுகின்றது.

---

7. இந்திர விழவூரெடுத்த காதை, வரி. 99–106.

"காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கி"[8]

என்று பட்டினப்பாலையும் பகர்கின்றது. இவை அனைத்தையும் உளங்கொள்ளின், கரிகாலன் காலத்துச் சோழப்பெருநாடு வடபெண்ணையாறு முதல் குமரி முனைவரையில் பரவி இருந்தது என்று கூறுதல் பொருத்தமாகும்.

**'பெருவளத்தான்'**

சோழநாட்டுக் குடிமக்களைச் செவிலித்தாய் போலக் காத்துவரும் காவிரியாற்றுப் பெருக்கால் உண்டாகும் தீமையை ஒழிக்கக் கரிகாலன் ஆற்றின் இருமருங்கும் உயர்ந்த கரைகளை அமைக்கத் திட்டமிட்டான். அத்திட்டப்படி நாட்டு மக்களும் சிற்றரசரும் (சிற்றரசர் ஆட்சிக்குட்பட்ட மக்களும்) பணி ஆற்றினர்.[9] கரை அமைப்புப் பணி முடிந்த பின்பு, அரசன் ஆணையால் காவிரியிலிருந்து பல கால்வாய்கள் வெட்டப்பட்டன; வடி மதகுகள் பல அமைக்கப்பட்டன. அவ்வரிய செயலால் சோழ நாடு பொன் கொழிக்கும் திருநாடாயிற்று. இவ்வாறு நாட்டை வளப்படுத்திய காரணத்தால் மன்னன் கரிகாலன் **திருமாவளவன்** எனவும், **பெருவளத்தான்** எனவும் பெயர் பெற்றான். 'சோழவளநாடு சோறுடைத்து' எனப் புலவர் பாராட்டி மகிழ்ந்தனர். ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத பகுதிகளில் பெரிய நீர்நிலைகள் அமைக்கப்பெற்றன. ஆங்காங்குக் கோவில்கள் கட்டப்பட்டன; கோட்டை கொத்தளங்கள் எழுப்பப்பட்டன.

8. பட்டினப் பாலை வரி, 283 – 284.
9. "தொழுது மன்னரே கரைசெய் பொன்னி" (கலிங்கத்துப்பரணி)

## அமைதியான வாழ்க்கை

சோணாட்டுத் தலைநகரமான பூம்புகாரில் கடற்கரையோரம் வானளாவிய மாடங்கள் விளங்கின. அவற்றுள் யவனர், சீனர், சாவகர் முதலிய பல நாட்டவரும் வாணிகத்தின் பொருட்டு வாழ்ந்தனர். தமிழ் நாட்டு வணிகரும் அயல் நாட்டு வணிகரும் மனங்கலந்து பழகினர். பௌத்தரும், சமணரும், சைவரும், வைதிகரும் சமயக் காழ்ப்பின்றி அன்போடு அளவளாவினர். இத்தகைய அமைதி நிறைந்த வாழ்க்கைக்குக் கரிகாலனது செங்கோற் சிறப்பே சீரிய காரணமாகும்.

## முறை வழங்கல்

தன்னிடம் குறையிரந்துவரும் இருதிறத்தார் கூற்றுக்களையும் நடுவு நிலையினின்று ஆராய்ந்து முறை வழங்குதல் கரிகாலனது வழக்கம். ஒரு நாள் முதியவர் இருவர் முறை வேண்டி அவனிடம் போந்தனர். அவ்விருவரும் மன்னனது இளமைத் தோற்றத்தைக் கண்டு அவனது முறை வழங்கும் திறத்தை ஐயுற்றனர். அதனைக் குறிப்பால் உணர்ந்த கரிகாலன், முதுமை வேடந்தாங்கி அரியணையில் அமர்ந்து, அவர்தம் வழக்கைக் கேட்டுத் தீர்ப்பு வழங்கினான். அவனது தீர்ப்பைக் கேட்ட முதியவர் இருவரும் மனங்களித்தனர். இச்செய்தியை,

> "உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
> நரைமுது மக்கள் உவப்ப — நரைமுடித்துச்
> சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
> கல்லாமல் பாகம் படும்" 10

எனப் பழமொழி நானூறு என்னும் நூல் பகர்கின்றது.

---

10. பழமொழி செ. 6.

## கடல் வாணிகம்

காவிரிப்பூம்பட்டினம் சங்க காலத்தில் சிறந்த துறைமுக நகரமாக விளங்கியது. கடற்கரையோரம் கலங்கரை விளக்கம் இருந்தது; இறக்குமதியாகும் பண்டங்களைத் தீர்வை வரையறுத்துக் (Custom) கொள்ளும் ஆயத்துறை (Custom House) அமைந்திருந்தது. அப்பண்டப் பொதிகட்குச் சோழனது புலி இலச்சினை பொறித்து, அவற்றை இட்டுவைக்கும் பண்டசாலைகள் (Ware Houses), கிடங்குகள் (Godowns), உயர்ந்த மேடைகள் (Docks and Piers) இருந்தன. இவற்றின் விவரங்களைச் சிலப்பதிகாரத்திலும் பட்டினப்பாலையிலும் பரக்கக் காணலாம்.

## தமிழ் வளர்ச்சி

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் கரிகாலன் ஆட்சியில் நன்கு வளர்ந்தன. உருத்திரன் கண்ணனார் என்ற புலவர் **பட்டினப்பாலை** என்னும் நூலை அவன் பொருட்டுப் பாடினார். கரிகாலன் அப்புலவருக்குப் பதினாறு இலட்சம் பொன் பரிசளித்தான். அவன்மீது பாடப்பெற்ற மற்றோர் அரிய **பாட்டு பொருநர் ஆற்றுப்படை** என்பது. அதனைப் பாடியவர் **முடத்தாமக்கண்ணியார்** என்பவர். அவ்விருபெரும் பாடல்களும் சோழ நாட்டின் வளத்தையும் கரிகாலன் சிறப்பையும் எடுத்துக் கூறுவனவாகும். அவனைப் பாடிய மற்றொரு புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் **காரிக்கண்ணனார்**. கரிகாலன் தன் நண்பனான பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியுடன் அளவளாவிக் கொண்டிருந்தபொழுது அப்புலவர் அவர்களைக் கண்டார்; இருவரையும் கீழ்வருமாறு பலபடப் பாராட்டினார்:

"நீ குளிர்ந்த நீரையுடைய காவிரிக்குத் தலைவன்; இவன் பாண்டியர் குடியில் ஏறுபோல்பவன்; நீ அறம் தங்கும் உறையூர்க்கு அரசன்; இவன் பொதியமலைச் சந்தனத்தையும் கடல் முத்தையும் உடையவன்; தமிழ் பொருந்திய மதுரையில் குளிர்ந்த செங்கோலை உடையவன். நீவிர் இருவரும் பால் போலும் நிறத்தையுடைய பலராமனும் நீல நிறம் போலும் திருமேனியையுடைய கண்ணனும் போலக் காட்சி அளிக்கின்றீர். நீவிர் ஒருவொருக்கொருவர் உதவுவீராக; நும்மைப் பிரிக்க முயலும் அயலார் சொற்களைக் கேளற்க. நுமது புகழ் நெடுங்காலம் வாழ்க! நும்மை எதிர்ப்பவர் நாடுகள் புலியும் கயலும் பொறித்த அடையாளங்களைப் பெறுவனவாக!"[11]

கரிகாலனைப் பாடிய மற்றொரு புலவர் **மருத்துவன் தாமோதரனார்** என்பவர். அவர், "கடற்கரை இடத்துக் கழியின் நீரால் விளைந்த உப்பை முகந்து கொண்டு மலைநாட்டை நோக்கிச் செல்லும் வலிமையுடைய பாரம் பொறுக்கும் பகட்டை ஒப்பாய் நீ," எனக் கூறுகிறார். இதனால், கரிகாலன் அரசியல் பொறுப்பை நன்குணர்ந்தவன் என்பதை விளக்குகின்றார். அவர் மேலும், "வெற்றி முழக்கம் செய்யும் நினது முரசினையும் குறிதப்பாதவாளினையும் உடைய நினது வெண்கொற்றக் குடையை உவாமதி ஒக்கும் என நினைத்து விறலியும் யானும் பலகாலும் தொழுதேம்," எனக் கூறுதல், கரிகாலனது செங்கோற் சிறப்பை வெள்ளிடை மலைபோல் விளக்கமுறச் செய்கிறதன்றோ?

11. புறநானூறு. செ. 58.

கரிகாலனைப் பாடிய பிறிதொரு புலவர் **கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்** என்பவர். அவர், "கரிகாலன் தேர் உடையவன்; அத்தேரில் பூட்டிய பரிகள் காற்றைப் போலக் கடிது செல்லும் கதி உடையவை; கரிகாலன் கடல் போன்ற படைகளை உடையவன்; படைவீரர் ஒளி பொருந்திய படைக்கலங்களை ஏந்தியவர்; சோழனுடைய களிறுகள் மலையொடு மாறுபட்டுப் பொரத்தகும் வன்மை உடையவை; வேந்தன் இடி முழங்குதல் போலப் பெருமுழக்கம் செய்யும் முரசம் உடையவன்; போரில் மேம்படும் வெற்றியை உடையவன்" என்று கரிகாலன் சிறப்பினைப் பலவாறு பாராட்டியுள்ளார்.

கரிகாலனுக்குப் பின்வந்த நக்கீரர், பரணர், இளங்கோவடிகள், சயங்கொண்டார், சேக்கிழார், முதலிய புலவர்பெருமக்களும் அவனைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அப்பெருமகன் புலவரை நன்கு வரவேற்று, வேண்டியன வழங்கி, அவர் பின் ஏழடி நடந்து சென்று மீளும் வழக்கமுடையவனாய் இருந்தான்.

**சமயம்**

கரிகாலன் காலத்தில் சோழப் பெருநாட்டில் பல சமயங்கள் பரவி இருந்தன. ஆயினும், அப் பல சமயத்தாரும் அவன் ஆட்சியில் மனவொற்றுமையோடு வாழ்ந்துவந்தனர். அவன் சிறந்த சைவன். அவன் காஞ்சி நகரில் உள்ள ஏகம்பவாணர் திருக்கோவிலில் திருப்பணி செய்தவன். அவனது திருத்தொண்டினைக் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் பின்வருமாறு புகழ்ந்து கூறியுள்ளார்:

"விண்ணுளார் மறைகள்வே தம்விரித் தோதுவார்
கண்ணுளார் கழலின்வெல் வார்கரி காலனை
நண்ணுவார் எழில்கொள்கச் சிநகர் ஏகம்பத்(து)
அண்ணலார் ஆடுகின் றவலங் காரமே"

**இறுதி நிலை**

கரிகாற்சோழன் நாங்கூர் வேள் மகளை மணந்து கொண்டான். அவளன்றி அவனுக்கு வேறு மனைவியரும் இருந்தனர் என்று சிலர் கூறுவர்.

அப்பெருமகன் 'குராப்பள்ளி' என்ற இடத்தில் மண்ணக வாழ்வை நீத்தான் என்பது தெரிகிறது. குராப்பள்ளி என்பது 'குரா' மரத்தைத் தலமரமாகக் கொண்ட **திருவிடைக்கழி** என்னும் சிவத் தலமாகும் என்பது அறிஞர் கருத்து [12]. அப் பேரரசன் வாழ்ந்த காலம் கி. மு. முதல் நூற்றாண்டு என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். [13]

## 3. பொருநர் ஆற்றுப்படை

**வரலாறு**

ஏர்க்களம் அல்லது போர்க்களம் சென்று பாடும் கூத்தனுக்குப் 'பொருநன்' என்பது பெயர். இப் பொருநர் ஆற்றுப் படையில் குறிக்கப்படுபவன் போர்க்களம் பாடும் பொருநன். இத்தகைய பொருநன் ஒருவன் கரிகால் வளவனிடம் சென்றான்; அவனைப் பாடிப் பரிசில் பெற்று மீண்டான்; மீண்டு வரும் வழியில் வேறொரு பொருநனைக் கண்டான். அவனைக் கரிகாலனிடம் ஆற்றுப்படுத்த விரும்பினான். இங்ஙனம் ஒரு பொருநன் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது இப்பாடல்.

12. பண்டித உலகநாத பிள்ளை, கரிகாற்சோழன், பக். 66.
13. டாக்டர் இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, பக். 25, 63.

அதனால் இது **பொருநர் ஆற்றுப்படை** எனப் பெயர் பெற்றது. இஃது இருநூற்று நாற்பத்தெட்டு அடிகளை உடையது. இப்பாடலில் கரிகாலனுடைய போர்த்திறன், நல்லியல்புகள், சோழநாட்டு வளம் முதலியன மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இப்பாடலைப் பாடியவர் **முடத்தாமக் கண்ணியார்** என்ற பைந்தமிழ்ப் பாவலர்.

பொருநன் தடாரி என்னும் பறையைக் கொட்டு பவன். அவன் மனைவி உள்ளக் கருத்து வெளியில் புலப்படும்படி விறல்பட ஆடவல்லவள். அதனால் அவளை **விறலி** என்று தமிழ் நூல்கள் கூறும். அவளது ஆட்டத்திற்கு ஏற்பப் பாட்டுப்பாடுவோரும், இசைக்கருவிகளை இசைப்போரும் எனச் சிலர் இருப்பர். அவர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு குடும்பமாகச் சென்று, தமிழ் வள்ளல்களிடம் தமது திறனைக் காட்டிப் பரிசில் பெறுவது வழக்கம்.

**பொருநர் செலவு**

பொருநன் ஒருவன் தன் சிற்றூரினின்று புறப் பட்டான். அவன் மனைவியாகிய விறலியும் சுற்றத் தினர் சிலரும் அவனைப் பின் தொடர்ந்தனர். அப் பொருநன் குடும்பம் ஒரு வள்ளலை நாடிச் சென்று கொண்டிருந்தது. அவர்கள் கொடிய வெயிலில் நடந்து சென்றனர். கூரிய பரற்கற்கள் அவர்தம் கால்களில் உறுத்தின. அதனால், மென்மைத் தன்மை வாய்ந்த விறலியின் கால்களில் கொப்புளங் கள் தோன்றின. வழியில் சிறிய அளவில் நிழலைக் கொடுத்துக்கொண்டு மராமரம் ஒன்று நின்றது. அதனைக் கண்ணுற்ற விறலி அதன் அடியில் தங்கி இளைப்பாற எண்ணினாள். அனைவரும் அம்மர நிழலில் தங்கி இளைப்பாறிக்கொண்டிருந்தனர்.

## விறலியின் தோற்றம்

பொருநன் மனைவியான விறலி பேரழகி. கருமணல் போன்ற அவளது கூந்தல் இருண்டு நெளிந்திருந்தது; அவளது நெற்றி பிறைமதி போன்றிருந்தது; புருவம் வில்லைப் போன்று வளைந்திருந்தது; அவளுடைய விழிகள் அகன்று செவ்வரி படர்ந்து குளிர்ந்த பார்வையைப் பெற்றிருந்தன; அவளது வாய் இலவம் பூவின் இதழ் போலச் சிவந்திருந்தது; வரிசையாகக் கோக்கப் பெற்ற முத்துக்களைப் போல அவளுடைய பற்கள் விளங்கின. அவள் காதுகளில் மகரக்குழைகள் தொங்கிக்கொண்டிருந்தன; அவளது கழுத்து நாண மிகுதியால் முன்புறம் வளைந்திருந்தது; பருத்துத் திரண்ட மூங்கிலைப்போல அவளுடைய தோள்கள் காணப்பட்டன; அவள் கைவிரல்கள் காந்தள் மலரை ஒத்திருந்தன. அவளுடைய நகங்கள் கிளியின் அலகுபோலச் சிவந்திருந்தன. அவளது மெல்லிய இடையைப் பல மணிகள் கோத்த மேகலை அழகு செய்தது. அவளுடைய அடிகள் ஓடிக் களைப்புற்ற நாயின் நாவைப் போன்று இருந்தது.

அப்பேரழகி சிறிது நேரம் இளைப்பாறினாள். இளைப்பாறிய பின்பு அவள் முகம் மலர்ச்சிபெற்றது. அவள் உடனே தனது யாழைக் கையில் எடுத்து, அதன் நரம்புகளை மீட்டிக்கொண்டே தெய்வ வாழ்த்துப் பாடல்களைப் பாடலானாள்.

## பரிசில் பெற்ற பாணன்

அப்பொழுது அவ்வழியே வேறொரு பாணன் தன் ஒக்கலும் மக்களும் சூழ்தர வந்தான். அவன் கரிகால் வளவனைப் பாடிப் பரிசில் பெற்று வந்து

கொண்டிருந்தான். அப்பாணன் மராமர நிழலில் தங்கியிருந்த பொருநர் குடும்பத்தைக் கவனித்தான்; அக்குடும்பத் தலைவனாகிய பொருநனைக் கரிகால் வளவனிடம் ஆற்றுப்படுத்த விழைந்தான்; அவ் விழைவால் அவனை நோக்கிக் கீழ்வருமாறு கூறலானான்:

### செய்தி கூறல்

"யாழேந்திய கூத்தர்க்குத் தலைவனே! உனது வறுமையை ஒழிக்கும் வழியைக் கூறுவேன், கவலையுடன் கேள்: பழம் இருக்கும் மரங்களைத் தேடி அலையும் பறவைகளைப்போல நான் என் குடும்பத்தாருடன் பரிசில் தரத்தக்க வள்ளல்களைத் தேடி வாடி வதங்கினேன்; கடைசியில் காவிரிநாட்டுத் தலைவனாகிய கரிகால்வளவனைக் காணவிரும்பினேன்; ஆரவாரம் மிக்க அவனது அரண்மனை வாயிலை அடைந்தேன். வாயிற்காவலரிடம் ஒன்றும் கூறாது உள் நுழைந்தேன். அரண்மனையுட் சென்றதும் பகலவனைக் கண்ட பனிபோல் எனது களைப்பு நீங்கியது. நான் எனது உடுக்கையைத் தட்டிக்கொண்டே என்னைப் பிடித்து அலைக்கழித்த வறுமையைத் தீர்க்கும்படி இனிய பாடலொன்றைப் பாடினேன்.

### கரிகாலன் காட்டிய அன்பு

யான் பாடிய நேரம் விடியற்காலம், எனது பாடல் சோழர் பெருமானைத் துயிலெழச் செய்தது. அவ்வேந்தர் பெருமான் எழுந்து வெளியில்வந்தான். அன்றலர்ந்த தாமரைமலர் போன்ற அவனது முகத்தைக் கண்டதும் எனது மனம் மகிழ்ச்சியுற்றது. அப்பெருமகன் தன் உறவினரைக் கண்டது போல உவகையோடு என்னை வரவேற்றான். அவனது

குளிர்ந்த பார்வை எனது கந்தல் ஆடைமீது பாய்ந்தது. குளிர்ந்த உள்ளம்கொண்ட அப்பெருமகன் எனக்குக் கொட்டைக் கரையிட்ட பட்டாடையை வழங்கினன். நான் அதனை உடுத்திக்கொண்டேன்; அரண்மனைப் பணிப்பெண்கள் பேரழகு வாய்ந்தவர்கள். அவர்கள் அரசனது குறிப்பை அறிந்து பொற்கிண்ணத்தில் மதுவை வார்த்து எனக்குத் தந்தனர். நான் அம்மதுவைப் பன்முறை பருகினேன். பின்பு நன்ருய் உறங்கினேன். உறங்கி எழுந்தபோது எனது களைப்பு முற்றும் தீர்ந்தது.

கரிகாலன் உழுவலன்பை என்னென்பேன்! 'வறுமையில் வாடிய பொருநன் யானேயோ?' என்ற ஐயம் எனக்கே உண்டானது. யான் சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களை எனது உடலில் பூசியிருந்தேன். எனது இடையில் பட்டாடை விளக்கமுற்றிருந்தது. என் குடும்பத்தினரும் அப் பெருமகன் அருஞ்செயலால் அகங்குளிர்ந்தனர்.

யாம் பல முறைகளில் தயாரிக்கப்பட்ட இறைச்சி வகைகளையும் பல வடிவங்களில் செய்யப்பட்ட தின்பண்டங்களையும் உண்டோம்; மனம் மகிழத் தேறலை மாந்திஞேம்; முல்லை அரும்பை ஒத்த சோற்றையும் உண்டோம். இங்ஙனம் யாம் பன்ஞட்களை அவனது நன்மனையில் கழித்தோம்; ஒருநாள் அப்பெருமானை வணங்கி, 'அரசர் பெரும, நுமது அருள் நிழலில், யாம் பல நாள் இனிதிருந்தோம்; இனி எங்கள் ஊருக்குச் செல்ல விடை தாருங்கள்', என்று வேண்டிஞேம். அவ்வளவில் அவ் வள்ளல் சினங்கொண்டவனைப்போல எம்மைப் பார்த்து, 'என்னை விட்டுப் போகின்றீரோ?' என்று வினவினன். எனினும், அருள் உள்ளம் கொண்ட

அப்பெரியோனுக்கு எம்மைத் தடுக்க மனம் இல்லை; எமது மனம் மகிழுமாறு பலவகை ஆடைகள், அணிகலன்கள், ஊர்திகள் முதலியவற்றை மனம் உவந்து வழங்கினன்; பல யானைகளைக் கன்றுகளுடன் உதவினன். யாம் அப்பெருவள்ளலை வாழ்த்தி வருகின்றோம்.

### சோணாட்டு வளம்

நண்பனே, யான் இதுகாறும் சோழப் பெருவேந்தனது வரவேற்பையும் கொடைத் திறத்தையும் தெரிவித்தேன். இனி, அப்பெரியோன் ஆட்சிபுரியும் சோணாட்டு வளத்தைக் கூறுவேன், கேட்பாயாக: காவிரியாற்று நீரால் சோழநாடு வளத்திற் சிறந்துள்ளது. அந்நாட்டில உள்ள திட்டுகள்மீதெல்லாம் நெற்கூடுகள் காட்சி அளிக்கும். மக்கள் தென்னந்தோப்புக்களின் நடுவில் இல்லங்களை அமைத்துக் கொண்டு இனிது உறைவார்கள். கடற்கரையில் அமைந்துள்ள மணற்குன்றுகளில் உழத்தியர் வண்டல் இழைத்து விளையாடுவர். ஆண் மயில்கள் பாகற் பழத்தையும் பலாப் பழத்தையும் உணவாகக் கொள்ளும்; கொண்டு, காஞ்சி மரத்திலும் மருத மரத்திலும் தங்கி, தத்தம் பெடை அழைத்தவுடன் பறந்து செல்லும். அப்பறவைகள் வண்டின் ஓசையைக் கேட்டவுடன் அவ்வோசைக்கு ஏற்ப மணலில் நின்று ஆடும்.

சோழநாடு மருதவளம் நிறைந்தது. அங்குக் கன்னலும் நெல்லும் கழனிதோறும் காட்சி தரும். அங்குப் பகன்றை, ஞாழல் முதலிய மரங்கள் மிகுதியாக இருக்கும். முல்லை நிலத்தில் கொன்றை முல்லை காயா முதலியன தழைத்து வளரும். மருதநில மக்கள் தமது நில வாழ்க்கையில் வெறுப்புக் கொள்

னின், முல்லை நிலத்துச் சென்று முறுவலித்துத் தங்குவர். அங்ஙனமே, முல்லைநில மக்கள் மருதநிலத்துச் சென்று மகிழ்ந்து வாழ்வர்.

சோழநாட்டுக் கடற்கரை ஊர்கள் வளம் மிக்கவை. அங்கு வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்த தென்னை மரங்களும், வாழை மரங்களும், மலர்ந்த பூக்களைக்கொண்ட சுரபுன்னை மரங்களும், விழிகட்கு விருந்தளிப்பனவாகும். அங்கு வாழும் மக்கள் அந்நில வாழ்க்கையில் வெறுப்படையின், குறிஞ்சி நிலத்திற் சென்று தங்குவர். குறிஞ்சி நிலமக்கள் தேனையும், கிழங்கு வகைகளையும் விற்றுத் தங்கட்கு வேண்டும் பொருள்களைப் பெற்றுக்கொள்வர். அந்நிலத்து மந்திகள் உப்பங்கழியில் மூழ்கி விளையாடும். உப்பங்கழியிலிருந்து பறந்து செல்லும் நாரைகள் மலைகள் மீது தங்கும். மருத நிலத்துக் கோழிகள் குறிஞ்சி நிலத்துத் தினையைத் தின்னும். இங்ஙனம் சோழ நாட்டில் நால்வகை நிலங்களும் ஒன்றோடொன்று மயங்கி விளங்கும்.

கதிரவன் கொடுமை நிறைந்த கோடைக் காலத்திலும் காவிரிநீர் தவறாது பாய்ந்துகொண்டிருக்கும். அந்நீர் அகிலையும் சந்தன மரத்தையும் பிறவற்றையும் நீராடும் துறைகளில் தள்ளும்; குளங்களிலும் பிற நீர்நிலைகளிலும் புகும். சோணாட்டு மகளிரும் மைந்தரும் மட்டற்ற மகிழ்ச்சியோடு காவிரியில் நீராடுவர். உழவர் நெற்கதிர்களை அறுத்துப் போர்களாக அடுக்குவர். ஒவ்வொரு போரும் மலைபோலக் காட்சியளிக்கும். உழவர் கடாவிட்டுப் போரினை உழக்கி நெல்மணிகளைத் திரட்டிக் குதிர்களை நிரப்புவர். சோழ வளநாட்டில் சோற்றுக்குக் குறைஇல்லை.

### சோழவேந்தன் சிறப்பு

நண்பனே, காவிரி பாயப்பெற்ற வளமிகுந்த சோழ நாட்டிற்குக் கரிகாலனே தலைவன். அப்பெருந்தகை சீற்றத்தில் முருகப்பெருமானை ஒப்பவன். அவ்வள்ளல் இளமை முதலே வலிமை மிக்கவன். அவ்வரசன் ஆத்திமாலையை அணிபவன். அப்பெருவீரன் சேரனையும் பாண்டியனையும் 'வெண்ணி' என்னும் போர்க்களத்தில் வெற்றி கண்டவன்.

### ஆற்றுப்படுத்தல்

நண்ப, நீ செய்த நல்வினைப் பயனுற்றான் என்னை இவ்வழியிற் கண்டாய், உனது வறுமை நீங்க வேண்டுமாயின், கரிகால் வளவனை நோக்கி விரைந்து செல். நீ நன்மை அடைவாய்.

## 4. பட்டினப் பாலை

### வரலாறு

**பட்டினம்** என்பது காவிரிப்பூம் பட்டினத்தைக் குறிக்கும். **பாலை** என்பது பிரிதலும் பிரிதல் நிமித்தமும் ஆகும். வேற்று நாட்டுக்குச் செல்லத் தொடங்கிய தலைவன் ஒருவன், தனது நெஞ்சை நோக்கி, "குறைவற்ற சிறப்பினையுடைய காவிரிப்பூம்பட்டினத்தைப் பெறுவதாயிருப்பினும், என் தலைவியைப் பிரிந்து வாரேன்" என்று தனது செலவை நிறுத்திக்கொண்டான். இப்பாடல் இந்த முறையில் அமைந்துள்ளது. இப்பாட்டில் முதலில் சோழ நாட்டின் பெருமையும், பின்பு காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பும், அதன் பின்னர்க் கரிகாற் பெருவளத்தானுடைய வீரச்செயல்களும், உறையூரை அவன்

வளப்படுத்தினமையும் கூறப்பட்டுள்ளன. இப்பாடல் முந்நூற்றொரு அடிகளை உடையது. இதனைப் பாடியவர் கடியலூர் **உருத்திரன் கண்ணனார்** என்பவர். இப்பாடலைக் கேட்டு மகிழ்ந்த கரிகாலன் உருத்திரன் கண்ணனாருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசாக அளித்தனன் என்பது வரலாறு.

## சோழநாட்டு வளம்

காவிரிப் பேரியாறு மேற்கு மலையில் தோன்றிக் கிழக்கு நோக்கிப் பாய்வது. வெள்ளி என்னும் விண்மீன் தனக்குரிய வடதிசையில் நில்லாது தென்திசையில் சேரினும், வானம் பொய்ப்பினும் காவிரியில் நீர் வற்றாது. இச்சிறப்புடைய காவிரி சோழ நாட்டிற் பாய்வதால் சோழ நாடு வளமுடையதாக இருக்கின்றது. காவிரி பாயப்பெற்ற மருத நிலத்தில் ஊர்கள் நெருக்கமாக இருக்கும். மிக்க விளைச்சலைத் தரும் நெல் விளையும் வயல்கள் மிகுதியாக இருக்கும். வயல்களில் கரும்பும் மிகுதியாகப் பயிராகும். கருப்பஞ்சாறு காய்ச்சுவதால் உண்டாகும் இனிய புகை படுவதால் வயல்களில் பூத்துள்ள நெய்தற் பூக்கள் வாடும். எருமைக் கன்றுகள் செந்நெற் கதிர்களை உண்டு நெற்குதிர்களின் நிழலில் உறங்கும். செழுமை வாய்ந்த பகுதிகளில் தெங்கும், வாழையும், கமுகும் குலைகளைத் தள்ளும். மனைகளின் முற்றத்தில் நெல் காய்ந்துகொண்டிருக்கும். அதனைக் கோழிகளும் குருவிகளும் தின்னாதவாறு சிறுமியர் பார்த்துக் கொள்வர்; நெல்லைத் தின்னும் பறவைகளைத் தமது மகரக் குழைகளை எறிந்து ஓட்டுவர். சிறுவர் கால்களில் தண்டையணிந்து நடப்பர். அவர்கள் உருளைகளையுடைய சிறு தேர்களை வீட்டு முற்றங்களில் உருட்டி விளையாடுவர். முன்பு பறவைகளை ஓட்டப்

பெண்கள் எறிந்த மகரக் குழைகள் அத்தேர் உருளை களின் போக்கைத் தடைசெய்யும்.

சோழ நாட்டில் தோப்புகள் மிகுதியாக இருக் கும். அவற்றை அடுத்துப் பூஞ்சோலைகள் காட்சி யளிக்கும். அப்பூஞ்சோலைகளில் பொய்கைகள் அமைந்திருக்கும். அப்பொய்கைகளில் மணம் நிறைந்த பன்னிற மலர்கள் மலர்ந்து கண்ணுக்கினிய காட்சியை நல்கும். சோழ நாட்டுக் கடற் கரையில் உப்பை விளைக்கும் உமணர் பல ஊர்களிலும் சென்று உப்பை விற்பர்; விற்ற விலைக்கு மாறாக நெல்லைப் பெறுவர்; அந்நெல்லைப் படகுகளில் உய்த்துக்கொண்டு தத்தம் ஊர்களுக்குச் செல்வர்.

**காவிரிப்பூம்பட்டினம்**

இங்ஙனம் பல வளங்களும் செறிந்து விளங்கும் சோழ நாட்டிற்குக் காவிரிப்பூம்பட்டினம் தலைநகர மாகும். அக்கோநகரின் மதில் திண்மை வாய்ந்தது. அம்மதில் புலி அடையாளம் தீட்டப்பெற்ற திண்ணிய கதவுகளை உடையது. அப்பெரு நகரில் உணவுச் சாலைகள் பல உண்டு. அவற்றில் வடிக்கப் படும் கஞ்சி ஆற்று வெள்ளமோ என்று கருதத் தகும் முறையில் பெருக்கெடுத்து ஓடும். அக்கஞ்சி யைப் பருகச் செல்லும் எருதுகள் தம்முள் போரிடும். அங்ஙனம் அவை போரிடலால் அக்கஞ்சி மண் கலந்து சேறாய்விடும். அச்சேறு உலர்ந்த பின்பு அதன்மீது தேர்கள் ஓடுதலால் புழுதியாகி மேலே கிளம்பும்; கிளம்பி, பலவகை ஓவியங்கள் தீட்டப் பெற்ற கட்டடங்கள்மீது படிந்து அவற்றை மாசுறச் செய்யும். நகரத்தில் பலவகைக் கோவில்கள் உண்டு; அமணப் பள்ளிகளும் உண்டு. சடைமுடி அணிந்த முனிவர் சிலர் மரச்சோலையில் தங்கியிருப்பர். அம்

முனிவர் தீயை வளர்த்து அதனில் நெய் பெய்து ஓமம் செய்வர். இளமரச் சோலையில் உள்ள குயில்கள் ஓமப்புகையைக் கண்டு முகில்கள் என மருண்டு காளிகோயிலில் உள்ள புறாக்களோடு சேர்ந்து பழைய மரப் பொந்துகளில் தங்கும்.

## பரதவர் செயல்கள்

காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் வாழும் பரதவர் இறால் மீன் இறைச்சியையும் ஆமையின் இறைச்சியையும் சமைத்து உண்பர்: அடம்பின் பூவையும், ஆம்பல் மலரையும் தலையிற் சூடுவர்; ஆடவர் ஆட்டுக் கிடாய்களையும் கௌதாரிகளையும் போரிடச் செய்து வேடிக்கை பார்ப்பர்; பின்பு போர்க் கருவிகளைத் தாங்கிப் பொய்ப்போர் புரிவர்; மற்போரும் செய்வர்; கவண்கல் வீசி விளையாடுவர். கவண் கற்களுக்கு அஞ்சிக் குட்டிகளை ஈன்ற பன்றிகளும், குஞ்சுகளைப் பெற்ற கோழிகளும் திசை தடுமாறி ஓடும்.

பரதவர் தம் மகளிரோடு மணல் முற்றத்திற் கூடுவர்; அவ்விடத்தில் சுறவின் கொம்பை நடுவர்; அதன்மீது வெண்டாளிப் பூமாலையையும், தாழம் பூவையும் சூடுவர்; பின்பு அதனிடம் ஏறப் பெற்ற தெய்வத்தை வழிபடுவர்; வழிபட்ட பின் பனையிலிருந்து இறக்கப்பெற்ற கள்ளையும், அரிசியிலிருந்து இறுக்கப்பெற்ற கள்ளையும் பருகி விளையாடுவர். பின்னர் அப்பரதவர் காவிரி கடலொடு கலக்குமிடத்தில் நீராடுவர்; கடல் நீரினது உப்பு நீங்கும் பொருட்டு ஆற்று நன்னீரில் மூழ்குவர்; அங்ஙனம் ஆற்று நீரில் நீராடும்பொழுது நண்டுகளைப் பிடித்தாட்டுவர்; நீர் அலைகளைக் காலால்

மிதிப்பர்; பஞ்சாய்க்கோரைகளால் பாவைகளைச் செய்து விளையாடுவர். இரவில் மீன் படகிலுள்ள பரதவர் கரையோர மாடங்களில் இட்ட விளக்குகளை எண்ணுவர். கரையிலுள்ள பரதவர், பாடலைக் கேட்டும் நாடகம் கண்டும் இன்புற்றுக் காவிரி மணல் மேட்டில் உறங்குவர்.

**பண்டசாலை**

கடற்கரை ஓரமாக உள்ள அகன்ற தெருவில் காவலைக் கொண்ட பண்டசாலை ஒன்று உண்டு. ஏற்றுமதிக்குரிய உள்நாட்டுப் பண்டங்கள் சுங்கம் மதிப்பிடப்பெற்றும் புலி முத்திரையிடப் பெற்றும் பண்டசாலை முற்றத்தில் ஒரு பக்கம் அடுக்கப் பட்டிருக்கும். கப்பல்களிலிருந்து இறக்கப் பட்ட பண்டங்கள் சோழனது புலி இலச்சினை பெற்றுச் சுங்கம் மதிப்பிடப் பெறுதற்குப் பண்டசாலை முற்றத்தில் மற்றொரு பக்கம் குவிந்து கிடக்கும். நாய்களும், ஆட்டுக்கிடாய்களும் அப்பண்டப் பொதி கள்மீது ஏறி விளையாடும். சுங்கம் கொள்ளும் அரசாங்க அலுவலர் ஒவ்வொரு நாளும் ஓய்வின்றிச் சுங்கம் கொள்வர்.

**மகளிர் செயல்கள்**

காவிரிப்பூம் பட்டினத்தில் வானளாவிய மாளிகைகள் பல உண்டு. உயர்ந்த மாடங்களில் வாழும் பெண்கள் தென்றற் காற்று வீசும் சாளரங் களின் எதிரே நின்று கடைத்தெருவை நோக்குவர். அப்பொழுது கடைத்தெருவில் உள்ள கோவில்களில் சிலர் பாடுவர்; சிலர் யாழ் மீட்டுவர்; சிலர் முழவு கொட்டுவர்; சிலர் புல்லாங்குழல் ஊதுவர். அவ்வம யம் முருகக் கடவுள் முதலிய தெய்வங்களுக்குப் பூசை

யும் விழாவும் நடைபெறும். மாடமகளிர் தம் கைகளைக் குவித்து அத்தெய்வங்களுக்கு வணக்கம் செலுத்துவர்.

### பலவகைக் கொடிகள்

ஒவ்வொரு கோவிலிலும் அக்கோவில் தெய்வத்துக்காகக் கட்டப்பட்ட கொடி அசைந்தாடிக்கொண்டிருக்கும். விலைப்பண்டங்களை அறிவிப்பதற்குக் கட்டப்பெற்ற கொடிகள் கடைதோறும் காட்சி அளிக்கும். சமயவாதிகள் பிற சமயவாதிகளை வாதுக்கழைக்கும் அடையாளமாகக் கட்டிவைக்கும் கொடிகள் ஒருபால் அசைந்தாடும். துறைமுகத்தில் தங்கியுள்ள கப்பல்களில் கட்டப்பெற்ற பல நாட்டவர் கொடிகளும் காற்றில் அசைந்தாடும். நகரத் தெருக்களில் பல வகைக் கொடிகள் கட்டப்பட்டிருத்தலால் ஞாயிற்றின் வெப்பம் தெருக்களில் மிகுதியாக இல்லை என்னலாம்.

### பலநாட்டுப் பண்டங்கள்

காவிரிப்பூம் பட்டினத்துக் கடைத்தெருவில் பல நாட்டுப் பண்டங்களும் நிறைந்திருக்கும். கடல் வழியே வந்த குதிரைகளும், மலைநாட்டிலிருந்து வந்த மிளகுப் பொதிகளும், வடமலையில் பிறந்த மணியும் பொன்னும், குடகு மலையில் பிறந்த சந்தனமும் அகிலும், தென்கடல் முத்தும், கீழ்க்கடல் பவழமும், கங்கைச் சமவெளிப் பொருள்களும், காவிரிச் சமவெளிப் பொருள்களும், ஈழ நாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், காழக (பர்மா) நாட்டுப் பொருள்களும் வேறு அரிய பெரிய பொருள்களும் கடைத் தெருவில் மிகுதியாகக் குவிந்து கிடக்கும்.

## வணிகர் ஒழுக்கம்

பூம்புகார் நகரத்தில் வணிகர் வாழும் தெருக்கள் பல உண்டு. வணிகர்கள் அருள் உள்ளம் படைத்தவர்கள்; அவர்கள் பரதவர் மனைகளின் முன்னே மீன்கள் அச்சமற்றுத் திரியும்படி பரதவர்க்கு அற முரைப்பர்; ஊன் விற்பவர் குடிசைகளில் ஆடு முதலிய விலங்குகள் அச்சமற்றுத் திரியும்படி ஊன் விற்பவர்க்கு அருளுரை கூறுவர்; கள்வர்க்கு அருளுரை கூறி அவர் தம் களவுத் தன்மையைப் போக்குவர்; தெய்வங்களுக்குப் பூசனையிட்டு வழிபடுவர்; பசுக்களையும் எருதுகளையும் பாதுகாப்பர்; எளியவர்க்கு வேண்டுவன வழங்குவர்; நுகத்தடியிலுள்ள பகலாணியைப் போல நடுவு நிலைமையோடு கூடியிருந்து, தாம் வாங்கிய விலையையும் தமக்கு வரும் ஊதியத்தையும் உள்ளவாறு கூறி வாணிகம் செய்வர்; தம் பொருளையும் பிறர் பொருளையும் ஒப்ப நினைப்பர். அப்பெருமக்கள் பண்டத்தின் மதிப்பிற்கு மேலாகப் பொருளைக் கொள்ளார்; தாம் பெற்றுக் கொள்ளும் பொருளுக்குக் குறையப் பண்டங்களைக் கொடார்.

பூம்புகாரில் வாணிகத்தின் பொருட்டுத் தங்கியுள்ள அயல் நாட்டார் பலர். அவர்கள் பேசும் மொழிகள் பல. ஆயினும் அவர் அனைவரும் தமிழருடன் கலந்து இனிதே வாழ்கின்றனர். இத்தகைய பல நலங்களையும் பெற்றுள்ள காவிரிப்பூம் பட்டினத்தையே பெறுவதாயினும், நெஞ்சமே, என் தலைவி இங்குத் தனியே இருக்க, அவளை விட்டு நான் வாரேன். அதற்குக் காரணம் கூறுவேன், கேட்பாயாக:

## கரிகாலன் பெருமிதம்

சோணாட்டை ஆளும் கரிகாலன், கூட்டில் அடைபட்டுக் கிடக்கும் சிங்கம் போலப் பகைவரது சிறையில் இருந்தான்; பின்னர் யானை தன்னை அகப் படுத்திய குழியிலிருந்து வெளிப்பட்டது போலச் சிறையினின்றும் வெளிப் போந்தான்; தன் பகை வர்களை வென்று தனக்குரிய அரசுரிமையைப் பெற் றான். கரிகாலன் அவ்வளவோடு நில்லாமல், மேலும் வெற்றி பெற விருப்புக்கொண்டான்; வலிமை மிகுந்த தன் படைகளுடன் சென்று பல நாட்டு மன்னர் களை வென்றான். அவனால் தாக்கப்பட்ட நாடுகள் பல. ஒவ்வொரு நாட்டிலும் வயல்கள் பாழாகின; பொய்கைகள் நீரற்றுக் கிடந்தன. மகளிர் விளக்கை ஏற்றப் பலரும் தொழும் இயல்புள்ள கந்துகளை உடைய பொது இடங்களில் காட்டு யானைகள் தங்க லாயின; மன்றங்களிற் பேய்கள் ஆடலாயின; கிளி கள் இருந்து கொஞ்சிக்கொண்டிருந்த வீட்டுக் குதிர் களில் கோட்டான்கள் தங்கிக் குழறலாயின.

'இவன் மலையைத் தகர்ப்பன்: கடலைத் தூர்ப் பன்; வானத்தைக் கிழிப்பன்; காற்றை மாற்று வன்' என்று பகைவர்கள் அஞ்சி நடுங்குமாறு கரி காலன் பெருவெற்றி கொண்டவன். அப்பெருமகன் ஒளிநாகர், அருவாளர், வடவர், குடவர், பாண்டியன், பொதுவர், இருங்கோவேள் முதலியோரை வென்ற வன்; காடு கெடுத்து நாடாக்கியவன்; குளம் தொட்டு வளம் பெருக்கியவன்; உறையூரை விரிவுற அமைத் துக் கோவில்களையும் பழங்குடிகளையும் முன்போல நிலை நிறுத்தியவன்; உறையூர்க் கோட்டையின் பெரிய வாயில்களையும் சிறிய வாயில்களையும் அமைத் தவன்; வேற்று வேந்தர் வணங்கும் வீரக் கழலை

அணிந்த காலினன்; அரியேறன்ன ஆண்மையுடையவன்; அப்பெரு வீரன் பகைவரைக் கொல்ல ஓங்கிய வேலைக் காட்டிலும், என் தலைவியைப்பிரிந்து செல்லும் பாலைநிலம் வெம்மையுடையது. என் தலைவியின் தோள்கள் கரிகாற் பெருவளத்தானது செங்கோலை விடக் குளிர்ச்சியுடையவை.

# III. பாண்டியன் நெடுஞ்செழியன்

## 1 போர்ச் செயல்கள்

### பாண்டி வேந்தர்

தமிழகத்தைப் பல நூற்றாண்டுகளாக ஆண்டு வந்த சேர சோழ பாண்டியருள் சங்கம் நிறுவித் தமிழாராய்ந்த பெருமை பாண்டியர்க்கே உரியது. தமிழ்நாடெங்கும் இருந்த புலவர்கள் தத்தம் பாடல்களையும் நூல்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்குக் கொண்டுசென்று, பாடிப் பொருள்விரித்து அரங்கேற்றம் செய்தல் அக்கால மரபு. அச்சங்கத்தில் எண்ணிறந்த புலவர்கள் வீற்றிருந்தார்கள். அதனைப் புரந்துவந்த பாண்டி வேந்தருள் பலரும் புலமைத் திறமுடையராய்ச் சங்க நிகழ்ச்சிகளில் பங்குகொண்டிருந்தனர். பாண்டியர் தலைநகரம் முதலில் **தென்மதுரையில்** இருந்தது என்றும் அது கடல்கோளுக்கு இரையான பின்னர்க் **கபாடபுரம்** என்பது பாண்டியர் தலைநகரமாக விளங்கித் தமிழை வளர்த்தது என்றும், அதுவும் கடல்கோளால் அழிந்த பின்பு இன்றைய **மதுரையில்** மூன்றாம் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது என்றும் வரலாறு கூறுகின்றது.

பாடல் சான்ற மாடமதுரையில் இருந்த தமிழ்ச் சங்கத்தில் நக்கீரர், கபிலர், பரணர், மாங்குடி மருதனார் போன்ற நாவீறு மிக்க பெரும்புலவர் நாற்பத்தொன்பதின்மர் வீற்றிருந்தனர். அவர்களைப் போற்றிப் புரந்த பாண்டியர் பலராவர். அவருள் தலைசிறந்தவன் தலையாலங்கானத்துச் செருவென்ற **பாண்டியன்** நெடுஞ்செழியன் என்பவன்.

## இளமையும் அரசும்

நெடுஞ்செழியன் இளமைப் பருவத்திலேயே அரசுகட்டில் ஏறினன். அவன் அக்கால முறைப் படி அரசமரபுக்குரிய படைக்கலப் பயிற்சியிலும் அரசியற் கலையறிவிலும் தமிழறிவிலும் நன்கு பயிற் றப்பட்டான். அப்பெருமகன் கவிபாடும் ஆற்றலும் பெற்றிருந்தான்; தன்னை நாடிவந்த புலவர், பாணர், கூத்தர் என்னும் முத்தமிழ் வாணரையும் மதித்து அவரவர் வரிசை அறிந்து பரிசில் நல்கினன். அவ்வள்ளற்றன்மையால் அவனது பெயர் தமிழ் நாடெங்கணும் பரவியது.

## சேர வேந்தன்

அக்காலத்தில் சேரநாட்டின் ஒரு பகுதியை **யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை** என்பவன் ஆண்டுவந்தான். அவன் செங்கோல் வேந்தன்; யானையினது பார்வையைப் போன்ற பார்வையை உடையவன்; கொங்குநாட்டுக் கொல்லி மலைப் பகுதிக்குத் தலைவன். அப்பெருமகன் கபிலர்க்கு நண்பன். அவன் குறுங்கோழியூர் கிழார், பொருந்தில் இளங்கீரனர், கூடலூர் கிழார் என் னும் புலவர் பெருமக்களால் பாராட்டப்பெற்ற வன்; இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற சோழ வேந்தனேடு அஞ்சாது போர் செய் தவன். சுருக்கக் கூறின், அவன் ஆட்சி முறையி லும், போர்த்திறத்திலும், புலவரை ஆதரிப்பதிலும் தலைசிறந்தவன் என்று கூறலாம்.

## சேர சோழர் அழுக்காறு

பாண்டியன் நெடுஞ்செழியனது பாவன்மையும் பாவலரைப் பாராட்டும் பான்மையும் நாடெங்கும்

பரவின. அவனது பெருமை தத்தம் நாட்டு மக்களாலும் பாராட்டப் படுதலைக் கண்ட சேரனும் சோழனும் அவன்மீது அழுக்காறு கொண்டனர். அழுக்காறு என்பது பொறாமை. அது மக்கள் மனத்தில் எழும் ஒரு தீய எண்ணம். அஃது அறியாமையால் உண்டாவதன்றி வேறன்று. கற்றோராயினும் கல்லாராயினும், செல்வராயினும் வறியராயினும் அழுக்காறு கொள்ளாதார் மிகச் சிலரே ஆவர். பிறரது ஆக்கம் கண்டு அவர்பால் அழுக்காறு கொள்பவர் பலர்; தம்மினும் மேம்பட்டவராய் விளங்கும் கல்வியாளரைப் பார்த்து அழுக்காறு கொள்பவர் பலர்; தம்மினும் சிறந்த வீரரைப் பார்த்துப் பொறாமைப் படுபவர் பலர். வள்ளுவனாரும்,

> "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
> தீயுழி யுய்த்து விடும்."

எனக் கடிந்துரைத்தனர். இதற்கு அடிமைப் பட்டோர் அழிவர் என்பது வரலாறும் இலக்கியமும் கண்ட உண்மையாகும்.

## பாண்டியன் பேச்சு

மாந்தரஞ்சேரல் பொறாமையால் உந்தப்பட்டவனோ, அன்றி இளைஞனை பாண்டியனை எளிதில் வென்று அவனது நாட்டைக் கவரலாம் என்று எண்ணினனோ தெரியவில்லை. அவன் திடீரென்று பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான். சேர நாட்டு வேந்தன் பாண்டியநாடு நோக்கிப் படையோடு வருகிறான் என்பதைக் கேள்வியுற்ற நெடுஞ்செழியன் உடல் குலுங்க நகைத்தான்; நகைத்தவன் தன் மந்திரிகளையும் தந்திரிகளையும் நோக்கி, "தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன்

வினையறுப்பான்' என்னும் முதுமொழியை இச் சேரவேந்தன் அறியான் போலும்! இவன் கொண்ட தீய எண்ணமே இவனை அழிக்கப்போகின்றது. தானைத் தலைவர்களே, நம் படைகளுடன் சென்று எல்லைப் புறங்களைக் காமின்,'' என்று கூறிப் போருக்குப் புறப்பட்டான்.

### சேரன்-பாண்டியன் போர்

சேர மன்னன் படை பாண்டிய நாட்டு எல்லைப் புறத்தை அணுகியது. முன்னரே ஆண்டு அணி வகுத்து நின்ற பாண்டியர் படை பகைவர் படையை எதிர்த்தது. இருதிறப் படைகளும் கலந்தன. கரிகள் கரிகளைத் தாக்கின; பரிகள் பரிகள்மேற் பாய்ந்தன; வீரரும் வீரரும் மலைந்தனர்; வாள்களும் வாள்களும் எதிர்ந்தன. போர் கடுமையாக நடைபெற்றது. அவ்வமயம் பாண்டியன் தனது பட்டத்து யானைமீது இவர்ந்து போர்முகம் புகுந்தான். மன்னன் வரக் கண்ட மாவீரர் மனவெழுச்சியோடு கடும் போர் உடற்றினர். சேரன் படை சிதறியது. வீரர் தலைகள் உருண்டன; கைகளும் கால்களும் துண்டிக்கப்பட்டன; யானைப்படை சிதறுண்டது; குதிரைப் படை வரவர அளவில் குறைந்தது; குருதியாறு பெருக்கெடுத்தது. பாண்டியன் வாளேந்திப் போர் புரிந்தான். சேர வீரர் புறங்காட்டி ஓடலாயினர். அக்காட்சியைக் கண்ட சேரன் மனம் நொந்தான்; தன் யானையை முன்னே செலுத்தி வந்து பாண்டியனை எதிர்த்தான். அஞ்சா நெஞ்சம் படைத்த பாண்டியன் சேரமானது அறியாமைக்குப் பெரிதும் இரங்கினான்; அவனோடு கடுமையாகப் போர் புரியாமல் சிறிது நேரம் விளையாட்டுப் போர் புரிந்தான்; இறுதியில் அவனைக் கையகப்படுத்திச் சிறையிட்டான்.

போர் முடிந்தது. பாண்டியன் சேரமானை உற்றுநோக்கினன். பாண்டியன் ஆண்டில் இளைஞனயினும் அறிவில் முதிர்ந்தவன்; பெருந்தன்மை மிக்கவன். ஆதலின் அப்பெருந்தகையாளன் அவனுக்கு அறிவுரை கூறிக் கட்டவிழ்த்துவிட்டு அவனை முன்போலவே அரசனக இருக்கச் செய்ய விழைந்தான். ஆயின், அதற்குள் சேரமான் எவ்வாறே தன்னை விடுவித்துக்கொண்டு தனது நாடு மீண்டான். அவனது மீட்சியைப் பாராட்டிக் குறுங்கோழியூர் கிழார் என்ற புலவர் ஒரு செய்யுளைப் பாடினர்.

### "கூற்றம்" கொண்ட கோமான்

மழலைக் கூற்றம் என்பது சோழ நாட்டின் ஒரு பகுதியாகும். வளம் மிகுந்த அப்பகுதியை **எவ்வி** என்பான் ஆண்டு வந்தான். அவன் சிறந்த கொடையாளிகளுள் ஒருவன். அவன் எக்காரணத்தாலோ நெடுஞ்செழியனின் கடுஞ்சீற்றத்துக்கு ஆளானன். அவ்வாறே முத்தூர்க் கூற்றத்தை ஆண்ட குறுநில மன்னனும் பாண்டியன் வெறுப்புக்கு ஆளானன். பாண்டியர் பெருமான் அக்குறுநில மன்னர் இருவரையும் வென்று, அவர் நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டான். அவ்விரண்டு கூற்றங்களின் இயற்கை வளத்தையும் பாண்டியன் பெற்ற வெற்றியையும் பாராட்டிய **மாங்குடி கிழார்** என்ற சங்ககாலப் புலவர் அப்பெருமகனை நோக்கி; "நினது நாளாகிய மீன் நின்று நிலைப்பதாக! நின் பகைவருடைய நாளாகிய மீன் நில்லாது பட்டுப் போவதாக! சிறந்த வாளாண்மையுடையோர் நினது தாளாண்மையை வாழ்த்துகின்றனர்; இரக்கும்பரிசிலர் நினது புரக்கும் தன்மையைப் புகழ்கின்றனர்; ஒளி பொருந்

திய வளையல்களை அணிந்த மகளிர் பொற்கலத்தில் தரும் மணமுள்ள மதுவைப் பருகி இனிது ஒழுகுவா யாக! உன்போலும் வாழ வல்லவரே வாழ்ந்தோர் ஆவர்; வல்லாதார் வாழாதோரே," என்று நல்லுரை கூறி மகிழ்ந்தார். [1]

## இருபெரு வேந்தர்

பாண்டியனது புகழைக் கேட்டு ஆற்றாராய், முன்பே பொறாமை கொண்டிருந்த சேர சோழர், பாண்டியனிடம் சேரமான் தோல்வியுற்றது கேட்டு மிக்க பொறாமை கொண்டனர். தன்னிடம் தோற்ற வனைப் பாண்டியன் பெருந்தன்மையுடன் நாடாள விடவிரும்பிய செய்தியை அறிந்த சேரநாட்டு மக்களும் சோழநாட்டு மக்களும் பாண்டியன் பெருந் தன்மையைப் பலபடப் பாராட்டினர். இங்ஙனம் தம் குடி மக்கள் பாண்டியர் பெருமானைப் பாராட்டுவதை அறிந்த சேரனும் சோழனும் வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போன்ற பெருந்துன்பத்தை அடைந்தனர். பொறாமை முன்னிலும் பன்மடங்கு விஞ்சியது. ஆயின் என்? இருவரும் தனித்தனியே அவனை எதிர்க்க அஞ்சினர்; இறுதியில் தாம் இரு வரும் ஒருசேரப் பாண்டியனை எதிர்ப்பதெனை முடிவு செய்தனர். அவர்கட்கு உதவியாகத் **திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன்** என்னும் ஐம்பெரு வேளிரும் வந்தனர். இங்ஙனம் இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிரும் ஆகிய எழுவரும் பாண்டியன் ஒருவனோடு போரெ திரத் துணிந்தனர்; அவனை வென்று பாண்டிய நாட்டைப் பங்கிடவும் விரும்பினர்.

---

1. புறநானூறு செ-24

**பாண்டியன் சூளுரை**

இருபெரு வேந்தரும் ஐம்பெரு வேளிரும் தத்தம் படைகளுடன் தன்மீது போருக்கு வருவதை ஒற்றர் வாயிலாகப் பாண்டியன் அறிந்தான். அவன் ஒருபால் சீற்றமும் ஒருபால் வருத்தமும் கொண்டான்; அவர்கள் தன்னை இளைஞனென்றும் படைவலியற்றவன் என்றும் இழித்துரைத்தனர் என்பதையும் ஒற்றர் கூறக் கேட்டான். அவன் விழிகள் சீற்றத்தால் சிவந்தன. அரசவையில் அரியணை மீதிருந்த பாண்டியர் பெருமான் சினந்தெழுந்து, "என்ன வியப்பு! சேரனும் சோழனும் ஐம்பெரு வேளிரும் என்மீது போருக்கு வருகின்றனராம். இப்பெருமக்கள் என்னுடைய வாள்வலியும் தோள் வலியும் ஆள்வலியும் நன்கு அறிந்திருந்தும், ஏதும் அறியாதார் போன்று போர் செய்ய வருதல் நகைப்புக்கு இடமாகவன்றோ இருக்கிறது! இவர்கள் என் மீது கொண்ட பொறாமை காரணமாக இங்ஙனம் போருக்கு வருகின்றனர் என்பது வெள்ளிடைமலை. என்னைச் சிறியவனென்றும், சிறிய படையை உடையவனென்றும், தாங்கள் வலிமை மிகுந்த படையை உடையவர்களென்றும் , கூறிக்கொண்டமை வியப்புக்குரியதே! இவ்வெழுவரும் என்னை எளிதில் வென்றுவிடலாம் என்று கருதுகின்றனர் போலும்! இவர்கள் என்னைத் தாக்குவது, தூங்குகின்ற புலியைக் காலால் உதைக்கும் அறிவற்றவன் செயலை ஒக்கும். யான் இவ்வெழுவரின் அகந்தையை அடக்குவேன். இவர்களை யான் வெற்றி கொள்ளாவிடில் என் குடிமக்கள் நிற்க நிழல் காணாது கலங்கிக் கண்ணீர்விட்டுப் புலம்பி, 'எம்மரசன் மிகவும் கொடியவன்; அவனது ஆட்சிக் கொடுமையானது' என்று இகழ்வாராக. ஓங்கு புகழ் தாங்கிய

**மாங்குடி மருதனார்** முதலிய புலவர் பெருமக்கள் எனது நாட்டைப் பாடாது ஒழிவாராக. வறியவர்க்கு உதவி செய்ய முடியாத வறுமையை நான் அடைவேனாக,' என்ற கருத்தமைந்த செய்யுளைப் பாடினான். அச்செய்யுளில் அமைந்துள்ள அவனது சூளுரை படிப்பவர் உள்ளத்தை உருக்குவதாகும்.[2]

### போர் நிகழ்ச்சிகள்

இங்ஙனம் சூளுரைத்த பாண்டியன் போருக்கு எழுந்தான். பாண்டிய நாட்டு மறவர் படை ஆர்த்தெழுந்தது. பாண்டிய நாட்டு வட எல்லையில் இரு திறத்தார் படைகளும் எதிர்ப்பட்டன. பாண்டியன் படையினும் பகைவர் படை பன்மடங்கு பெரிதாகக் காட்சியளித்தது. ஆயின், இளைஞனை பாண்டியனோ அவனது படையோ மாற்றாரது மாபெரும் சேனையைக் கண்டு மனம் மறுகவில்லை. தாய் நாட்டைக் காத்தலே தலையாய அறம்என்னும் கடமை உணர்ச்சியால் பாண்டிய நாட்டு மறவர் பகைவரைத் தாக்கினர். கத்தி கேடயங்கள் பறந்தன. வீரர் வில்லை வளைத்து அம்பை விடுத்தனர். அதுபோழ்து உண்டான ஓசை கேட்டோரைத் திடுக்கிடச் செய்தது. கரிகளும் கரிகளும் தம்முட் பொருத பொழுது அவற்றின் தந்தங்கள் எதிர்பாய்ந்து நின்றன. 'கதை' என்னும் போர்க்கருவிகள் ஒன்றோடொன்று மோதின. காலாட் படையினருள் சிலர் கை கலந்தனர்; சிலர் அங்கும் இங்கும் அலைந்து பொருதனர். கரிபரிகளின் கைகளும் கால்களும் வெட்டுண்டு வீழ்ந்தன. வீரர்கள் உயிர் இழந்தும் உறுப்பிழந்தும் வீழ்ந்து கிடந்த காட்சி, காண்டா மிருகத்தால் முறிக்கப்பட்ட மரஞ்செடிகள் வீழ்ந்து கிடக்கும் காட்சியை ஒத்திருந்

2. புறநானூறு செ. 72.

தது. போர்க்களத்தில் குருதி ஆறாக ஓடியது. இறந்த யானைகளின் உடலங்கள் குருதியாற்றுக் கமைந்த பாலங்கள் போல ஆங்காங்குக் காணப் பட்டன. அவ்வுடலங்கள்மீது நின்று வாள்வீரர் போரிட்டனர். இறந்த வீரர் கைகளில் வாள் முதலியன பொலிவிழந்து கிடந்தன. இறந்து பட்ட வீரர் சிலருடைய விழிகள் சிவந்திருந்தன. முரசுக்கேற்ற தாளம் போலக் குறையுடலங்கள் கூத்தாடின. அப்போது வெற்றிமகள் 'வெற்றி' என்னும் ஊஞ்சலில் அமர்ந்த வண்ணம் பாண்டியன் பக்கம் வேகமாக ஆடிக்கொண்டிருந்தாள்.

உயிரைத் துரும்பாக மதித்துப் பாண்டியனும் அவன் வீரரும் பகைவரை வளைத்துக்கொண்டு போரிட்டனர். புலிக் குழாத்துள் அரியேறு பாய்ந் தாற் போலப் பாண்டியன் பகைவர் குழாத்துட் புக்குத் தனது வாள் வீச்சால் பகைவர் படையைக் கலக்கினன். சேர சோழர் போர் செய்ய ஆற்றாது தவித்தனர். முடியுடை வேந்தரே சோர்ந்தனர். எனில், ஐம்பெரு வேளிரைப் பற்றி அறையவும் வேண்டுமோ? பாண்டியனது ஆற்றலை நன்கு அறிந் திருந்தும் அவனோடு பகைமை பூண்டு போருக்கு எழுந்தது பெருந்தவறு என்பதை அவ்வெழுவரும் உணர்ந்தனர். ஆயினும், களம் புகுந்த பின்னர்க் கருத்தழிவதிற் பயனில்லை என நினைந்து கடுமை யாகப் போர் புரிந்தனர். எனினும், உடைந்த படை கொண்டு அவர்களால் நெடுநேரம் போர்புரிய முடிய வில்லை. பாண்டியர் படை மேலும் மேலும் தாக்கிக் கொண்டே இருந்தது. இறுதியில் பகைவர் படை சிதறியது; வீரர் நிலை குலைந்தனர்; மன்னர் மனங் கலங்கினர். படை வீரர் நாற்புறங்களிலும் ஓடத் தலைப்பட்டனர். அந்நிலையைக் கண்ட எழுவரும்

செயலற்றுக் கால்களைப் பின்வைத்தனர். அவர்கள் புறங்காட்டி ஓடுவார்கள் என்பதை உணர்ந்த பாண்டியன் அவர்களை அண்மினான்.

### தலையாலங்கானம்

பகை மன்னர் இருவரும் ஐம்பெரு வேளிரும் புறங்காட்டி ஓடினர். பாண்டியன் சீற்றம் கொண்டு அவர்களைத் தொடர்ந்து சோழ நாட்டுள் புகுந்தான்; அவன் படைகளும் புகுந்தன. இங்ஙனம் எழுவர் தம் சிறிய படையுடன் முன்னே ஓட, பாண்டியன் தன் படைகளுடன் அவர்களைப் பின் தொடர, முடிவில் இருதிறத்தாரும் **தலையாலங்கானம்**[3] என்னும் இடத்தை அடைந்தனர்.

தலையாலங்கானத்தில் பாண்டியனுக்கும் பகை மன்னருக்கும் போர் நடந்தது. அப்போர் இத்தன்மையது என்று எடுத்துக் கூறுதல் அரிது; பாண்டியன் மிக்க வீரத்துடன் வாட்போர் புரிந்தான். அப்பெருவீரன் பகை மன்னர் விழிகட்குக் காலனைப் போலக் காட்சியளித்தான். பகைவர் படை சின்னபின்னப்பட்டது. பகைவர் நிலை கலங்கினர்; தாம் செய்த தவற்றுக்குத் தம்மையே நொந்தனர். பாண்டியன் நெடுஞ்செழியன் சேரனையும் சோழனையும் ஐம்பெரு வேளிரையும் அத்தலையாலங்கானம் என்னும் இடத்தில் முற்றிலும் முறியடித்தான்.

### விருதுப் பெயர்

பாண்டியன் பெற்ற வெற்றி எளியதன்று. முடிமன்னன் ஒருவன் தன்னைப் போன்ற முடி

3. இவ்விடம் சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவாரூருக்கு ஏறத்தாழ எட்டுக்கல் தொலைவில் இருக்கின்றது. இஃது இப்பொழுது **தலையாலங்காடு** என்று வழங்கப்படுகிறது.

மன்னர் இருவரையும் சிற்றரசர் ஐவரையும் போர்க் களத்தில் வெல்லுதல் எளிதன்று. இத்தகைய செயற்கரிய செயலைச் செய்த பாண்டியன் வாகை சூடித் தன் படைகள் புடைசூழ மதுரையை அடைந்தான். இவ்வரிய வெற்றியால் அவனது புகழ் மேலோங்கிப் பரவியது. அன்றுமுதல் அவன் **தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்** என்னும் விருதுப் பெயரால் அழைக்கப் பட்டான். வரலாற்றுப் புகழ்பெற்ற இப்போர் அக்காலப் புலவர் பாக்களில் இடம் பெற்றது.

## 2. புலவர் பாராட்டுரை

**கல்லாடனார் பாராட்டு**

செயற்கரிய செய்த பெருவீரனை பாண்டியனைப் பாராட்டப் புலவர் பலர் அவனைச் சூழ்ந்துகொண்டனர். அவருள் **கல்லாடனார்** என்பவர் ஒருவர். அவர் பாண்டியனைக் களிப்புடன் நோக்கி,

“காலனைப்போல வலியமைந்த காவலனே! நீ வலிமை மிக்க யானைகளை உடையை; பெருவீரனை சூரபன்மனைக் கொன்ற முருகப்பெருமானை ஒப்பை; உனது படை முருகனது பூதப்படையை ஒக்கும்; நீ போர்புரியச் சென்ற இடங்களில் எல்லாம் வாகை சூடி வருகின்றனை; உன்னைப் பார்க்கும் பகைவர் கருடனைக் கண்ட நாகம்போல நடுங்குவர்; நீ செல்லும் நாடெல்லாம் காடாகும்; உனது சீற்றத்தைப் பெற்றவர் உயிர் பெற்றிரார்; நீ வேற்றரசருடைய காவல் மரங்களை அழிப்பதில் பெருவிருப்பம் உடையவன்; நீ இருபெரு வேந்தரையும் ஐம்பெருவேளிரையும் தலையாலங்கானத்தில் முற்றிலும் தொலைத்து

வெற்றி பெற்றதைச் செவிமடுத்து இங்கு வந்தேன்; நீ வாழ்வாயாக!"[4] என்று பாண்டியனது வெற்றிச் சிறப்பைப் பாராட்டி மகிழ்ந்தார்.

## இடைக்குன்றூர் கிழார்

இடைக்குன்றூர் கிழார் என்ற பைந்தமிழ்ப் புலவர் பாண்டியர் பெருமானை அகங்குளிர நோக்கி,

"பாண்டியர் பெருமானே, இவ்வுலகம் மிகப் பெரிது; இதனில் ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும் ஒருவனை ஒருவன் வெற்றிகொள்ளலும் புதியன அல்ல; வியப்பிற்கு உரியனவும் அல்ல; இதற்கு மாறாகப் பிறிதொன்றனை யான் இதுகாறும் கேட்டறியேன். ஆனால், இன்றோ இதற்கு மாறுபட்டதொன்றைக் கேள்வியுற்றேன். நீ வேப்பந் தளிரும் உழிஞைக் கொடியும் விரவித் தொடுக்கப்பட்ட மாலையைச் சூடிப் போர்ப்பறை ஒலிப்பப் படையுடன் சென்று, இருபெரு வேந்தரையும் ஐம்பெருவேளிரையும் ஒருவனே வென்றனை என்னும் செய்தி வரலாற்றிலேயே புதியது."[5] என்று உளமாரப் பாடினார். பின்னர், அச் செந்நாப் புலவர், அச்செம்மல் போர்க்களத்து நின்ற காட்சியையும் பொருது வென்ற மாட்சியையும் வியந்து கூறுவாராய்,

"இவ்விளைஞன் சதங்கை களையப்பெற்ற காலில் ஒளி பொருந்திய வீரக்கழலை அணிந்துள்ளான்; குடுமி நீக்கப்பெற்ற தலையில் வேப்பந் தளிரை உழிஞைக்கொடியோடு சூடியுள்ளான்; வளையல்

4. புறநானூறு, செ. 23. 5, புறம் - 76

ஒழிக்கப்பெற்ற கையில் வில்லைப் பிடித்துள்ளான்; தேர்மீது பொலிவுடன் நிற்கின்றான். இவன் யாவன்? இவன் யாவனாயினும் என்? இவன் கண்ணி வாழ்வதாக! இவன் இன்னும் ஐம்படைத் தாலியைக் களைந்தான் அல்லன்; மிக்க இளைஞன். முறைமுறையாக வெகுண்டு மேல்வந்த புதிய வீரரை மதித்தானும் அல்லன்; அவமதிப்புச் செய்தானும் அல்லன்; அவரைப் போரில் வென்றதற்கு மகிழ்ந்தானும் இலன்; தனது வென்றியை நினைந்து இறுமாப்புக் கொள்ளலும் இலன். இவனது அடக்கம் பாராட்டத் தக்கது," என்றார்.[6]

மேலும், அவர் பாண்டியனது வெற்றியைப் பாராட்டுவாராய்,

"பாண்டியன் போரின்கண் பொன்றாப் பொருமையுடையவன்; மிக்க வலிமை உடையவன்; குகையிற் கிடந்த புலி இரைவேட்டு எழுந்து நிமிர்ந்து வந்தாற்போன்ற பெருமித நோக்குடையவன். இத்தகையவனைப் பகைவர், 'யாம் படையால் சிறப்புடையேம்; பெரியேம் எம்முடன் போரிடுபவன் இளையவன்; அதனால் யாம் பெறும் கொள்ளையும் பெரிது,' எனத் தம்மை வியந்தும் இவனை எள்ளியும் போருக்கு வந்தனர். பாண்டியன் அவர்தம் மனைவியர் நாண அவர்களை வென்றான்,"[7] என்று பாடி மகிழ்ந்தார்.

## மாங்குடி கிழார்

நெடுஞ்செழியனைப் பாடி மகிழ்ந்த மற்றொரு புலவர் மாங்குடி கிழார். அவர் பாண்டியர் தோன்றலை நோக்கி, "மிக்க போரைச் செய்யும்

6. புறம் - 77. 7. புறம் - 78

பாண்டியர் பெரும, ஆழ்ந்து அகன்ற கருங்கடலின் கண் காற்றால் உந்தப்பட்ட கப்பல் ஒன்று அக்கடல் நீரை இடையீடு படக் கிழித்துச் செல்லுமாறு போல உனது களிற்றியானை பகைவர் கூட்டத்தில் நுழைந்து வழியை உண்டாக்குகின்றது. நீ அவ் வழியே வேலேந்திச் சென்று போர் புரிவை; பகைவர் உடலைக் கூறு கூறாக வெட்டுவை. பகைவர் குருதியைப் பெருக்குவர். பலர் அறக்கள வேள்வி செய்வர். நீயோ மறக்கள வேள்வி செய்கின்றனை. பெருவீரனை உன்னால் கொல்லப்பட்ட வீரர் தடையின்றித் துறக்கம் புகுவர். உனது வாளால் மாய்ந்தோர் பெருமை மிக்கவரே ஆவர்,"[8] என்று பாராட்டினார்.

## குடபுலவியனார்

குடபுலவியனார் என்ற பிறிதொரு புலவர் இப் பாண்டியனைப் பார்த்து,

"பெருந்தகை, நின் முன்னோர் பல நாடுகளைத் தமது முயற்சியால் கொண்டவர்; அதனால் தமது புகழை உலகத்தில் நிறுத்தினவர். நீ அத்தகைய பெருமக்கள் மரபில் வந்தவன். வாளை, ஆரல், வரால், கெடிறு என்னும் மீன் இனங்கள் வாழும் ஆழமான அகழியினையும், வானுறவோங்கிய மதிலையும் உடைய மதுரை மூதூர்க்கு மன்னனே, நீ இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் தலையாலங்கானத்தில் முறியடித்தனை என்பதைக்கேள்வியுற்றேன்; உனது வெற்றிக்குப் பெரிதும் மகிழ்ந்து உன்னை வாழ்த்துகின்றேன். நீ விடுத்த அம்புகள் பகைவரது வேழத்தின் மீது பாய்ந்து, புண்களை உண்டாக்கியதால், அது

8. புறம் - 26

பொருத்தற்காற்ருது ஒழிந்தது; அதன் துதிக்கை, வாயுடனே துணிந்து வீழ்ந்து, கலப்பையை ஒப்ப நிலத்தின் மேலே புரண்டது. இவ்வாறு பல யானைகள் இறந்துபட்டன. இவ்வியத்தகு போரில் தம் மைந்தர் போரிட்டு மடிந்தனர் என்பது கேட்ட மறக்குடி மகளிர் உவகைக் கண்ணீர் சொரிந்தனர். அக்காட்சியைக் கண்ணுற்ற காலன் நாணம் கொண்டான். நினது முத்தாரம் தாங்கிய மார்பை யான் தழுவவில்லையே என்று கவலைப்படுகின்றேன்.',[9] என்று சிறப்பித்தனர்.

## 3. நற்பண்புகள்

**வீரமும் ஈரமும்**

ஐம்படைத் தாலி என்பது தீய சூழல்கள் தாக்காதிருக்கும் பொருட்டுப் பிள்ளைப் பருவத்திலே கட்டப்படும் மார்பு அணியாகும். அது குழவிப் பருவம் கழிந்தவுடன் நீக்கப்படும். நெடுஞ்செழியன் போர்க்களம் சென்று, மாற்ருரை வென்று மதுரை மூதூர்க்கு மீண்டபொழுது, அவனைப் பாராட்டுவான் போந்த இடைக்குன்றூர் கிழார், "தாலி களைந்தன்றும் இலனே," என்று வியக்கின்ருர். ஐம்படைத் தாலியும் களையாத இச்சிறுவன் கழலணிந்த காவலர் எழுவரது வலி தொலைத்து வாகை மிலைந்தனன் என்பது இத்தொடரின் கருத்தாகும். இதனுல், பாண்டியனது இளமையும் அவ்விளமையில் அவன் பெற்றிருந்த அஞ்சாநெஞ்சமும் தறுகண்மையும் நன்கு விளங்குகின்றன அல்லவா? அன்றியும், தன்னேடு

---

9. புறம் - 18, 19.

போரிட்டுத் தோல்வியுற்ற யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேர வேந்தனைப் பாண்டியன் விரும்பியிருந்தால் கொன்றிருக்கக் கூடும். உண்மை வீரனான பாண்டியன் அங்ஙனம் செய்யவில்லை என்பது அவனது பெருந்தன்மையை நன்கு காட்டுகின்றதன்றோ ?

> 'பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்
> ஊராண்மை மற்றதன் எஃகு'

என்ற பொய்யா மொழிக்கு இவனது செயல் மெய் யிலக்காகும்.

## பொறுப்புணர்ச்சி

"என்மீது படையெடுத்து வருகின்ற பகைவரை வெல்லேனாயின், எனது ஆட்சியில் நிற்க நிழல் காணாமல், என்னைக் கொடியவன் என்று என் குடிகள் இழித்துரைக்கத்தக்க கொடுங்கோலனாக யான் ஆகக் கடவேன்,'' என்று பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறினான் அல்லவா? இதனால், அப்பெரு மகன், குடிகள் உள்ளம் வருந்தும்படி ஒருவன் ஆட்சி புரிதல் ஆகாது. குடிகள் மகிழ்ச்சி யடையும்படி ஆட்சி புரிதலே அரசன் கடமை என்னும் உண்மைகளை நன்கு அறிந்த காவலன் என்பது இனிது பெறப்படுகிறதன்றோ ?

## பாவன்மை

பாண்டி மன்னருள் பலர் புலவரைப் புரந்தனரேயன்றித் தாமும் புலவராக மிளிர்ந்திலர். சிலரே புவி காத்தலுடன் கவியாத்தலும் அமையப் பெற்றிருந்தனர். அவருள் பாண்டியன் அறிவுடை நம்பி, பூதப்பாண்டியன், ஆரியப்படை கடந்த

நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்போர் குறிப்பிடத் தக்கவர். நமது நெடுஞ்செழியன், இருபெரு வேந்தரும் ஐம் பெரு வேளிரும் தன்மீது படை எடுத்து வருதலைக் கேள்வியுற்றபோது பாடிய பாடல் ஒன்று புற நானூற்றில் காணப்படுகின்றது. அப்பாடல் வாயி லாகவே அவனுடைய ஆட்சிப் பொறுப்புணர்ச்சி, புலவரைப் போற்றும் பெருந்தகைமை முதலிய அரும் பண்புகளை நாம் அறிகிறோம். அப்பெரு வேந்தன் பாடிய பாடல் அவனது பெரும் புலமையை நன்கு எடுத்துக்காட்டுவதாகும். அப்பாடலைக் கீழே காண்க:

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாம்என்(று)
உறுதுப்(பு) அஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொ(டு)
ஒருங்ககப் படேஎன் ஆயிற் பொருந்திய
என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்(கு) ஈயா இன்மையான் உறவே." [10]

---

10 புறம் — 72.

## புலமைச் சுற்றம்

நெடுஞ்செழியன் புலமை உடையவனாதலின் அவனைப் புலவர் பலர் சூழ்ந்திருந்தனர்; வள்ளன்மையிற் சிறந்த அவனோடு நெருங்கிப் பழகினர். அவருள் மாங்குடி கிழார், இடைக்குன்றூர் கிழார், கல்லாடனார், மாங்குடி மருதனார் என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவருள் மாங்குடி மருதனார் என்பவர் அவனது அவைக்களப் புலவர் தலைவராக இருந்தனர் என்று கூறலாம். "என் பகைவரை யான் வெல்லேனாயின், மாங்குடி மருதனைத் தலைவனாகப் பெற்ற புலவர் குழாம் எனது நில வெல்லையைப் பாடாது ஒழிக," என்று பாண்டியன் சூள் உரைத்தான் அல்லவா? இச்சூளுரையிலிருந்து, அப்பாண்டியர் பெருமான் மாங்குடி மருதனாரிடமும் அவரைச் சார்ந்த புலவரிடமும் கொண்டிருந்த அளவிடற்கரிய மதிப்பு நன்கு விளங்குகிறதன்றோ?

## பொன்றுப் புகழ்

பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்ற செய்தி பிற்காலப் பாண்டியர் பட்டயங்களில் புகழ்ந்து பாராட்டப்பட்டுள்ளது. அது வருமாறு:

> "தலையாலங் கானத்தில் தன்னொக்கும் இருவேந்தரைக்
> கொலைவாளில் தலைதுமித்துக் குறைத்தலையின்
> கூத்தொழித்தும்." 11

கி. பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டி மன்னனாக இருந்த மூன்றாம் இராசசிங்க பாண்டியன் வெளியிட்ட செப்பேடுகளில் தலையாலங்

11 மூன்றாம் இராசசிங்க பாண்டியன் வெளியிட்ட சின்னமனூர்ச் செப்பேடுகள்.

கானத்து வெற்றி குறிக்கப்பட்டுள்ளதைக் காண, இப்பெரு வெற்றி பாண்டியன் நெடுஞ்செழியன் காலம் முதல் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு வரையில் பாண்டிய நாட்டில் நினைவு கூரப்பெற்றும் பாராட்டப்பெற்றும் வந்திருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை.

## 4. முல்லைப் பாட்டு

**தோற்றுவாய்**

பாவலனும் காவலனும் ஆகிய பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு அக்காலப் புலவர் பெருமக்கள் மூவர் முப்பெரும் பாடல்களைப் பாடியுள்ளனர். அவை பத்துப்பாட்டு என்னும் பைந்தமிழ் நூலுள் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்கள் **முல்லைப்பாட்டு**, **நெடுநல் வாடை**, **மதுரைக்காஞ்சி** என்பன. அவற்றுள் முல்லைப் பாட்டின் செய்திகளை இப்பகுதியிற் காண்போம்:

'யான் வருமளவும் ஆற்றியிரு' என்று கூறித் தலைவன், தலைவியைப் பிரிந்து சென்ற பின்னர், அவன் மீளும் துணையும் தலைவி ஆறுதல் உள்ளத்தினளாய் இல்லிருந்து நல்லறம் நிகழ்த்துதல் 'முல்லை' எனப்படும். இம்முல்லை ஒழுக்கத்தைப் பற்றிய பாடல் 'முல்லைப்பாட்டு' எனப்பட்டது. பாண்டியன் நெடுஞ்செழியன் பகைவரைப் பொருதடக்கப் போருக்குச் சென்ற பின்னர்த் தலைவி வருந்தலும், 'அவன் வினைமுடித்து வருதல் உறுதி; நீ வருத்தம் தவிர்தி' என்று பெருமுதுபெண்டிர் கூற, அது கேட்டு அவள், தலைவன் திரும்பியதும் உளவாகும் இல்வாழ்க்கைப் பயனை நினைந்து ஆற்றியிருத்தலும், தலைவன் போர்முடித்து வருதலும், அதுகண்டு

தோழி முதலியோர் தம்முட் கூறுதலும் ஆகிய செய்திகள் இம்முல்லைப் பாட்டுள் கூறப்பட்டுள்ளன. இதனை இயற்றி அருளியவர் **காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார்** என்பவர்.

### தலைவி வருத்தம்

பெருவீரனான நெடுஞ்செழியன் போரை முடித்துவிட்டுக் கார்காலத் தொடக்கத்தில் வருவதாகத் தன் மாதேவியிடம் குறிப்பிற் புலப்படுத்தி அகன்றான். அவன் பிரிவு ஆற்றாத மாதேவி, தன் கணவன் குறித்த காலத்தில் வரவில்லையே எனக் கவன்றாள். அவள் விழிகளிலிருந்து முத்துப்போன்ற நீர்த்துளிகள் உதிர்ந்தன. அவள் தனது நெகிழ்ந்த வளையல்களைத் திருத்தினாள். பிரிவாற்றாமையால் அவளது உடல் நடுங்கியது.

### முதுபெண்டிர் கூற்று

அரசமாதேவியைக் காத்துவந்த பெருமுதுபெண்டிருள் ஒருத்தி அவளைப் பல இன் சொற்களால் பின்வருமாறு தேற்றலானாள் :

“முதுபெண்டிர் ஊர்ப்புறத்திலுள்ள பாகத்தில் நற்சொல் கேட்பதற்காகச் சென்றனர். அப்பெண்டிர் நெல்லையும் முல்லை அரும்பையும் நாழியில் இட்டுச் சென்று தெய்வம் பராவி நற்சொல் கேட்க முயன்றனர். அவ்வமயம் குளிரால் நடுக்கங்கொண்ட ஓர் ஆய்மகள் தன் கைகளைத் தோளிற்பொருத்தி வீட்டினின்றும் வெளிப் போந்தாள்; தாம்பிற் கட்டப்பட்டு பாலுண்ணும் வேட்கை மீக்கூர்ந்து நின்ற கன்றுகளை நோக்கினாள். நோக்கிய அவ்வாய்மகள், ‘உங்கள் தாயார் வயிறார மேய்ந்து இன்னே

வருகுவர்; கவலையை ஒழிமின்,' என்று அன்போடு கூறினாள். அக்கூற்றை நற்சொல்லாகக் கேட்டு மகிழ்ந்த முதுபெண்டிர், "நின் கணவர் போரில் வெற்றிபெற்று இன்னே வருவர்; நீ கவலை தவிர்க," என்று கூறினர்.

## அரசியின் ஆறுதல்

கார்காலம் ஆதலின் மழை பெய்யத் தொடங்கியது. இரவிலும் அம்மழை நிற்கவில்லை. அரண்மனைப் பள்ளியறையில் பொற்பாவை ஏந்தி நின்ற தகளியிலே விளக்கு எரிந்துகொண்டிருந்தது. எழுநிலை மாடத்தின் மூட்டுவாய்களிலிருந்து நீர் சொரிந்து கொண்டிருந்தது. அதனால் உண்டான ஓசை பெரிது. 'என் தலைவர் வருவதாகக் கூறிப் போந்த கார் காலம் இதுவே போலும்! அவர் கடிதில் வருவார்' என்று அரசமாதேவி தன்னுள் எண்ணமிட்டவளாய்த் துயிலாதிருந்தனள்.

## பாசறைச் சிறப்பு

போர் புரியச் சென்ற பாண்டியன் படைவீரர் பகைப் புல மருங்கில் தங்கினர்; பகைப் புலத்தில் காவல் புரிந்து நின்ற வேட்டுவரின் அரண்களை அழித்தனர்; தமது பாசறையைச் சுற்றிலும் முள் வேலி இட்டனர்; அதன் நடுவே இடமகன்ற பாடி வீட்டை அமைத்தனர். அவர் தம் முயற்சியால் யானை வீரர் முதலிய நால்வகைப் படையினரும் தங்கத் தக்க இடங்கள் அமைந்தன. பாசறையின் நடுவண் அரசனுக்கென்று பெரிய கோவில் எழுப்பப் பட்டது. அதன் வாயிலில் மெய்காப்பாளராகிய யவனர் புலியைச் சங்கிலியிற் பிணித்து வைத்திருக்கும் காட்சி ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தது.

### பாசறை நிகழ்ச்சிகள்

பாசறையில் நான்கு தெருக்கள் சேரும் முற்றம் தோறும் கரி ஒன்று காவலாக நிறுத்தப்பட்டிருந்தது. அது கரும்பையும், நெற்கதிரோடு மிடையப் பட்ட இலையையும் அதிமதுரத் தழையையும் உண்ணாமல் அவற்றால் தனது நெற்றியைத் தடவியது; பின்னர் அவற்றைக் கையில் ஏந்தி, அக்கையைத் தனது கொம்பின்மேல் வைத்தபடி நின்று கொண்டிருந்தது. அது கண்ட யானைப்பாகன் அதற்குப் புரியும்படியான மொழிகளைச் சொல்லிக் கவளத்தை உண்ணுமாறு வரிக்கோலால் குத்தினான். இடையில் வாள் அணிந்த பெண் வேலையாட்கள் விளக்குகளை ஏற்றினர். சட்டையும் தலைப்பாகையும் அணிந்த மெய்காப்பாளர் காவலனது கூடாரத்தைச் சுற்றி வந்தனர்.

மன்னவன் எழினி கட்டப்பெற்றிருந்த உள்ளறையில் பள்ளிகொண்டான். அவன் கண்படை கொள்ளவில்லை. அப்பெருவீரன் முதல் நாள் நடைபெற்ற போரில் போராண்மைகாட்டி இறந்த வீரரைப் பற்றி எண்ணினான்; அம்பு பாய்ந்த துன்பத்தால் செவிகளைக் குவித்தவண்ணம் உணவு கொள்ளாமல் நின்ற குதிரைகளைப்பற்றி நினைந்தான். அப்பொழுது காலத்தின் அளவை அளந்து கூறும் அலுவலர் அரசனை வாழ்த்தி இரவில் இத்துணை நாழிகைகள் கழிந்துவிட்டன என்பதைத் தெரிவித்தனர்.

### பாண்டியன் வாகை சூடல்

சில நாட்கள் போர் கடுமையாக நடைபெற்றது. பாண்டியன் பெருவெற்றி பெற்றான்; தன் வீரரைப் பலபடப் பாராட்டினான். வெற்றிவிழா போர்க்

*களத்திலேயே கொண்டாடப்பட்டது. விழா முடிந்தவுடன் பாண்டியன் தன் கோப்பெருந்தேவியின் தனிமையை நினைவுகூர்ந்தான். அவன் உடனே தன் படைகளுடன் ஊர் நோக்கித் திரும்பினான்.*

**கண்ணுக்கினிய காட்சி**

*பாண்டியர் பெருந்தகை பரிகள் பூட்டப்பெற்ற தேரில் வாகை மாலையுடன் வந்துகொண்டிருந்தான். வழி நெடுகக் காயாமரங்கள் கரியமலர்களைப் பூத்துக் கவின்பெறக் காட்சியளித்தன. கொன்றை மரங்களில் பொன்னிற மலர்கள் பொலிந்து விளங்கின. வெண்காந்தள் மலர்ந்திருந்தது. முறுகிய கொம்புள்ள கலைமான் தன் பெண்மானுடன் துள்ளி விளையாடியது. குருதி போன்ற செந்நிறமுடைய தோன்றிப் பூ மலர்ந்திருந்தது. அரசனது வெற்றிக்கு அறிகுறியாகப் படை வீரர் கொம்பும் சங்கும் ஊதினர். பாண்டியனது தேரில் பூட்டப்பெற்ற குதிரைகள் தத்தம் காலடிச் சத்தம் கோப்பெருந் தேவியின் காதுகளில் படும்படி விரைந்தோடின. அவ்வோசை கேட்ட பாண்டிமாதேவி தன் தலைவன் வருவதை அறிந்தாள். அவ்வளவில் அவளது அகமும் முகமும் அலர்ந்தன.*

**முடிவுரை**

*இவ்வரிய பாடலில் கணவனைப் பிரிந்த கற்புடை மகளின் பொறுப்பும், அக்காலத்தார் நற்சொல் கேட்கும் வழக்கமும் வீரர் பாசறை அமைக்கும் முறையும், பாசறை நிகழ்ச்சிகளும், உண்மைக் காதலன் தன் காதலியின்பால் கொண்டிருந்த உள்ளன்பும் நன்கு விளங்கும்.*

# 5. நெடுநல் வாடை

**தோற்றுவாய்**

பகைவரோடு போர் புரியச்சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் அரசமாதேவிக்கு அவள் வருத்தம் நீங்கும்படி, 'பாண்டியன் பகைமுடித்துக் கடிதில் மீள்வானாக' என்று கொற்றவையை வேண்டும்ஒருத்தி கூறியதாகப் பாண்டியன் நெடுஞ்செழியன்மீது மதுரைக் கணக்காயனார் மகனார் **நக்கீரனார்** பாடியது இது. தலைவனது பிரிவாற்றாமையால் இரங்கும் தலைவிக்கு வாடைக்காலத்தின் ஒரு பொழுது ஓர் ஊழி போலத்தோன்றி **நெடிதாகிய வாடையாய்** அமைந்ததாலும், அரசன் இல்லறவாழ்க்கையில் மனமற்று வேற்றுப் புலத்தில் தங்கி வெற்றி பெறுவதற்குக் காரணமான **நல்லதாகிய வாடையாக** அமைந்தமையாலும் இப்பாடல் **நெடு-நல்-வாடை** எனப் பெயர் பெற்றது. இப்பாட்டில் மழை பெய்யும் குளிர் கால நிலைமையும், கோப்பெருந்தேவியின் பிரிவாற்றாமையும், பாண்டியனது பாசறை நிலைமையும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

**குளிர் காலம்**

கார்காலத்து முகில்கள் தரை குளிரும்படி மழையைப் பொழிந்தன. கால்நடைகளை மேய்க்கும் கோவலர் மழை வெள்ளத்தை வெறுத்தனர். தம் கால்நடைகளை மேட்டுப்பரப்பான முல்லை நிலத்தில் மேயவிட்டனர். அக்கோவலர் அணிந்திருந்த காந்தள் மலர் மாலைகள் மழைத் துளிகளால் அலைப்புண்டு அழகு ஒழிந்தன. குளிரால் ஒவ்வொருவர் உடலும் நடுங்கியது. அவர்தம் பற்கள் பறையடித்தன. கால்

நடைகள் மேய்தலை மறந்தன. மரங்களில் இருந்த குரங்குகள் குளிரால் வருந்தின. காற்றின் மிகுதியால் மரக்கிளைகள் ஒடிந்தன; அதனால் பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. கறவைகள் தம் கன்றுகட்கும் ஆடுகள் தம் குட்டிகட்கும் பால் தர மறுத்து உதைத்துத் தள்ளின. மழைநீர் வெள்ளம் போலப் பரந்து சென்றது. கயல்கள் அவ்வெள்ள நீர்ப் போக்கினை எதிர்த்து நீந்திச் சென்றன. அப்பொழுது கருமணற் பரப்பில் துள்ளி விழும் கயல்களைக் கொக்குகள் விழுங்கின.

பின்னர் வெண்ணிற முகில்கள் நீர்த்துளிகளைத் தூவின. அதனால் வயல்களில் உயர்ந்து வளர்ந்த நெற்கதிர்கள் கவிழ்ந்திருந்தன. பாக்கு மரங்களில் இருந்த காய்கள் முற்றியிருந்தன. கிளைகளிலும் இலைகளிலும் மலர்களிலும் தங்கியிருந்த மழை நீர் காற்றின் அசைவால் துளித்துளியாகச் சிதறியது. தெருக்களில் ஆற்று வெள்ளம் போல மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. கட்குடியர் மழைக்கு அஞ்சாராய்த் தெருக்களில் திரிந்தனர். வானம் இருண்டிருந்ததால் இரவென்றும் பகலென்றும் அறியாது உயிர்கள் மயங்கின. வீட்டின் கண் வளரும் ஆண்புறா தன் பெடையுடன் மன்றிலே சென்று இரை தேடி உண்ணாமல் செயலற்றுக் கொடுங்கையைத் தாங்குதலையுடைய பலகைகளில் நின்றுகொண்டிருந்தது.

### செல்வர் இல்லங்கள்

செல்வர் மனைகளில் வாழ்ந்த குற்றேவல் மகளிர் சாந்து அறைக்கும் அம்மியில் கத்தூரி முதலியவற்றை அரைத்தனர். மழையாலும் குளிராலும் மலர்களை மாலையாகத் தொடுக்க முடியாமல், சில

T. P. M. LIBRARY

மலர்களை மட்டும் செல்வ மகளிர் தமது கூந்தலிற் செருகினர். பணிப் பெண்கள் சந்தனக் கட்டையை எரித்து, அந்த எரியில் அகிற்கட்டையையும் செவ்வரக்கையும் இட்டுப் புகைத்தனர். செல்வ மகளிரது பள்ளியறையின் சாளரங்களின் வழியே மெல்லிய பூங்காற்று வீசியது. ஆதலால் அச்சாளரங்கள் அடைக்கப்பட்டன. வாடைக்காற்றுச் சிறிய நீர்த்திவலைகளை எங்கும் பரப்பியது. குளிர் மிகுதியால் துன்புற்ற இளையரும் முதியரும் இந்தனத்திலிருந்த நெருப்பில் குளிர் காய்ந்தனர். யாழின் நரம்புகள் தொட முடியாதபடி குளிர்ந்திருந்தன. அதனுல் செல்வ மகளிர் அவற்றைத் தமது உடம்பில் தேய்த்துச் சூடேற்றினர்; பூந்தட்டில் இட்டு வைத்த பிச்சி மலர்கள் அலர்ந்தமையால் மாலைக்கால வருகையை அறிந்து விளக்கை ஏற்றினர்; நெல்லையும் மலரையும் தூவித் தாம் வழிபடு கடவுளரை வணங்கினர்.

## அரண்மனைச் சிறப்பு

பாண்டியனது அரண்மனை கட்டப்படுவதற்குரிய நாளும் நல்லோரையும் குறிக்கப்பட்டன. குறித்த காலத்தில் சிற்ப நூல் வல்லுநர் கயிறு கொண்டு திசைகளை அறுத்து, அத்திசைகளுக்குரிய தெய்வங்களை வணங்கினர்; பின்னர் மன்னனுக்கு ஒப்ப மனைகளையும் மண்டபங்களையும் வாயில்களையும் வகுத்தனர்; அவ்விடங்களை எல்லாம் மதிலால் வளைத்தனர். அம்மதிலின் வாயிற் கதவுகள் இரும்பிஞல் இயந்தவை. வாயில் நிலையைத் தாங்கும் சுவர் மீது திருமகள் சிலையும் அதன் இரு மருங்கும் செங்கழுநீர்ப் பூவும் சுண்ணத்தால் வண்ணமுற அமைக்கப்பெற்றன. மலையை நடுவில் பிளந்தாலொத்த அகற்சியும் உயர்ச்சியும் உடைய வாயில் சிறந்த

வேலைப்பாட்டுடன் விளங்கியது. அவ்வாயிலுள் வேழப்படை வெற்றிக் கொடியுடன் செல்ல இருந்தது.

மழை நீர் கீழே இறங்கும்படி நிலா முற்றத்தில் பொருத்தப்பட்டிருந்த குழாய், மீனின் திறந்த வாய் போல் இருந்தது. அக்குழாயிலிருந்து விழுந்த நீர் அருவி போலப் பேரோசையைக் கிளப்பியது. அங்ஙனம் நீர் விழுந்து ஓசையிட்ட இடத்தில் மயில்கள் நின்று அகவி ஆரவாரம் செய்தன.

அரண்மனையின் அந்தப்புறம் அழகுறக் கட்டப் பட்டிருந்தது. சுவர்கள் உயர்ந்தவை; சிறந்த வேலைப்பாடு கொண்டவை. அவற்றின்மீது செஞ் சாந்துகொண்டு பூங்கொடிகள் ஓவியங்களாக அமைக் கப்பட்டிருந்தன. அந்தப்புரத் தூண்கள் கருமையும் திரட்சியும் பளபளப்பும் பெற்றிருந்தன. அரசி இருந்த அறையில் விளக்குகள் எரிந்துகொண்டிருந் தன. அவை யவனர் இயற்றிய பாவை விளக்குகள். அவை ஒளி மழுங்கும்பொழுது அழகிய பணிப் பெண்கள் நெய்யூற்றி ஒளிபெறச் செய்தனர்.

### கட்டிலின் சிறப்பு

கோப்பெருந்தேவி பள்ளிகொள்ளும் கட்டில் நாற்பதாண்டுகள் நிறைந்து போர்க்களத்தில் மாண்ட களிற்றினது தந்தத்தைக்கொண்டு செய்யப் பட்டது; கைதேர்ந்த கம்மியரால் பொருத்துமிடம் தெரியாமல் பொருத்தி அமைக்கப்பட்டது; மிக நுண்ணிய உளிகொண்டு இலை முதலிய உருவங்கள் செதுக்கப்பெற்றது; சிங்கம் புலி முதலியவற்றை வேட்டையாடும் காட்சிகள் அமைந்த மெல்லிய தகடு கள் தன்மீது அழுத்தப்பெற்றது. கட்டிற் கூரையி

விருந்து நாற்புறமும் முத்துமாலைகள் தொங்கவிடப் பட்டிருந்தன. கட்டிற்கால்கள் அடியில் குடம் போலப் பருத்தும், மேற்பகுதி முழுவதும் சிறுத்தும் தோன்றும்படி செய்யப்பட்டிருந்தன. அக்கட்டில் மீது அன்னச் சேவலின் தூவி பரப்பப் பட்டிருந்தது. அப்பரப்பின்மீது கஞ்சி தோய்ந்த வெண்துகில் விரிக்கப்பட்டிருந்தது. அத்துகில்மீது நறுமணம் உள்ள மலர்களின் இதழ்கள் பரப்பப் பட்டிருந்தன.

## மாதேவியின் மனக்கவலை

இங்ஙனம் அரிய வேலைப்பாடு கொண்ட கட்டி லில் விரித்திருந்த மென்மையான படுக்கைமீது அரசமாதேவி படுத்திருந்தாள். ஆயினும், அழகிய வேலைப்பாடு கொண்ட அக்கட்டிலோ, மிகவும் மென்மை வாய்ந்த படுக்கையோ அவளுக்கு இன்பத்தைத் தரவில்லை. அவள் தன் உயிரன்ன காதலன் பிரிவை நினைந்து நினைந்து துன்புற்றாள்; அவளது மார்பின்மீது பின்னிவிடப்பட்ட அவளது கூந்தல் படிந்திருந்தது. அவள் தனது ஆடையையும் அணிகலன்களையும் வெறுத்தாள். கணவன் இருந்த பொழுது அவள் கைகளில் இருந்த பொன் வளையல் கள் அப்பொழுது இல்லை. வலம்புரிச் சங்கால் செய் யப்பட்ட வளையல்களே இருந்தன. அவளது மகரக் குழையணிந்த காது அவ்வணியின்றி வறிதே காணப்பட்டது. கணவன் அரண்மனையில் இருக்கும் பொழுது அவள் பூவேலைப்பாடு அமைந்த பட்டாடை களையே உடுத்துதல் வழக்கம்; கணவன் பிரிந்த பிறகு மாசேறிய துகிலையே உடுத்திருந்தாள். சுருங்கக் கூறின், கணவனது பிரிவால் அக்கோப்

பெருந்தேவி புனையா ஓவியம் போலப் பொலி வற்றிருந்தாள்.

அப்பொழுது அவளது கவலையைப் போக்கத் தோழியர் தோன்றினர்; அரசர் பெருமான் விரை வில் வருவானென்று ஆறுதல் கூறினர். அவ்வாறு தல் மொழி அம்மாதேவியைத் தேற்றவில்லை. அவ ளது பார்வை கட்டிலின் மேற்கூரையில் தீட்டப்பட் டிருந்த ஓவியங்கள்மீது சென்றது. அவள் திங்களும் உரோகிணியும் ஒருசேர அமைந்த ஓவியத்தைப் பார்த்தாள்; தானும் உரோகிணியைப் போலத் தன் கணவனை விட்டுப் பிரியாதிருக்க முடியாதோ என்று எண்ணி ஏங்கினாள். அவள் விழிகளிலிருந்து முத்துப் போன்ற நீர்த்துளிகள் வெளிப்பட்டன. அப் பெருமாட்டி அத்துளிகளைத் தனது சிவந்த விரலால் எடுத்து எறிந்தாள். பேரழகு வாய்ந்த பணிப்பெண் கள் கோப்பெருந்தேவிக்கு உறக்கம் வருவதற்காக, செம்பஞ்சு ஊட்டப்படாத அவளுடைய மெல்லிய அடிகளை மெல்ல வருடினர்.

## கொற்றவை பரவும் கோதை

அந்நிலையில் கொற்றவை பரவும் கோதை ஒருத்தி, கோப்பெருந்தேவி கேட்குமாறு கொற்ற வையைப் பார்த்து,

“அம்மையே! சேரன் செம்பியன் முதலிய எழு வருடன் போர் செய்ய அரசன் சென்றிருக்கிறான். நம் வீரர் பகைவருடைய கரிகளை வெட்டி வீழ்த்தி னர். அப்பொழுது பகைவரின் போர்க் கருவிகளால் தாக்குண்ட வீரர் பலர் புண்பட்டுக் கிடக்கின்றனர். வாடைக்காற்று வீசுந்தோறும் விளக்கில் எரிகின்ற சுடர்கள் தெற்கு நோக்கிச் சாய்ந்து எரிகின்றன.

வேப்பமாலையை உச்சியில் தாங்கிய வேலையேந்திய படைத் தலைவன் வேந்தனுக்கு முன் போந்து, போரில் விழுப்புண்பட்ட பாண்டிய வீரரைக் காட்டு கின்றான். வேந்தன் அவ்வீரர் மனம் மகிழும்படி இன்சொல் இயம்புகின்றான். ஆங்காங்குக் கட்டப் பட்டு நிற்கின்ற பரிகள்மீது மழைத்துளிகள் விழு கின்றன. அப்பரிகள் அம்மழைத் துளிகளைத் தமது உடலையசைத்து உதறுகின்றன. மன்னனது இடத் தோளிலிருந்து மேலாடை இழிகின்றது. அவன் அதனைத் தனது இடப்பக்கத்தில் தழுவிக்கொண்டு பாசறையின் ஒவ்வொரு பகுதியையும் பார்க்கின் றான். வெண்கொற்றக் குடை அவன்மீது மழைத் துளிபடாமல் காக்கின்றது. இவ்வாறு உறக்கமும் ஓய்வும் இல்லாமல் போர்த் தொழிலில் கண்ணுங் கருத்துமாக இருக்கும் அரசனுக்கு நீ வெற்றி அளிப்பாயாக! எங்கள் மாதேவியின் தனிமைத் துன்பம் விரைவில் தணிவதாக!'' என்று கூறிப் பரவினாள்.

## 6. மதுரைக் காஞ்சி

### தோற்றுவாய்

'காஞ்சி' என்பதற்கு, வீடுபேறு காரணமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் உணர்த்து தல் என்பது பொருள். 'மதுரைக் காஞ்சி' என்பது மதுரையின்கண் மன்னனுக்குக் கூறிய காஞ்சி எனப் பொருள்படும். இம்மதுரைக் காஞ்சி, மதுரை மன்னனை பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்கு நிலையாமையினை அறி வுறுத்த **மாங்குடி மருதனார்** என்ற புலவர் பெருமா னால் பாடப்பட்டது. இப்பாடலில் பாண்டியர் சிறப்பு,

நெடுஞ்செழியனது போர்த்திறன், பாண்டிய நாட்டுப் பெருமை, மதுரை மூதூரின் மாண்பு, வீடுபேறு விழையும் வேந்தனது செயல்முறை முதலியன குறிக்கப்பட்டுள்ளன. பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கி மாங்குடி மருதனார் கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. பாடலின் விளக்கம் பின் வருமாறு:

**பாண்டியன் சிறப்பு**

"இவ்வுலகம் கடலை எல்லையாக உடையது; வானளாவிய மலைகளைப் பெற்றது. உலக நாடுகளுள் பாண்டிய நாடு ஒன்று. நாண்மீன்கள் தத்தம் நிலையில் நின்று ஒழுகவும், ஞாயிறும் திங்களும் நன்கு விளங்கவும், கருவி வானம் பருவத்துப் பொழியவும், திசைகள் யாவும் தழைப்பவும், ஒரு வேலி நிலம் ஓர் ஆயிரம் கலம் விளையவும், பயன் மரங்கள் பாங்குறத் தழைப்பவும், பிணியின்றி மக்கள் அணிபெறத் திகழவும் பொய்யறியாத அமைச்சரோடு பொருந்திப் பூவுலகாண்ட புகழினோர் நின் முன்னோர். நீ அவர்தம் மரபில் வந்தவன். நீ இந் நாட்டை நன்முறையில் ஆளுகின்றனை. அதனால் நின் குடிகள் பசியும் பிணியும் இன்றி வசியும் வளனும் பெற்று வாழ்கின்றனர். நின் முன்னோர் பலர் போரில் சிறந்து விளங்கினர். அவருள் **வடிம்பு அலம்ப நின்ற பாண்டியன்** என்பவன் ஒருவன். அவனிடம் போர்க்களிறுகள் மிகுதியாக இருந்தன; பகைவர்மீது அச்சமின்றிப் பாயும் பரிகள் இருந்தன; வில் வீரரும் வாள் வீரரும் மிக்கிருந்தனர். அப்பெருமகன் தன் படைகளைக் கொண்டு சேர சோழரை வென்றான்; குறுநில வேந்தர் குறும்பை அடக்கினான்.

## நெடுஞ்செழியன் போர்ச் சிறப்பு

நீ வடிம்பு அலம்ப நின்ற பாண்டியனைப் போல் வீரத்திற் சிறந்தவன்; பகைவரது அணுகுவதற்கரிய காவற் காட்டையும் உயர்ந்த மதிலையும் பலவகை அரண்களையும் மதியாது சென்று பகைவர் நாட்டைப் பிடிப்பவன்; மலை நாட்டின் ஒரு பகுதியான குட்ட நாட்டுக் கடற்கரையில் நெய்தல் நில மகளிர் குரவை யாடுவர்; ஊர்தோறும் விழாக்கள் கொண்டாடப் பெறும். அந்நாட்டின் வயல்களுக்கு இடாவால் நீர் இறைக்கும் ஓசையும், கபிலை ஏற்றத்தால் நீர் இறைக்கும் கம்பலையும, கதிர்களைக் கடா விடுகின் றவர் சும்மையும், எருதுகளின் கழுத்தில் கட்டப் பெற்ற மணி ஒலியும், கதிர்களையும் பிறவற்றையும் தின்னவரும் கிளி முதலிய பறவைகளை ஓட்டும் ஓசை யும், மகளிர் ஆடும் குரவைக் கூத்தின் ஓசையுடன் கூடி ஒலித்துக்கொண்டிருக்கும். அந்நாட்டை ஆண்ட குட்டுவன் இசைப்புலவர்களை நன்கு ஆதரிப் பவன்; அவர்களுக்குப் பிடியோடு கன்றும் களிறும் கொடுப்பவன்; விலையுயர்ந்த அணிகலன்களையும் அளிப்பவன். நீ அவனை வென்று வாகை சூடினை.

மலை வளம் நிறையப்பெற்ற சேரனும், சோற்று வளம் நிறையப்பெற்ற சோழனும் குறுநில மன்னர் ஐவரும் நின்னை இளைஞன் என்று தவறாகக் கருதிப் போருக்கு வந்தனர். நீ அவ்வெழுவரையும் தலையாலங்கானம் என்னும் இடத்தில் தாக்கி முறி யடித்தனை; தமிழக வரலாற்றில் அழியாப் புகழ் பெற்றனை. கொற்கைப் பெருமானே, முருகப் பெருமான் பகைமேற் செல்லுவது போல வீரம் மிகுந்த பகைவர்மீது மட்டும் நீ போர்புரியச் செல்வை; அவர்களை வென்று நின் ஏவல்கேட்கும்படி

செய்வை; நினது நண்பர் குடியை உயர்த்துவை; நண்பர்க்கு நன்மையும் பகைவர்க்குத் தீமையும் செய்தல் பாண்டியர் இயல்பு என்பதை நின் செயலிற் காட்டுவை.

நீ பகைவர்மீது படையெடுத்துச் சென்ற காட்சியை என்னென்பது! போருக்குப் புறப்பட்ட நின் படையினது பேரொலியால் விண் அதிர்ந்தது. பரிகள் விரைந்து சென்றதால் தூசி மேல் நோக்கி எழுந்தது; போர்ப்பறைகள் முழங்கின. இவ்வாறு ஆரவாரத்தோடு சென்ற நினது படை, பகைவர் நாட்டில் செய்த செயல்கள் பலவாகும்: நின் படை வீரர் காவற் காட்டைத் தீயிட்டு அழித்தனர்; பகைவருடைய கோட்டை மதில்களைக் கைக்கொண்டனர்; மருத நிலங்களை நெருப்பு உண்ணச் செய்தனர். இச்செயல்களால் நாடு காடாயிற்று; பசுக்கள் தங்கியிருந்த இடங்களில் புலி முதலியன தங்கலாயின. ஊர்களாயிருந்த இடங்கள் பாழாயின. இந்த அழிவினால் அந்நாட்டு மங்கையர் தாம் வழக்கமாக ஆடிவந்த துணங்கைக் கூத்தையும் குரவைக் கூத்தையும் மறந்தனர். சான்றோர் இருந்த பெரிய அம்பலங்களில் பேய் மகளிர் உலவி ஆடினர். ஒவ்வொரு கோட்டை வாயிலிலும் காவலர்க்குப் பதிலாகத் துன்புற்ற மகளிர் நின்று உதவிக்குப் பிறரை அழைத்தனர். பசியால் வருந்திய குடிகளைக் காக்க அவர்தம் சுற்றத்தார் பிற நாடுகளிலிருந்து சென்றனர். பெரிய மாளிகைகளில் வெந்து கரிந்த குதிர்களில் கூகை சேவல் பேட்டுடன் இருந்து அலறியது. செங்கழுநீர் இருந்த பெரிய பொய்கைகளில் நீர் இல்லாமையால், யானையையும் மறைக்கத் தகும் உயரமுடைய வாட்கோரையும் சண்பங் கோரையும் நெருங்கி வளர்ந்தன. போருக்கு முன்

செழிப்பாக இருந்த வயல்களில் போருக்குப் பின் பெண் பன்றியும் ஆண் பன்றியும் ஓடித் திரிந்தன. இவ்வாறு நின் பகைவர் நாடுகள் பாழாயின.

இங்ஙனம் பாழ்பட்ட நாடுகளை நன்னிலைக்குக் கொணர நீ அங்குத் தங்குவாய் ஒரு பொய் கூறித் தேவர் உலகத்தை அமுதத்துடன் பெறுவதாயினும் நீ அதை விரும்புவதில்லை; பழியுடன் வரும் பெரும் செல்வத்தையும் விரும்புவதில்லை; பிறர்க்கு வழங்குவதால் வரும் புகழ் ஒன்றையே விரும்பும் இயல்புடையை; மக்களால் வணங்கப்படும் பிறைமதி நாள் தோறும் வளர்வது போல உன் பிற்கால மரபினரின் வெற்றியும் நன்கு சிறப்பதாகுக! நின் பகைவரது பெருமை தேய்பிறை போல நாள் தோறும் தேய்வதாகுக.

**நாட்டுச் சிறப்பு; குறிஞ்சி**

பாண்டிய நாடு குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலப்பகுதிகளையுடையது. குறிஞ்சி நில மக்கள் அகிலையும் சந்தனத்தையும் வெட்டி, மேட்டு நிலத்தில் தோரை நெல்லை விதைப்பார்கள்; நெடிய தாளினையுடைய வெண்சிறு கடுகையும் பயிராக்குவார்கள்; ஐவன நெல் என்னும் வெள்ளிய நெல்லையும் பயிராக்குவர்; இஞ்சியும் மஞ்சளும் மிளகும் பயிரிடுவர். மலைப் பக்கங்களில் தினை பயிராக்கப்படும். அக்குறிஞ்சி நிலத்தில் தினையை உண்ணவரும் கிளிகளை மலை நாட்டார் ஓட்டும் ஆரவாரமும், அவரைத் தளிரைத் தின்ன வரும் ஆமாவை ஓட்டும் கானவரது ஆரவாரமும், குறவனால் தோண்டப்பட்ட மூடின வாயையுடைய பொய்க்குழியிலே விழும் ஆண் பன்றியைக் கொன்றதனால் உண்டான ஆரவாரமும், வேங்கைப் பூவைப்

பறிக்கும் மகளிர் 'புலி, புலி' என்று கூறும் ஆரவாரமும், கருநிறப் பன்றியைக் கொல்லும் புலியினது ஆரவாரமும், அருவி நீர் வழிகின்ற அடுக்கங்களில் மாறி மாறி ஒலிக்கும். இத்தகைய சிறப்புடைய குறிஞ்சி நிலப்பகுதி நமது பாண்டிய நாட்டில் இருக்கின்றது.

### பாலை

மலையும் மலைசார்ந்த இடமும், காடும் காடுசார்ந்த இடமும் ஆகிய இரண்டும் தத்தம் இயற்கை வளத்தை இழந்து, ஒன்றும் விளையாத பாலை நிலம் போலச் சில காலங்களில் காட்சியளிக்கும். ஆங்கு ஊகம்புல் வைக்கோள் என்று சொல்லும்படி காய்ந்திருக்கும். மணல் வெளிகளில் சூறுவளிக் காற்று அடிக்கும். அதனால் மணற்குன்றுகள் திடீரெனத் தோன்றும். பாலை நிலத்தில் வழிப்பறி செய்யும் கள்வர் திரிவர். வேற்று நாட்டிற்குச் செல்லும் வணிகரையும் வழிப் போக்கரையும் அவர்கள் துன்புறுத்தி, அவர்தம் பொருள்களைக் கவர்ந்து செல்வர். இத்தகைய தீங்கு வணிகர்க்கும் வழிப் போக்கர்க்கும் உண்டாகா வாறு காக்க வேந்தன் வீரர்களைப் பாலை நிலத்திற்கு அனுப்புவது வழக்கம். அப்பாண்டி வீரர்கள் அந் நிலத்தில் இலைகொண்டு வேயப்பட்ட குடில்களில் தங்குவர்; மான்தோலாகிய படுக்கை விரித்துப் படுப்பர்; வில்லும் அம்பும் ஏந்திய கையராய்ப் பாலை நிலத்து வழிகளில் திரிந்துகொண்டிருப்பர். இத்தகைய பாலை நிலப் பகுதியும் நமது பாண்டிய நாட்டிலுண்டு.

### முல்லை

காடும் காடுசூழ்ந்த இடமும் முல்லை எனப்படும். முல்லை நிலத்தில் வெண்ணிற முசுட்டைப் பூக்களும்

முல்லை மலர்களும் கொன்றை மலர்களும் பாறைகள் மீது உதிர்ந்து கிடக்கும். வரகும் நெல்லும் பயிராகும். முல்லை நில மக்கள் தினை முதலியவற்றை அறுவடை செய்வர். முல்லை நிலத்து நீர் நிலைகளை நெய்தற் பூக்கள் மலர்ந்து அழகு செய்யும். மான்கள் பிணைகளோடு சுழன்று துள்ளும். இத்தகைய முல்லைநிலப் பகுதி நமது பாண்டிய நாட்டில் உண்டு.

**மருதம்**

மலைகளிற் பெய்யும் மழை நீர் ஆறாக ஓடி மருத நிலத்தை வளப்படுத்தும். ஆற்று வெள்ளம் குளம் முதலிய நீர் நிலைகளில் தேங்க, அந்நீரின் பாய்ச்சலால் வயல்களில் யானையும் மறையுமாறு நெற்பயிர் ஓங்கி வளரும். குளங்களிலும் குட்டைகளிலும் தாமரை, ஆம்பல், நீலம் முதலிய பன்னிற மலர்கள் மலரும். அவற்றிலுள்ள தேனை உண்ண வண்டுகள் பெருவிருப்பத்தோடு வட்டமிட்டுக்கொண்டிருக்கும். பரதவர் நீர் நிலைகளிலுள்ள மீன்களைப் பிடித்து வந்து விற்பர். கரும்பாலைகளால் உண்டாகும் கம்பலையும், களை பறிக்கும் ஓதையும், நெல்லறுப்போர் ஓசையும், கள்ளுண்ட களமர் செய்யும் ஆர்ப்பும், வானளாவிய பரங்குன்றத்தில் விழாக்கொண்டாடும் ஒலியும் அடிக்கடி கேட்கும். ஆடவரும் பெண்டிரும் வையைப் புதுப்புனலில் நீராடும் ஓசையும், பறவைகளின் ஒலியும், பாணரின் பாட்டொலியும் மருத நிலத்தில் நிறைந்திருக்கும். இத்தகைய வளமுடைய மருத நிலப் பகுதி நமது பாண்டிய நாட்டில் அமைந்துள்ளது.

**நெய்தல்**

நெய்தல் நில மக்கள் மீன் பிடித்தும் முத்தெடுத்தும் விற்றுப் பிழைப்பவர். யவனர் முதலிய வெளி

நாட்டவர் குதிரை முதலிய தம் நாட்டுப் பொருள் களைப் பாண்டிய நாட்டுத் துறைமுகங்களில் இறக்கு மதி செய்து அவற்றிற்கு மாருக வெளுப்பும் கருப்புக்கட்டியும் கூட்டிப் பொரித்த புளி, மீன் உணக்கல் முதலிய பல பொருள்களைத் தமது கப்பல் களில் ஏற்றுமதி செய்வர்.

மன்னர் பெரும! இந்த ஐவகை நிலங்களையும் பெற்ற நினது நாட்டில் தள்ளாத விளையுளாலும் தாழ்விலாத செல்வத்தாலும் நின் குடிகள் வளமுற்று வாழ்கின்றனர்.

### வையைக் காட்சி

வையை யாற்றின் கரையில் அமைந்துள்ளது பாண்டியர் தலைநகரமாகிய மதுரை. வையை யாற் றின் இருபுறங்களிலும் மரங்கள் அடர்ந்த சோலைகள் உண்டு. மரக்கிளைகளில் மந்தியும் கடுவனும் மகிழ்ந்து விளையாடும். சோலைகளில் மயில்கள் ஆரவாரிக்கும். உயர்ந்த மலையுச்சியிலிருந்து வீழ்ந்து ஓடுகின்ற நீர் வையையாகப் பரந்து பாய்கின்றது. ஆற்றின் இரு மருங்கிலும் இளமரக்காக்களும் இனியபொழில்களும் நிறைந்து தோன்றும். வையை நீரில் இப்பொழில் களிலும் காக்களிலுமிருந்து உதிரும் கோங்குமுதலிய மலர் வகைகள் பரந்து நீரை மூடிக்கொண்டு செல் லும். ஆங்காங்குக் கரையோரம் பூஞ்சோலைகள் அமைந்திருக்கும். அச்சோலைகளுக்கு இடையே நெடுங்காலமாக அமைந்த பெரிய பாணர் குடியிருப் புக்கள் காணப்படும்.

### மதுரை : அகழ் முதலியன

மதுரை மாநகரைச் சூழ இருந்த அகழி மிக்க ஆழமுடையது; நீலமணி போலும் நீரை உடையது.

அகழிக்கு அப்பால் இருந்த கோட்டை மதில் வானுலகிற் செல்லும்படி உயர்ந்த பல கற்படைகளை உடையது. அதன் வாயில் வன்மையும் தொன்மையும் வாய்ந்தது. நெய் பலகாலம் இடுதலால் வாயிற் கதவு கருமை நிறம் எய்தியது; திண்மை வாய்ந்தது. வாயிலுக்கு மேல் உள்ள மாடம் மஞ்சு தவழும் மலைபோல ஓங்கி இருக்கும். கோட்டை வாயில், வையையாறு இடைவிடாது ஓடுவது போல மக்களும் விலங்குகளும் இடையறாது செல்லுதலை உடையது.

**அகநகர்**

கோட்டைக்குள் இருக்கும் அகன்ற தெருக்களின் இருபுறங்களிலும் சாளரங்கள் அமைந்த வீடுகள் உயர்ந்து காணப்படும். கடைத்தெருவில் பல மொழிகளைப் பேசும் பல நாட்டு மக்களின் பேச்சொலி எழும். விழாவைப் பறையறைந்து அறிவிக்கும் ஓசை காற்றால் கலக்குண்ட கடல் ஓசை போல முழங்கும். கோவில் தோறும் பலவகை இன்னியங்கள் கறங்கும். அதனைக்கேட்ட நகர மாந்தர் தெருக்களிற் குழுமி ஆரவாரம் செய்வர். கடைகளில் கட்டப்பட்ட அடையாளத் துகில்களும், விழாக்களை உணர்த்தும் கொடிகளும், படைகளின் வெற்றியை அறிவிக்கும் கொடிகளும் பலவகைக் கட்டடங்களின் உச்சியில் அணிபெற அசைந்தாடும்.

**படைமாட்சி**

நின்னுடைய கரிகள் சினம் மிகக் கொள்ளுமாயின் பரிக்கோற்காரரைக் கொல்லும்; பாகரைத் தூக்கி வீசும்; தம்மை இறுகப் பிணிக்கும் வலிய தறியை முறிக்கும். இத்தகைய மதக்கரிகளை உடையது நினது யானைப்படை. நினது பரிகள் காற்

றெனக் கடிதிற் செல்ல வல்லவை; வட்டமாகவும் நேரமாகவும் ஓட வல்லவை. இத்தகைய குதிரைகள் நினது குதிரைப் படையை அணி செய்கின்றன. ஒவ்வொரு தேரிலும் காற்றைப் பிளந்து கதிரவனைச் சேரப் பறக்கும் அன்னச்சேவலை ஒத்த வெண்ணிறப் பரிகள் பூட்டப்பெறும். வலிமையும் விரைவும் மிகுந்த இக்குதிரைகள் பூட்டப்பெற்ற தேர்ப் படையும் நின்னிடம் உள்ளது. நினது காலாட்படை வில் முதலிய போர்க்கருவிகளைக் கையாளும் வீரர்களைப் பெற்றது.

இந்நால்வகை உறுப்புக்களும் அமைந்த நினது சேனை மதுரை மூதூர்த் தெருக்களில் செல்லும். அக்காலை உணவுப் பொருள்களை விற்பவரும், பன்னிற மலர்களைத் தட்டுகளில் கொண்டு விற்பவரும், பலவகைப் பொடிகளை விற்பவரும், வெற்றிலை முதலியவற்றை விற்பவரும் பாதை ஓரம் ஒதுங்கி இருப்பர்; படைகள் சென்ற பின்பு மீண்டும் தெருக்களில் வந்து பண்டங்களை விற்பர். முகில்கள் கடல நீரை முகக்கினும், ஆறுகள் இடையறாது கலத்தலால் கடல் நீர் வற்றாதது போலப் பொருள்கள் விற்க விற்கப் புதிய பொருள்கள் குவிந்த வண்ணம் இருக்கும். ஆதலால் மதுரைக் கடைத்தெருவில் பொருள்களுக்குக் குறைவு ஏற்படுதல் இல்லை.

**செல்வர் நிலை**

மதுரை மாநகரில் உயர்ந்த மாடங்களில் வாழும் செல்வர் மாலைக் காலத்தில் பூத்தொழில் அமைந்த பட்டாடைகளை உடுப்பர்; இடையில் உடைவாளைக் கட்டுவர். மார்பில் வேப்பமாலையும் செங்கழுநீர் மாலையையும் அணிவர்; தோளில் மேலாடைகள் கிடந்து அசையும். அவர்தம் மார்பில் முத்தாரம் ஒளியுடன்

விளங்கும். அம்பெருமக்கள் மேகத்தை ஒக்கும் ஈகை உடையவர். அவர்கள் காற்றை ஒப்பக் கடிது செல் லும் கதிமிக்க குதிரைகள் பூட்டப்பெற்ற தேர்களில் காலாட்கள் சூழ்ந்து காப்பச் செல்வர்.

செல்வமகளிர் பூத்தொழிலமைந்த வளையல்களை யும் பலவகை அணிகளையும் அணிந்து, அரமியங்கள் தோறும் தோன்றி விழாவினைக் கண்ணுறுவர். மாடங்களில் கட்டியுள்ள கொடிகள் அவர்தம் மலர்ந்த முகங்களை மறைக்கும். காற்று வீசும்பொழுது அக் கொடிகள் அசைந்து விலகும். அப்பொழுது அச்செல்வ மகளிருடைய ஒளிவிடும் முகங்கள் மேகங் கட்கு இடையே தோன்றும் முழுத் திங்களைப் போலக் காட்சியளிக்கும்.

## பல சமயத்தார் செயல்கள்

ஐம்பெரும் பூதங்களையும் படைத்த மழுவேந்திய சிவபெருமானை ஏனைக் கடவுளரின் முதல்வனாகக் கொண்டு மக்கள் விழா இயற்றுவர்; மாயோன், முருகன் முதலிய தெய்வங்களுக்கு வாடாத மலர் களைச் சூட்டுவர்; அவியாகிய உணவினைப் படைத்து வழிபடுவர். அப்பொழுது பல்லியங்கள் முழங்கும். பௌத்த சமயத்தைச் சார்ந்த பெண்டிர் தம் கணவ ரொடுகூடி, தாமரைப்பூவை எடுத்துச் செல்வதைப் போலச் சிறு பிள்ளைகளை எடுத்துக்கொண்டு பூசைக்கு வேண்டும் மலர்களையும் தூபங்களையும் தாங்கியவராய் பௌத்தப் பள்ளிகளுக்குச் செல்வர். அதர்வணவேதம்ஒழிந்த முதல்மூன்று வேதங்களைத் தமக்குப் பொருள் தெரியும்படி ஓதி யாகங்கள் செய்து தேவர் உலகத்தை இவ்வுலகிலேயே அடை கின்ற முனிவர்கள், மலையை உள்வெளியாக வாங்கி இருப்பிடம் ஆக்கினாற்போன்ற பள்ளியிலிருந்து

அறங்கூறுவர். அங்குச் சிலர் சென்று அறம் கேட்பர். சமணமுனிவர் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்கால நிகழ்ச்சிகளையும் சொல்ல வல்லவர்; வானோர் உலகிலும் ஏனோர் உலகிலும் நிகழும் எல்லாவற்றையும் தமது நெஞ்சால் அறிந்து கூறவல்லவர்; தமக்கென்று அமைந்த விரதங்களைக் கடுமையாகப் பின்பற்றுபவர்; அவ்விரதங்களால் இளையாத உடலினை உடையவர்; பலவகைக் கலைகளிலும் ஆன்று அவிந்து அடங்கிய அறிவினை உடையவர். அப்பெருமக்களிடம் இல்லறச் சமணர் பூவும் புகையும் ஏந்திச்சென்று அறம்கேட்பர். சமணப் பள்ளிகளில் குண்டிகை அமைந்த நூல் உறி தொங்கும். சமணர் கோவில் குளிர்ந்த குளம்போலக் காணப்படும். கோவிற்சுவர்கள் செம்பாற் செய்யப்பட்டவை போலச் சிவந்து காணப்படும். அச்சுவர்கள்மீது ஓவியங்கள் எழுதப்பட்டிருக்கும். கோவிலைச் சுற்றிலும் சோலைகள் சூழ்ந்திருக்கும்; அவற்றில் சமண முனிவரது அறம் கூறும் மேடைகள் அமைந்திருக்கும்.

### அறங்கூறவையம்

இப்பள்ளிகளுக்கும் கோவிலுக்கும் அப்பால் அறங்கூறவையம் இருக்கும். வழக்குக் கொணர்வோர் 'நடுநின்று கூறுவரோ, கூறாரோ' என்று கொள்ளும் ஐயத்தையும், தோல்வியால் விளையும் துன்பத்தையும். அவர்கள் பொருள்கள்மேல் வைத்த பற்றையும் போக்கி, இருதிறத்தார் பாவத்தினையும் நடுவுநிலையினின்று ஆராய்ந்து முடிவு கூறி, அறம் வழங்கும் அதிகாரிகள் ஆங்கு இருப்பர்.

### பலவகைத் தெருக்கள்

அடுத்துக் காணப்படுவது அமைச்சர் தெரு. அமைச்சர் தம் அரசனிடமுள்ள நன்மையும் தீமை

யும் உணர்ந்து, தீய நெறியில் ஒழுகாது அவனை அடக்குவர்; நாட்டு மக்களின் நலனைக் காப்பாற்றுவர்; பொலிவுசான்ற தலைப்பாகை அணிந்திருப்பர்; பெருமைசான்ற காவிதிப் பட்டம் பெற்றிருப்பர்; இத்தகைய அமைச்சர் தெருவுக்கு அப்பால் வணிகர் தெருக்கள் நகரத்தை அழகு செய்யும். அத்தெருக்களில் பல நாட்டு வணிகரும் வாழ்வர். புரோகிதர், ஒற்றர், தூதுவர், தானைத்தலைவர், படைவீரர் முதலியோர் வாழும் தெருக்களும் அடுத்தடுத்து அமைந்திருக்கும்.

**அந்திக்கடை**

அறுத்த சங்கை வளையல் முதலியனவாகக் கடைபவரும், அழகிய மணிகளைத் துளையிடுபவரும், பொற்கொல்லரும், பொன்னின் தரத்தை அறுதியிடும் பொன் வணிகரும், ஆடை விற்பவரும், பூவும் புகையும் விற்பவரும், சிறந்த ஓவியரும், நெசவுத் தொழில் வல்லாரும், வேறு தொழில்களில் வல்லார் பலரும் கூடி அந்திக் கடையில் வாணிகம் செய்வர். அவர்கள் எழுப்பும் ஆரவாரம், சேரனது அவைக் களத்தில் பல சமயத்தாரும் கூறும் தருக்கங்களால் உண்டாகும் ஆரவாரத்தை ஒத்திருக்கும். இரையை நிறைய மேய்ந்து குஞ்சுகளுக்கு இரைகொண்டு அந்திக் காலத்து மீள்கையில் பலவேறுபட்ட பறவைகளின் ஓசை எழுவதுபோலப் பல நாட்டு வணிகர் பாண்டிய நாட்டிற் செய்த பேரணிகலன்களைக் கொண்டு போதல் காரணமாகவும், பல நாட்டுப் பண்டங்களை இறக்குமதி செய்யும் காரணமாகவும் ஒல்லெனை முழங்கும் ஓசை மிகுதியாகும்.

**அறக்கூழ்ச் சாலைகள்**

பீடு மிக்க மாட மதுரையில் அறக்கூழ்ச் சாலைகள் உண்டு. அவற்றில் வடிவு வேறுபட அழகு

பெற்ற பலவகை மாம்பழங்களையும், பலாப்பழச் சுளைகளையும், வாழை முந்திரிகை முதலிய பழ வகைகளையும் வேறுபட்ட பல வடிவினையுடைய பாகற்காய் வாழைக்காய் வழுதுணங்காய் முதலிய காய்களையும், நன்றாகத் தழைத்து வளர்ந்த இலைகளையுடைய இலைக் கறிகளையும், சிறந்த ஊன் சோற்றையும், பல வகைக் கிழங்குகளுடனே பாற்சோறு முதலிய வற்றையும் ஏழைகட்கும் இரவலர்க்கும் கொண்டு வந்து இடுவர். அங்ஙனம் இடும்போது எழுகின்ற ஓசை மிகப் பெரிது.

## முதல் யாமம்

இரவின் முதல் யாமத்தில் மகளிர் செங்கழுநீர் மாலை கட்டுவர்; பலவகை அணிகளை அணிவர்; கூந்தலுக்கு மயிர்ச்சாந்து ஊட்டுவர்; மெல்லிய நூலாற் செய்த ஆடைகளுக்கு மணக்கும் அகிற்புகை ஊட்டுவர்; நெடிய ஒளியினையுடைய விளக்குகளை ஏற்றுவர். திருமால் பிறந்த ஓணநாள் விழா இவ் யாமத்தில் நடைபெறும். அப்பொழுது போரிற் சிறந்த மறவர், முன்பு நடைபெற்ற போரில் பட்ட வடுக்களோடு தெருக்களில் மகிழ்ந்து திரிவர். குழந்தைகளைப் பெற்றுப் புனிறு தீர்ந்த மகளிர் குளத்துநீரில் நீராடுவர். செல்வமகளிர் மகப்பேறு வேண்டித் தெய்வத்தைப் பரவுவர். அப்பொழுது பல்லியங்கள் முழங்கும். தேவராட்டி நற்சொல் கூறுவாள். பின்பு யாழில் செவ்வழிப்பண் பாடப்படும். அப்போது பல இன்னியங்கள் கறங்கும். முழவும்சிறு பறையும் ஒலிக்கும். மகளிர் மயில்போல மெல்ல நடந்து பாற்சோறு முதலியவற்றை உண்பர். இங்ஙனம் இந்நிகழ்ச்சிகள் ஒரு பக்கம் நடைபெற, வேறொருபக்கம் வேலன் முருகக்கடவுள் ஏறப்பெற்ற

வனைய் ஆடுவன். அப்பொழுது குறிஞ்சிப் பூவைத் தலையிற் சூடிய மகளிர் முருகனை வழிபடுவர். அவர்கள் தம்முள் தழுவிக் கைகோத்து மன்றுகள் தோறும் குரவைக் கூத்து ஆடுவர். அங்குப் புனைந்துரைகள் பேசப்படும்; பாட்டுகள் பாடப்படும். இங்ஙனம் பலராலும் உண்டாகும் பலவகை ஓசை, நன்னன் என்ற வள்ளலது பிறந்த நாள் விழாவில் உண்டாகும் ஓசையை ஒத்திருக்கும்.

## இரண்டாம் யாமம்

இரண்டாம் யாமத்தில் சங்குகளின் ஆரவாரம் அடங்கிக் கிடக்கும். சட்டக்காலை வாங்கித் தங்கள் கடைகளை மூடிவிட்டு மகளிர் துயில்வர். மெல்லிய அடையினையும், பருப்பும் தேங்காயுமாகிய உள்ளீடுகளோடே கண்டசருக்கரை கூட்டிப் பிடித்த பலவகை அப்பங்களையும், இனியபாகோடு சேர்த்துக் கரைத்த மாவினையும் உடைய அப்பவாணிகர் அவற்றை வைத்தபடியே இருந்து உறங்குவர். விழவின்கண்ணே கூத்தாடும் கூத்தர் அதனை விடுத்துத் துயில் கொள்வர். ஒலி நிறைந்து அடங்கின குளிர்ந்த கடலைப் போல ஊர் அடங்கியிருக்கும்.

## மூன்றாம் யாமம்

மூன்றாம் யாமம் மிகவும் அமைதி நிறைந்தது. அப்பொழுது பேய்களும் மக்களைவருத்தும் தெய்வங்களும் உருவு கொண்டு உலவித்திரியும். துயிலாத கண்களையும் அஞ்சாத நெஞ்சத்தையும், களவு நூல்—காவல் நூல்களில் திப்பிய புலமையும் உடைய ஊர்க்காவலர் கள்வர்களை வேட்டையாடித் திரிவர். அக்காவலர் பேய் முதலியவற்றிற்கு அஞ்சார்; விழித்த கண் இமைக்குமளவிலே மறைகின்ற கள்வர்

ஒதுங்கியிருக்கின்ற இடங்களையும் அறியும் ஆற்றல் வாய்ந்தவர்; குறி தவறாது எய்யும் அம்பினை உடைய வர்; தேரோடும் தெருவில் நீர் திரண்டு ஒழுகும்படி மழை பெய்யும் நள்ளிரவாயினும், சலிப்பின்றி உலா வுவர். அக்காவலர் கரிய நிறத்தினர்; கரிய உடை யினர்; வாளேந்திய கையினர். அவர்தம் அரை யில் மெல்லிய நூலேணி சுற்றப் பெற்றிருக்கும்.

## வைகறைச் செய்திகள்

வைகறையில் அந்தணர் வேதங்களை ஓதுவர். அவ்வொலி, அலரும் பருவத்தையுடைய அரும்பு மீதிருந்து வண்டுகள் இசை பாடுவதுபோல் இருக் கும். பாணர் யாழைத்தழுவி மருதப்பண்ணை எழுப்பு வர். குத்துக்கோற்காரர் யானைக்குக் கவளம் கொடுப் பர். பரிகள் புல்லுணவை மெல்லும். பல பண்டங் களை விற்கும் கடைக்காரர் தம்கடைகளை மெழுகுவர். கள்ளை விற்போர் சுறுசுறுப்பாக அதன் விலையைக் கூறி விற்பர். கள்ளுண்டவர், தழுதழுத்த குரலிற் பேசுவர். அரண்மனையில் சூதர் வாழ்த்துவர்; மாகதர் மன்னன் புகழ் கூறுவர்; வைதாளிகர் நாழிகை இசைப்பர்: பள்ளிஎழுச்சி முரசம் முழங் கும்; நகரத்தில் ஏறுகள் ஆரவாரஞ் செய்யும்; கோழிச் சேவல்கள் கூவும்; மயில்கள் அகவும்; களிறுகள் பிளிறும்; கரடி முதலிய வலிய விலங்கு கள் கூட்டிலே வாழும் புலியுடனே முழக்கம் செய் யும்;[12] மகளிர் வீட்டு முற்றத்தைப் பெருக்குவர்.

பாண்டிய வீரர் பகை வீரரைப்பொருதுஓட்டிய பொழுது, போர்க்களத்திலே அவர்கள் இட்டுச்

12. சங்ககால மதுரைமாநகரில் உயிர்க்காட்சிச்சாலை இருந்தது போலும்!

சென்ற யானைகள் பல; அவ்வீரர் பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்து வந்த குதிரைகள்பல; பசுக்களும் பலப்பல. பாண்டியனைத் தொழுது மாற்றரசர் பலர் காணிக்கையாகக் கொடுத்த அணிகலன்களும் பிற பொருள்களும், கங்கையாறு கடலிற் கலந்தாற் போல அளந்து முடிவு அறியாதபடி விடியற்காலத்தில் நிறைந்திருக்கும். இக்காட்சியால் மதுரை தேவர் உலகம் போல விளங்கும்.

**காலையிற் காவலன்**

பெரும, நீ வைகறையில் துயில் எழுவை; காலைக்கடன்களை முடித்தவுடன் நீராடி வழிபடுவை; மார்பில் சாந்து பூசி முத்தாரம் அணிவை; அன்றலர்ந்த மலர்களால் ஆகிய மாலையைச் சூடுவை; நின் கையில் வீரவளை விளக்கம் பெற்றிருக்கும்; மணிகள் அழுத்தின பொன் மோதிரம் பொலிவு பெற்றுத் தோன்றும்; கஞ்சியிட்டுத் தோய்த்த கலிங்கத்தை உடுப்பை; அதன்மீது அணியவேண்டும் அணிகளை அழகுறஅணிந்து அரசவையில் வீற்றிருப்பை.

பெருக்கெடுத்து வருகின்ற ஆற்றுநீரைக் கல்லணை நின்று தாங்கினாற் போல, பகைவர் படையை நடுவே தடுத்து அவரை வென்ற நின் படைத்தலைவர் காலையிற்போந்து நினது வெற்றியை வாழ்த்துவர். அப்போது நீ, 'குதிரை வீரரைக் கொணர்மின்; பகைவரிடம் அகப்பட்டு அழுந்திய வீரரை அழைமின்: பகைவர் நடுவே சென்று யானைகளை எறிந்து சோர்ந்த வீரரை வரவிடுமின்; போரில் நமக்கு உயர்ந்த உதவிகளைச் செய்த உழைப்பாளரை ஈண்டுய்மின்; மண்டலத் தலைவரை அழைத்து வம்மின்: பிறரையும் கொணர்மின், என்று கூறுவை; 'பாணர், பாடினி, புலவர்,

கூத்தர் முதலியோர் வருக என அழைத்து, அவர்களுக்குத் தேரையும் களிற்றையும் ஆடையணிகளையும் வழங்கி மகிழ்வை. வீரர்களை அழைத்து அவர்கட்கு உனது அகங்கனிந்த வாழ்த்துதலைக் கூறி, அவரவர் வரிசைக் கேற்பப் பரிசில் நல்கி ஒவ்வொருவரையும் மகிழ்விப்பை.

## அறிவுரை

பாண்டியர் பெருமானே! நீ பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போலவும், நிலந்தரு திருவிற் பாண்டியனைப் போலவும், கல்வி-கேள்வி-ஒழுக்கங்களிற் சிறந்த பெருமக்களால் புகழப்பெறும் சிறப்போடு விளங்குவாயாக! இந்நாட்டுக் குடிமக்களை வளப்படுத்தி வாழ்வாயாக! அரிய நூல்களைக் கற்றுப் புகழை யாண்டும் பரப்பிக் கடலின் நடுவே தோன்றும் சூரியனைப் போலவும் நாண்மீன்களுக்கு இடையில் விளங்கும் திங்களைப் போலவும் சுற்றத்தாருடன் பொலிவு பெறத் தோன்றுவாயாக! நினக்கெனவரையப்பட்ட நிறைநாள் முழுமையும் சிறப்புற்று வாழ்வாயாக! ஐம்புல நுகர்ச்சியைப் பெரிதெனக் கருதாது, பேரின்பத்தையே பெரிதெனக் கருதி இறைவழிபாட்டிற் பெரிதும் ஈடுபடுவாயாக.''

# IV. சேரன் செங்குட்டுவன்

## 1. இளங்கோ அடிகள்


### நெடுஞ்சேரலாதன்

தமிழகத்தின் மேலைக் கடற்கரைப் பகுதியாகிய சேரநாட்டைச் சங்க காலத்தில் ஆண்ட சேரவேந்தர் பலராவர். அவர்கள் சோழ பாண்டியரைப் போலவே பைந்தமிழைப் பாங்குற வளர்த்து வந்தனர்; தமிழ்க் கலைஞரைத் தண்ணளியோடு புரந்துவந்தனர். சங்ககாலச் சேரவேந்தருள் புகழ் மிக்கவன் **நெடுஞ்சேரலாதன்** என்பவன். அவன் இமயம்வரை சென்றுவந்த காரணத்தால் **இமய வரம்பன்** எனப் பெயர் பெற்றான் என்று அறிஞர் கூறுவர். அவன் தோள் வலியும், வாள் வலியும் படைத்தவன்; யவன மன்னர்களை வென்று, அவர் தம் கைகளைத் தளையிட்டு அவரிடமிருந்த பல பொருள் களையும் கொணர்ந்து, தன் குடிகளுக்குக் கொடுத்த வன்: கடலில் உறைந்த தன் பகைவரை அழித்த வன். அச்சேரலாதனின் கோப்பெருந்தேவி நற்சோணை என்ற நல்லாள். அவ்விருவர்க்கும் ஆண் மக்கள் இருவர் பிறந்தனர். அவருள் மூத்தவன் பெயர் செங்குட்டுவன் என்பது; இளையவன் இளங்கோ என்பவன்.

### கணியன்

செங்குட்டுவனும் இளங்கோவும் இளவரசர்க் குரிய கரி ஏற்றம், பரி ஏற்றம், விற்பயிற்சி, வாட் பயிற்சி முதலியன கற்றுச் சிறந்த வீரராய்த் திகழ்ந் தனர்; அரசாட்சிக்குரிய அறநூல்களையும் அரசியல்

# செங்குட்டுவன் வடநாட்டுச் செலவு



நூல்களையும் கற்றுச் சிறந்தனர். தம் மக்களின் அறிவையும் ஆற்றலையும் அறிந்த சேரலாதன் அளவிறந்த மகிழ்வு கொண்டான்.

ஒருநாள் சேரலாதன் தனது நாளோலக்க மண்டபத்திலிருந்தபோது, கணியன் ஒருவன் காவலனைக் காண வந்தான். அவன் சேரலாதனின் இருமருங்கும் அமர்ந்திருந்த செங்குட்டுவனையும் இளங்கோவையும் மாறிமாறிப் பார்த்தான். இளங்கோவின்மீது அவன் பார்வை அழுந்தியது. அவன் எழுந்து அரசனைப் பணிந்து, "மன்னர் பெருமானே, நும்மக்கள் இருவருள் இளையவரிடமே அரச இலக்கணங்கள் மிகுதியாக அமைந்துள்ளன. அவரே நுமக்குப் பின்பு நாடாளும் நம்பி ஆவர்" என்றான்.

கணியன் கூற்றைக் கேட்ட அவையோர் கலக்கமுற்றனர். அமைச்சரும் தானைத் தலைவரும் பிறரும் மன்னனையும் மக்களிருவரையும் மாறிமாறிப் பார்த்தனர். சேரலாதன் செயலற்று விழித்தான். அவன் முகம் வாட்டமுற்றது. செங்குட்டுவன் முகத்தில் கலக்கம் காணப்பட்டது. இளங்கோவின் விழிகள் சிவந்தன; உடல் வியர்த்தது; உதடுகள் துடித்தன. அவன் கணியனைக் கனன்று நோக்கி, "அறிவற்ற கணியனே, மூத்தவன் இருப்ப இளையவன் அரசு எய்துதல் எவ்வாற்றானும் முறையாமோ? என் தமையன்பால் இல்லாத அரச இலக்கணங்கள் என்பால் அமைந்துள்ளமை எங்ஙனம்? யான் துறவிக்குரிய இலக்கணங்களே அமையப் பெற்றவன். என் உள்ளம் துறவையே நாடுகின்றது. அதுவே எனக்கு இன்பத்தைப் பயப்பது. யான் இன்றுமுதல் துறவியாவேன். இது முற்றிலும் உண்மை. இஃது என்

கூறுநரை" என்று செங்குட்டுவனது கவலை தீரச் செப்பினன்.

சேரலாதன் திடுக்கிட்டான். அவன் இளங் கோவை அணைத்து, விழிநீர் வார, "மைந்தனே, என்ன செயல் செய்தனை! கணியன் கூறிய சொற் களைக் கேட்டு வெகுண்டு துறவியாகத் துணிந்தது முறையோ? நீ நாடாள விரும்பாவிடின் இல்லறம் ஏற்று இனிதிருத்தல் ஆகாதா? தமையனுக்குத் துணைபுரிந்து வாழ்தல் தகாதோ!" என்று கூறி மனம் மறுகினன்.

இளங்கோ தன் தாதையைப் பணிந்து, "எந்தையே, யான் எதனையும் ஆராயாது செய்ய வில்லை. இளமை முதலே துறவறத்தில் எனது உள்ளம் சென்றது. இல்லறத்திலிருந்து தமைய னேடு வாழின், தீயோர் என்னைச் சூழ்ந்து, எனது அறிவை மயக்கி, எனக்கும் என் தமையனுக்கும் பகையை விளைவிக்கலாம். துளக்கற்ற எனது அறிவு அவர்தம் சேர்க்கையால் கலக்குறும். தாங்கள் விரும்பியபடி, யான் துறவுபூண்டு தமைய னுக்குத் துணைபுரிவேன்" என்றான்.

**இளங்கோ அடிகள்**

அதுகாறும் நடந்தவற்றைக் கவனித்து வந்த செங்குட்டுவன், உடன் பிறந்த அன்பு மேலீட்டால் விழிநீர் வாரத் தன் தம்பியை அணைத்துக்கொண் டான். "என் ஆருயிர் இளவலே, உயரிய பண்புகள் நிறைந்த உன்னைப் பின்னவனுகப் பெற்ற யானே பேறு பெற்றவன். தந்தையார் விருப்பப்படி நீ என்றும் என்னுடன் இருத்தல் வேண்டும். என் விருப்பமும் அதுவே" என்று உருக்கமாக உரைத்தான்.

அன்று முதல் இளங்கோ துறவு பூண்டான்; தலைநகரான வஞ்சிமாநகரத்தில் அமைந்திருந்த கோட்டையின் கிழக்கு வாயிலுக்கு அருகே இருந்த ஒரு தோட்டத்தில் தங்கி வாழலானான். அவனை இளங்கோ அடிகள் என்று மக்கள் அழைக்கலாயினர்.

## 2. செங்குட்டுவன் போர்ச் செயல்கள்

### வடநாட்டில் போர்

நெடுஞ்சேரலாதனுக்குப் பின் செங்குட்டுவன் அரியணை ஏறினான். செங்குட்டுவன், தன் தாயான நற்சோணை என்பவள் உயிர்நீத்த பின்பு, அவளது உருவத்தைச் சிலையில் பொறிக்க விரும்பினான்; தான் விரும்பியவாறே சிறந்த கல்லில் தன் தாயைப் போன்ற உருவத்தைச் செதுக்குவித்தான். பின்னர் அவன் அச்சிலையைக் கங்கையாற்றில் நீராட்டிக் கொண்டுவர விழைந்தான்; ஒரு பெரும் படையுடன் அச்சிலையை எடுத்துச் சென்றான். தென்னாட்டரசன் வடநாடு நோக்கி வருவதை அறிந்த வடநாட்டு வேந்தர் பலர் சேரனை எதிர்த்தனர். 'தமிழகத்தின் தனி ஆற்றலைத் தரணி அறியக் காட்டுவேன்' என்று முழக்கமிட்ட சேர வேந்தன் சிங்கவேறெனச் செறுத்துப் பகைவர் கூட்டத்துள் பாய்ந்தான்; பகைத்து வந்த அனைவரையும் கங்கைக் கரையில் முறியடித்தான். அவனது பெரு வீரத்தை நேரில் கண்ட வடவர் ஓடி ஒளிந்தனர். செங்குட்டுவன் தான் எடுத்துச் சென்ற சிலையைக் கங்கையாற்றில் நீர்ப்படுத்துத் தன் நாடு மீண்டான். இதனை,

"கங்கைப் பேரியாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்(கு)
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்"

என்று செங்குட்டுவன் அமைச்சனை வில்லவன் கோதை பாராட்டுகின்றான்.

## கொங்கர் செங்களம்

கொங்கு நாட்டில் **செங்களம்** என்பது ஓரிடம். சோழ - பண்டியர் எக்காரணத்தாலோ சேரனை அவ்விடத்தில் எதிர்த்தனர். வாள் வலியும் தோள் வலியும் படைத்த மாவீரனை செங்குட்டுவன் தன்னையொத்த முடிமன்னரான இருவரையும் கடுமையாகத் தாக்கினன்; அவர்தம் பெரும்படையைச் சின்னபின்னமாக்கினன்; கொடுகூர் என்னும் நகரத்தையும் அழித்தான்[2]. பகை மன்னர் இருவரும் புறங்காட்டினர். சேரன் பெருமிதத்துடன் வாகை சூடினன். இதனை வில்லவன் கோதை,

"நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி
பகைபுறத்துத் தந்தனர் ஆயினும் ஆங்கவை
திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன"[3]

என்று உளமார உரைக்கின்றான்.

---

1. சிலப்பதிகாரம்-காட்சிக் காதை, வரி 160—164.

2. மைசூர் நாட்டுத் தென் பகுதி பண்டைக் காலத்தில் புனல் நாடு என்று பெயர் பெற்றது. அதன் ஒரு பகுதி கொடுகூர் நாடு எனப்பட்டது. அதன் தலைநகரமே கொடுகூர் ஆகும்.

3. காட்சிக் காதை, வரி 152—155.

### கடற் போர்

மேலைக் கடற்கரையை அடுத்த சிறு தீவுகளில் வதிந்த கொள்ளைக் கூட்டத்தார் சேரநாட்டுத் துறை முகங்களுக்கு வந்துகொண்டிருந்த அயல்நாட்டுக் கப்பல்களையும், சேர நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குப் பொருள்களை ஏற்றிச் சென்ற கப்பல்களையும் வழி மறித்துக் கொள்ளையிட்டு வந்தனர். செங்குட்டுவன் தன் அடற்கரிய கடற்படையை ஏவி அக்கொள்ளைக் கூட்டத்தாரை அழித்தான்; அதன் காரணமாகக் 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்' என்னும் விருதுப் பெயர் பெற்ருன்.

### பழையனுடன் போர்

**பழையன்** என்பவன் மோகூர் நாட்டின் சிற்றரசன். **அறுகை** என்பவன் மற்ருெரு சிற்றரசன். அவன் செங்குட்டுவனுக்கு நெருங்கிய நண்பன். பழையனுக்கும் அறுகைக்கும் போர் மூண்டது. அதனுல் செங்குட்டுவன் தன் நண்பனுக்காகப் பரிந்து சென்று பழையனைத் தாக்கிப் போரில் வென்ருன்; அவனது காவல் மரமாகிய வேம்பினைத் தடிந்து அடியோடு அழித்தான். இவ் வெற்றித் திறனை மாடல மறையோன்,

> "பழையன் காக்கும் குழைபயில் நெடுங்கோட்(டு)
> வேம்புமுதல் தடிந்த ஏந்துவாள் வலத்து
> போந்தைக் கண்ணிப் பொறைய" 4

என்று செங்குட்டுவனைப் பாராட்டுவதினின்றும் அறியலாம்.

---

4. சிலப்பதிகாரம், நீர்ப்படைக் காதை, வரி 124—6.

### சோழருடன் போர்

செங்குட்டுவன் காலத்தில் சில யாண்டுகள் சோழ வேந்தனாக இருந்த அவனது அம்மான் உயிர் நீத்தான். அவனுக்குப் பின் அவன் மைந்தன் அரசு கட்டிலில் அமர்ந்தான். அதனால் அழுக்காறு கொண்ட சோழ மரபினர் ஒன்பதின்மர் நாட்டில் கலாம் விளைத்தனர். தனது அம்மான் மகன் ஆட்சிக்குக் கேடு சூழ்வதைக் கேள்வியுற்ற செங்குட்டுவன் பெரும்படையுடன் சென்று, அவ்வொன்பதின்மரையும் **நேரிவாயில்** 5 என்னும் இடத்தில் வென்று ஒடுக்கினான். இவ்வெற்றியால் செங்குட்டுவனது மைத்துனன் சோழர் அரியணையில் நிலைபெற்றான். இவ்வுண்மையை,

"   *   *   *   நின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
வளநா டழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய்!" 6

என்று மாடல மறையவன் மனமாரப் பாராட்டுகின்றான்.

### பிற போர்கள்

பின்பு சேரர் பெருமான் கொங்கணர், கலிங்கர், கருநாடர், கங்கர் என்ற பல்வேறு நாட்டு அரசர்களையும் வென்று வாகை சூடினான். இதனை,

5. உறையூரின் தெற்கு வாயிலின்கண் இருந்த ஓர் ஊர்.
6. நீர்ப்படைக் காதை, வரி 117—123; நடுகற் காதை. வரி 116—7.

"கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வடஆ ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டமென் கட்புலம் பிரியாது' [7]

என்று வில்லவன் கோதை உரைப்பதால் அறியலாம்.

**நட்பரசர்**

இச்சேரர் பெருந்தகையோடு நல்லுறவு கொண்ட வேந்தர் பலராவர். அவருள் மாளுவ மன்னர், இலங்கைக் **கயவாகு வேந்தன்**, ஆந்திரப் பேரரசர் **நூற்றுவர் கன்னர்** [8] என்போர் குறிப்பிடத்தக்கவர்.

## 3. கண்ணகி வரலாறு

**கோவலன் - கண்ணகி**

செங்குட்டுவன் காலத்தில் சோணாட்டுத் தலைநகரமான காவிரிப்பூம்பட்டினத்தில் **கோவலன்** என்னும் பெருங்குடி வணிகன் வாழ்ந்து வந்தான். அவன் செல்வக் குடியில் பிறந்த செம்மல்; எல்லோரும் பாராட்டத்தக்க இனிய பண்பினன். அவனது மனைவி **கண்ணகி** என்னும் பெண்ணரசி. அவள் மதிநலம் மிக்க மங்கை; கணவன் கருத்தறிந்து ஒழுகும் காரிகை. மணமாகிச் சில்லாண்டுகள் வரையிலும் கோவலனும் கண்ணகியும் உடலும் உயிரும் போல ஒன்றி வாழ்ந்தனர்.

---

7. காட்சிக் காதை, வரி 156—159.
8. நூற்றுவர்கன்னர்— 'சத கர்ணி' என்பதன் மொழிபெயர்ப்பு. சாதவாகனப் பேரரசர் இப்பட்டத்தைப் பெற்றிருந்தனர்.

## மாதவியின் காதலன்

*மாதவி* என்னும் மங்கை நல்லாள் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த கணிகை. அவள் கண்டோரை ஈர்க்கும் கட்டழகி; ஆடல் பாடல்களில் வல்லவள். இசையிலும் நடனத்திலும் மிக்க ஈடுபாடு கொண்ட கோவலன், அக்கலைவாணியிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தான்; தன் செல்வத்தை எல்லாம் அவளுக்கே வழங்கினான்; அவளுடன் சிலயாண்டுகள் வாழ்ந்தான். அப்பொழுது மாதவிக்குப் பெண் குழந்தை ஒன்று பிறந்தது. கோவலன் அம்மக விற்கு **மணிமேகலை** எனப் பெயரிட்டுச் சீரும் சிறப்புமாக வளர்த்துவந்தான்.

## கணவனைப் பிரிந்த காரிகை

கணவனைப் பிரிந்து கடிமனையில் வாழ்ந்து வந்த கண்ணகி கவன்றாள். கல்வி கேள்விகளிற் சிறந்த காரிகையாதலின், அவள் கணவனது பிரிவால் உண்டான கவற்சியைத் தன் உற்றார் உறவினர்க்குக் காட்டாது ஒழுகி வந்தாள். கணவனது பிரிவால் அவளது கரிய கூந்தல் பொலிவிழந்தது; நெற்றி திலகத்தை இழந்தது! அவள் அணிகளை வெறுத்து ஒதுக்கினாள்; உயர்ந்த ஆடைகளை வெறுத்தாள். அவளுக்கு வாழ்க்கையே வறண்டு காணப்பட்டது. அவளது துன்ப நிலையை இளங்கோவடிகள் பின் வருமாறு சித்திரித்துள்ளார் :

"... ... ... ...
மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாள்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாள்நுதல் திலகம் இழப்பக்
... .... ... ...
கையறு நெஞ்சத்துக் கண்ணகி." 9

9. அந்தி மாலைச் சிறப்புச்செய் காதை, வரி 50—57.

## திருந்திய கணவன்

காவிரிப்பூம் பட்டினத்தில் நடைபெற்ற இந்திர விழாவின் இறுதியில் கோவலனும் மாதவியும் கடலில் நீராடச் சென்றனர்; நீராடல் நிகழ்ந்த பின்னர் ஆண்டிருந்த மரநிழலில் அமர்ந்தனர். கோவலன் யாழ் எடுத்துப் பண்ணோடு பாட்டிசைத்தான். அவனது பாட்டின் போக்கினையும் நோக்கினையும் பிறழ உணர்ந்த மாதவி மாறுபட்டாள். அதனால் அவள் யாழினை வாங்கித் தானும் வேறு குறிப்புடையாள் போலச் சில பாடல்களைப் பாடினாள். யாழின் வாயிலாக ஊழ்வினை உற்றதாகலின், மாதவி மாயக் காரி என மாறாகக் கருதினான் கோவலன்; கருதியவன் அக்கணமே அவளை விட்டுப் பிரிந்து கண்ணகியை நோக்கிக் கடுகி நடந்தான்; பொய்யன்பினளாகிய பரத்தையை மெய்யன்பினளாகக் கருதி மயங்கினேன்; குன்றனைய பொருளையும் குறைத்தேன்; எனது வாணாளையும் வீணாளாக்கினேன்; இச்செயல் எனக்கு நாணத்தைத் தருகின்றது'' என்று கண்ணகியின்பால் தழுதழுத்த குரலில் கூறினான். கோவலன் குறையிரக்கிறான் போலும் என்று கருதிய கண்ணகி, அவனை அன்புடன் நோக்கி, "சிலம்புள கொண்மின்'' என்று நலம்பட நவின்றாள். உடனே கோவலன், "உனது சிலம்பை முதலீடாகக் கொண்டு பாண்டிய நாட்டில் வாணிகம் செய்து வாழ நினைக்கின்றேன்; இன்றே புறப்படுக'' என்றான். கண்ணகி களிப்புடன் இசைந்தாள்.

## காவலன் பேரூரில் கோவலன்

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளை வழித் துணையாகக்கொண்டு மதுரை நோக்கி நடந்தனர்.

மண்மகளும் அறியா வண்ணச் சிற்றடிகளை உடைய கண்ணகி கணவனுடன் செல்லும் களிப்பினலும் கவுந்தியடிகளின் கருத்துரைகளாலும் உள்ளக் கிளர்ச்சியோடு வழி நடந்தாள்.

மதுரையை அடைந்த கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகள் கூறியவாறு மாதரி என்னும் இடைக் குல மடந்தையின் வீட்டில் தங்கினர். அங்குக் கண்ண கியின் பணிவிடைகளைக் கண்டு வியந்த கோவலன் அவளைப் பலவாறு நயந்துகூறி நலம் பாராட்டினன். பின்னர், அவளுடைய சிலம்புகளில் ஒன்றை வாங் கிக்கொண்டு மாடமதுரையின் பீடிகைத் தெரு வினுள் புகுந்தான்.

அரசமாதேவிக்கு அணிகள் செய்யும் பொற் கொல்லன் ஒருவன் பலரும் புடைசூழப் பாங்குற நடந்து வந்துகொண்டிருந்தான். கோவலன் அவனிடம் தன் தேவியின் சிலம்பினைக் காட்டினன். அக்கொல்லன் அரசமாதேவியின் சிலம்பு ஒன்றைக் கவர்ந்த கள்வன். ஆதலால் அவன் கோவலனையே கள்வனகக் காட்டித் தனது கள்ளத்தை மறைக்கும் உள்ளத்தனகிக் கோவலனை ஓரிடத்தில் இருத்தி அரண்மனையைக் குறுகினன்; அதுகாலை அந்தப் புரத்திற்கு விரைந்தேகிய அரசனைக் கண்டு அடிபணிந்து நின்று, "பெரும, நம் மாதேவியின் காற்சிலம்பு ஒன்று காணமற்போனதன்றே? அக் காற்சிலம்பு கவர்ந்த கள்வன் அதனை மதுரை யிலேயே விற்க வந்துள்ளான்" என்றன். வினை விளையும் காலமாதலின், 'சினையலர் வேம்பன்' தேரா தானகி ஏவலரைக் கூவி, "இவன் காட்டும் கள்வ னிடம் காற்சிலம்பு இருப்பின், அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொணர்க" என்று கட்டளையிட்டுக் கடிது சென்றனன்.

தன் எண்ணம் ஈடேறியது கண்ட பொற்கொல்லன் மகிழ்ந்து காவலருடன் கோவலன் இருப்பிடத்தை அடைந்தான். கோவலனது களங்கமற்ற முகத்தைக் கண்ட காவலர் பலரும் அவன் கள்வனல்லன் என்று முடிவு செய்தனர். ஆயின், பொற்கொல்லனோ தனது களவுநூல் வன்மையால் களங்கமற்ற கோவலனைக் கள்வனே என்று சாதித்தான். அதுகேட்ட அக்காவலருள் கல்லாக் களிமகன் ஒருவன் விரைந்து சென்று கோவலனை வெட்டி வீழ்த்தினான்.

**கண்ணகி வழக்குரைத்தல்**

சிலம்பு விற்கச் சென்ற தன் கணவன் கள்வனென்று தவறாகக் கருதப்பட்டுக் கொலையுண்டான் என்பதைக் கேள்வியுற்ற கண்ணகி பொங்கி எழுந்தாள்; தலைவிரி கோலமாகக் கொலைக்களம் நோக்கிச் சென்றாள்; கொலைவாளுக்கு இரையான கோவலன் உடலைக் கண்டாள். மனமுடைந்த கண்ணகி தனது மற்றொரு சிலம்பைக் கையிலேந்தி மன்னனை நோக்கி விரைந்தாள்.

தலைவிரி கோலத்தோடு அரண்மனையை அடைந்த கண்ணகி வாயிலாளன் மூலம் தனது வருகையை அரசனுக்கு அறிவித்தாள். பாண்டியன் அவளை வரவேற்று அவளது வாய் மொழியைக் கேட்டறிந்தான். கோவலன் கையில் இருந்தது கோப்பெருந்தேவியின் சிலம்பன்று என்பதைக் கண்ணகி தனது ஒற்றைச் சிலம்பை உடைத்துக் காட்டி உறுதிப் படுத்தினாள். "குற்றமற்ற ஒருவனைக் கொல்வித்தேனே; யானோ அரசன்? யானே கள்வன்" என்று கூறிப் பாண்டியன் மயங்கி வீழ்ந்து உயிர் துறந்தான்.

தன் உயிர்கொண்டு அவன் உயிரைத் தேடுபவள் போலக் கோப்பெருந்தேவியும் உயிர்விட்டாள். கண்ணகியின் கடுஞ்சீற்றம் தணியவில்லை; தனது இடமார்பை வலக்கையால் திருகி மதுரையை வலம் வந்து எறிந்தாள்; தீத்திறத்தாரைத் தீ அழிப்பதாக" என்று சபித்தாள்; அவ்வளவில் நகரின் பல பகுதிகளைத் தீ எழுந்து அழித்தது.

**கணவனோடு சேர்தல்**

பின்னர்க் கண்ணகி வையை யாற்றின் வடகரைவழியே மேற்குநோக்கிச் சென்றாள்; குன்றுகளையும் மலைகளையும் தாண்டிச் சேரநாடடைந்தாள்; செங்குன்றில் இருந்த வேங்கைமர நிழலில் நின்றாள். அப்பொழுது விண்வழியே விமானம் ஒன்று வந்தது. அதிலிருந்த கோவலன் அவளை வரவேற்க, அவளும் விமானம் ஏறி மறைந்தாள்.

## 4. செங்குட்டுவன் மலைவளம் காணல்

**செங்குட்டுவன் செலவு**

சேரன் செங்குட்டுவன் தன் தேவி வேண்மாளுடன் இருவகைச் சுற்றமும் சூழ மலைவளம் காணச் சென்று பெரியாற்றின் மணல்மேட்டில் தங்கினான். அவனது இருக்கையைச் சுற்றிலும் கோங்கு, வேங்கை, கொன்றை, மஞ்சாடி முதலிய மணமும் மணிநிழலும் தரும் மரங்கள் பல வளம்பெற வளர்ந்திருந்தன. அம்மரங்கள் பேரியாற்று நீர்ப் பரப்பின் மீது பன்னிற மலர்களை உதிர்த்தன. மதுகரம் முதலிய வண்டினங்கள் இசை பாடின. திருமாலின் மார்பின்கண் விளங்கும் மாலைபோலப் பெரிய மலையினைக் குறுகிட்டுச் செல்லும் பேரியாறு காட்சியளித்தது.

### பலவகை ஒலிகள்

அப்பொழுது அங்குக் குன்றக்குறவரது குரவை ஒலியும், குறத்தியர் பாட்டு ஒலியும், முருகன் வேட மிட்டு ஆடிய வேலனது பாட்டோசையும், தினையைக் குற்றுவாரது உலக்கைப் பாட்டொலியும், தினைப் புனத்தின்கண் கிளி முதலிய பறவைகளை ஓட்டுவதற் குப் பாடிய பாடலின் ஒலியும், தேன்கூட்டை உடைத்த குறவர்களின் முழக்கமும், பறவையின் முழக்கம் போன்ற அருவியின் ஒலியும், புலியுடன் போர்செய்யும் யானையின் முழக்கமும், மரத்தின்மீது கட்டிய பரண்மேல் இருந்தவன் விலங்குகளைத் துரத் தும் ஓசையும், குழியில் வீழ்ந்த யானையைப் பிடிக்கும் யானைப் பாகனது ஒலியும் மலையின் எவ்விடத்தும் ஒலித்தன.

### மலைநாட்டார் வரிசை

மன்னனது வரவை யறிந்த மலைநாட்டு மக்கள் யானைத்தந்தம், அகிற்கட்டைகள், மான்கவரி, தேன் குடங்கள், சந்தனக் கட்டைகள், சிந்துரக் கட்டிகள், அரிதாரம், ஏலம், மிளகு, கூவைமா, கவலைக் கிழங்கு, தெங்கின் பழம், தேமாங்கனி, பலவின் பழம், பூவின் கொடி, காயம், கரும்பு, பாக்குக் குலை, வாழைத்தாறு, புலிக்குட்டி, யானைக்கன்று, சிங்கக்குருளை, குரங்கின் குட்டி, பிள்ளைக்கரடி, கீரிப்பிள்ளை, மலை ஆட்டுக் குட்டி, மான்குட்டி, மயில், காட்டுக் கோழி, கிளி முதலியவற்றைக் கொண்டுவந்து மன்னன் முன் னிலையில் காணிக்கையாக வைத்தனர்.

பின்னர், குன்றக்குறவர் மன்னனிடம், கண்ணகி வேங்கை மரநிழலில் நின்று வானகம் சென்ற செய்தியைத் தாம் நேரில் கண்டதாகக் கூறி அகன்றனர்.

## கடமை உணர்ந்த காவலன்

தனது நாட்டில் இங்ஙனம் வேங்கை மரத்தடியில் நின்று விண்ணகம் சென்ற பெண்மணி யாவள் என்று மன்னன் அறியாது திகைத்தான். அப்பொழுது அங்கு வந்திருந்த தண்டமிழ் ஆசான் சாத்தன் என்ற வண்டமிழ்ப் புலவர் கண்ணகியின் வரலாற்றைத் தெளிவாக எடுத்துக் கூறினார். அது கேட்டு வருந்திய செங்குட்டுவன், "தான் செய்த தவற்றைத் தன் போன்ற மன்னர் செவிகொளா முன்னர்த் தன் உயிர்நீத்த பாண்டியன் பாராட்டத் தக்கவன். வளைந்த செங்கோலை அப்பாண்டியன் தன் உயிர் கொடுத்து நிமிர்த்தினான். நாட்டில் மழை பொய்ப்பினும், மக்களுக்குத் துன்பம் நேரினும் மக்கள் மன்னனையே தூற்றுவர். பொறுப்பு மிக்க அரசகுடியிற் பிறத்தல் துன்பம் தருவதேயன்றி இன்பம் தருவதன்று" என்று கவலையுற்றுக் கூறினான்.

## கோப்பெருந்தேவியின் விருப்பம்

சேரவேந்தன் தன் தேவியை நோக்கி, "பாண்டியன் உயிர்விட்ட உடனே தன்னுயிர் நீத்தவள் கோப்பெருந்தேவி. குற்றமற்ற தன் கணவனைக் கொல்வித்த பாண்டியனையும் மதுரையையும் அழித்து நம் நாடு நோக்கி வந்தவள் கண்ணகி. இவ்விருவரில் வியத்தகு நலத்தோர் யாவர்?" என்று வினவினான். மாபெருந்தேவி மன்னவனை நோக்கி, "பாண்டியனது துன்பத்தைக் காணப்பொறாது உயிர்விட்ட பாண்டிமாதேவி விண்ணகத்தில் சிறப்புறுவாளாக! நமது நாட்டை அடைந்த இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்" என்று முக மலர்ச்சியுடன் கூறினாள்.

## இமயம் செல்ல முடிவு

தனது மாதேவியின் முடிவைக்கேட்ட செங்குட்டுவன் நூலறி புலவரை நோக்கினன். உடனே அமைச்சர் எழுந்து, "பத்தினியின் உருவம் பொறிக்கத் தக்க கல்லைப் பொதியிலினும் இமயத்தினும் தேர்ந்தெடுக்கலாம்; பொதியிலிருந்து தேர்ந்தெடுப்பின், அக்கல்லைக் காவிரியில் நீர்ப்படுத்தல் வேண்டும்; இமயத்திலிருந்து எடுப்பின், கங்கையாற்றில் நீராட்டுதல் வேண்டும்" என்று அறிவுறுத்தனர்.

அதுகேட்ட சேர வேந்தன், "பொதியிலில் கல்லெடுத்துக் காவிரியில் நீராட்டுதல், வீரர் குடியாம் சேரர் குடியிற் பிறந்த எம்போல்வார்க்குச் சிறப்புத் தரும் செய்கையன்று; சேய்மைக்கண் உள்ள இமயத்திலிருந்து கல்லை எடுத்துக் கங்கையில் நீர்ப்படுத்தலே எம்போன்ற அரசர்க்கு ஏற்றது. இம்முயற்சியில் என்னோடு மலையரசன் மாறுபடின், இறந்தோர் இறவாதவர்க்கு உணர்த்திய யாக்கை நிலையாமை ஆகிய காஞ்சியும், தன் பழங்குடியில் பிறந்த உமையைப் பிறையணிந்த பெம்மானுக்குக் கொடுத்த மகட்பாற் காஞ்சியும், தென் திசையிலிருந்து படையெடுத்துச் செல்லும் எனது செலவோடு (வஞ்சியோடு) வட திசைக்கண் எதிராக நின்று தடுத்த பெருங்காஞ்சியும், நிலவின் தண்கதிர்கள் படிந்த உயர்ந்த பெரிய முடியில் மந்தார மாலையோடு வேங்கைப்பூ மாலையையும் இமவான் சூடுதலைக் காண்பேன்" என்றும் வஞ்சினம் கூறினன். இவ்வாறு மலையரசன்மேல் வைத்துக் கூறியதனை, இமயமலையிலிருந்து கல் எடுத்தலைத் தடுக்க முயலும் ஆரிய அரசர் இருப்பின், அவரை முன்னிலைப்படுத்தி உரைத்ததாகக் கொள்ளுதல் வேண்டும்.

செங்குட்டுவனது வீரமுழக்கத்தைக் கேட்ட **வில்லவன் கோதை** என்ற அமைச்சன் பணிந்து, "வேந்தே, கொங்கர் செங்களத்தில் நீ பெற்ற வெற்றி எட்டுத் திக்குகளிலும் பரவியுள்ளது. கொங்கணர், கலிங்கர், கருநாடர் முதலியோருடன் நீ புரிந்த போர்க் காட்சிகள் எம் விழிகளை விட்டு அகல வில்லை. நின் தாயின் உருவச் சிலையைக் கங்கை யாற்றில் நீராட்டச் சென்றபோது நீ ஆரிய மன்ன ருடன் செய்த போரைக் கூற்றுவன் கண்டு திடுக்கிட் டான். உன்னை வெல்பவர் உலகில் யாருளர்? கண்ணகியின் உருவத்தைப் பொறித்தற்குரிய கல்லைக் கொண்டுவரவே இமயத்திற்குச் செல்வதா யினும், அச்செய்தியை வடவரசர்க்கு ஓலை போக்கித் தெரிவித்தல் நன்று" என்றான். அது கேட்ட **அழும்பில் வேள்** என்ற அமைச்சன், 'நமது வஞ்சிமா நகரில் பல நாட்டு ஒற்றர்களும் உளர். நம் கோநகரில் பறையறைதலே சாலும். ஒற்றர் வாயி லாக நமது வடநாட்டுச் செலவுபற்றிய நோக்கத்தினை அவர் அறிய வழியுண்டு" என்றான்.

செங்குட்டுவன் அதனையே முறையென்று ஒப்பினன். பின்னர் யாவரும் வஞ்சி மூதூர் மீண்டனர். மன்னனது வடநாட்டுச் செலவு மாநகரில் பறைசாற்றப்பட்டது.

## 5. வடநாட்டுச் செலவு

### செங்குட்டுவன் சூளுரை

செங்குட்டுவன் ஆசான்- பெருங்கணி, அருந் திறல் அமைச்சர், தானைத்தலைவர் முதலியோர் சூழ அரண்மனையில் இருந்தபொழுது, இமயத்தில்

ருந்து வந்த இருடியர் சிலர் செங்குட்டுவனைக் கண்டு, "வடவரசர் பலரும் ஒரு திருமணத்திற் கூடியிருந்த பொழுது, கனகன் விசயன் என்பவர், 'யாம் மன்னராக இல்லாத பொழுது தமிழரசர் இமயம் வந்து சென்றனராம். யாம் வேந்தராக இருக்கும் இப்பொழுது அத்தமிழரசர் வருவர்கொல்' என்று கூறினர். அக்கூற்றுத் தமிழரசரை இகழ்வது போலிருந்தது" என்று கூறிச் சென்றனர். அது கேட்டுச் செங்குட்டுவன் சினந்தெழுந்து. "தமிழ் மன்னர் ஆற்றலை இழிவுபடுத்திய மன்னர்தம் முடித்தலையில் பத்தினிக்குரிய கல்லை ஏற்றிக் கொணர்வேன். அங்ஙனம் கொணராவிடில், என் குடிகள் அஞ்சத்தகும் கொடுங்கோலனாக யான் ஆகக் கடவேன்" என்று கூறினான். அப்பொழுது ஆசான், "மன்னர் பெரும, வடநாட்டு மன்னர் சோழ பாண்டியரை இகழ்ந்தனரே யன்றி நின்னை இகழ்ந்திலர். அடுபோர் அண்ணலே, நீ வஞ்சினம் கூறுதற்கு நின்னிடம் எதிர்க்கும் மன்னரும் உளரோ? ஆதலால் நின் சினம் தணிக" என்றான்.

### வாளும் குடையும்

அவ்வமயம் பெருங்கணி எழுந்து, "வெந்திறல் வேந்தே, வாழ்க நின் கொற்றம்! நினது வடநாட்டுச் செலவுக்குரிய நேரம் வாய்த்துள்ளது. இந்த நேரத்தில் புறப்படின், நினக்கு வெற்றி கிடைப்பது உறுதி" என்று கூறினான். அதுகேட்ட வேந்தன், "எனது வாளையும் குடையையும் வடக்கு நோக்கி எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்க" என்று கட்டளையிட்டான்.

உடனே பொருநர் ஆர்த்தனர். முரசம் ஒலித்தது. பலவகைக் கொடிகளோடு அணியணியாகப்

படைகள் புறப்பட்டன. ஐம்பெருங் குழுவும், எண் பேராயமும், கருமவினைஞரும், கணக்கியல் வினைஞரும், தந்திர வினைஞரும், "சேரர் பெருமான் வாழ்க" என வாழ்த்தி, யானைமீது மன்னவனது வாளையும் வெண்கொற்றக் குடையையும் ஊருக்கு வெளியிலே இருந்த கோயிலில் புகவிட்டனர்.

## செங்குட்டுவன் புறப்பாடு

குடவர்கோமான் தன் பெரும் படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வழங்கினான். வடவரை வென்று வாகை மிலையக் கருதிய சேரன், படையெழுச்சிக்குரிய வஞ்சி மலரைத் தனது மணிமுடியில் சூடினான்; திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானை வழிபட்டுத் தனது பட்டத்து யானைமீது ஏறி அமர்ந்தான். அவ்வமயம், "விறல் வேந்தன் வெற்றி பெறுக," என்று ஆடகமாடத்து அரவணைக் கிடந்த நெடுமாலுக்குப் படைத்த துளசி முதலியவற்றைக் கோவிலார் கொண்டுவந்து கொடுத்தனர். சிவபெருமானுக்குப் படைத்த பொருள்களை மணிமுடிமீது வைத்திருந்த செங்குட்டுவன், திருமாலின் படையலைத் தனது தோள்மீது வைத்துப் புறப்பட்டான்.

நடன மகளிர் தம் கைகளைக் குவித்து, "வேந்தன் வெற்றி பெறுக" என வாழ்த்தினர். மாகதப் புலவரும், வைதாளிகரும், சூதரும் வெற்றிப் பாடல்களைப் பாடினர். கரி வீரரும், பரி வீரரும், வாள் மறவரும் வேந்தனது வாளினைப் புகழ்ந்தனர். அவுணர்மீது படையெடுத்துச் செல்லும் வானவன் போல வானவர் செம்மல் வஞ்சிமாநகரை நீங்கிச் சென்றான்.

**நீலகிரியில்**

இங்ஙனம் பெரும்படையுடன் சென்ற பேரரசன் நீலகிரியில் தங்கினன். அங்கு நால்வகைப் படைகளுக்கும் பாடிவீடுகள் அமைக்கப்பட்டன. அரசன் தனக்கென அமைந்த பாடி வீட்டிலிருந்த கட்டிலில் அமர்ந்தான். அவ்வமயம் முனிவர்கள் அங்குத்தோன்றினர். சேரர் பெருமான் அவர்களை வணங்கி நின்றான். அம்முனிவர்கள் அவனை வாழ்த்தி, "செந்நெறிச் செல்வ, இமயம் செல்லுதல் நின் கருத்தாகலின் அங்கு வாழும் அறவோரைக் காத்தல் நின் கடன்" என்று கூறிச் சென்றனர்.

அவர்கள் சென்ற பின்பு கொங்கண நாட்டுக் கூத்தரும் கொடுங் கருநாடரும் தங்களுக்குரிய ஆடை அணிகலன்களுடன் அங்குத்தோன்றினர்; கார் காலத்திற்குரிய பாக்களைப் பாடினர். குடநாட்டுக் கூத்தரும் பாடினர். ஆடலாசிரியன் வழிநின்று அவர் ஆடினர்; பாடினர். குட்டுவன் அவரவர் தகுதிக் கேற்பப் பரிசில் ஈந்து அவர்களை மகிழ்வித்தான். அவ்வமயம் நாடக மகளிர் நூற்றிருவரும் இசைக்குயிலுவர், இருநூற்று எண்மரும், நகை வேழம்பர் நூற்றுவரும் ஆந்திர அரசராகிய நூற்றுவர் கன்னர் சார்பாக வந்தனர். அவர்களுடன் ஆயிரம் தேர்களும், ஐந்நூறு கரிகளும், பதினையிரம் பரிகளும், இருபதினையிரம் பண்டிகளும் வந்தன. சஞ்சயனைத் தலைவனாகக்கொண்ட கஞ்சுகர் ஆயிரவரும் நூற்றுவர் கன்னர் சார்பாக நீலகிரிக்கு வந்தனர். சஞ்சயன் வஞ்சியானைப் பணிந்து, "மன்னர் பெரும, நீ வடக்கு நோக்கிச் செல்வது ஒரு கல்லின் பொருட்டே ஆயின், அதனைத் தாமே எடுத்துக் கங்கையில் நீராட்டிக்கொணருவதாக நின் நண்பராகிய

நூற்றுவர் கன்னர் சாற்றுகின்றனர்'' என்று கூறினன். அப்பொழுது சேரவேந்தன், "காவா நாவுடைக் கனகனும் விசயனும், அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலராய் எள்ளி நகையாடினராம்; அவர்களுக்கு நமது ஆற்றலை உணர்த்தவே கூற்றம் போன்ற இக்கொற்றப்படை செல்கின்றது. நம் படைகள் கங்கையாற்றைக் கடத்தற்குரிய நாவாய் களை மட்டும் நல்கும்படி நூற்றுவர் கன்னரிடம் கூறுக," என்றான். சஞ்சயன் அடிபணிந்து அகன்றான்.

சஞ்சயன் சென்றபின் பாண்டிய மன்னனால் அனுப்பப்பட்ட அலுவலர் சந்தனக்கட்டைகளையும் முத்துக்களையும் பாண்டியன் இட்ட திறையாகத் தந்து அகன்றனர். அவர்கள் சென்றபின் செங் குட்டுவன் நீலகிரியை நீங்கி வடக்கு நோக்கிப் புறப் பட்டான்.

**வடவருடன் போர்**

பல திங்கள் வழி நடந்து செங்குட்டுவன் தன் படையுடன் கங்கையின் தென்கரையை அடைந் தான்; நூற்றுவர்கன்னர் கொணர்ந்த நாவாய்களில் ஏறிக் கங்கையாற்றைக் கடந்தான்; ஆற்றின் வட கரையில் பாசறை அமைத்துத் தங்கினான். அப் பொழுது உத்தரன் விசித்திரன், உருத்திரன், பைர வன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேகன் முதலிய வடநாட்டு மன்னர்கள் கனக விசயர் தலை மையில் செங்குட்டுவனை எதிர்த்தனர். இரை வேட்டு எழுந்த அரிமா கரிமாக் கூட்டத்தைக்கண்டு, உள்ளக் கிளர்ச்சி கொண்டு அக்கூட்டத்துள் பாய்ந்தாற் போலச் செங்குட்டுவன் பகைவர் கூட்டத்துள் பாய்ந் தான். மயிர்க்கண் முரசம் அதிர்ந்தது. வில் ஏந்திய

வீரரும், வேல் ஏந்திய மறவரும், கரிவீரரும், இவுளி மறவரும் கடும்போர் செய்தனர். போர்க்களத்தில் எழுந்த புழுதி, யானைக் கழுத்தில் அணியப்பட்டமணியையும் சங்கையும் நிறைத்து ஒளியிழக்கச் செய்தது. வீரர்கள் வெட்டுண்டு வீழ்ந்தனர். பலர் தோள்கள் துணிக்கப்பட்டன. தலையற்ற முண்டங்கள் பேய் மகள் பாணிக்கு ஏற்ப ஆடின. குருதியாறு பெருக்கெடுத்தது. ஆரிய அரசருடைய படைவீரர் மிகப் பலராகக் கொல்லப்பட்டனர். தேர்கள் அழிக்கப் பட்டன. களிறுகள் கழுத்தறுபட்டன. குதிரைகள் குத்துண்டு இறந்தன. கூற்றுவன் அப்போரைத் தன் விழியாரக்கண்டு வியந்தான். பகைவீரர் சிலர் சாம்பரைப் பூசிக்கொண்டு சிவனடியார் என்று கூறித் தப்பினர். வேறு சிலர் காவி அணிந்து ஆவி காத்து மறைந்தனர். சிலர் சமண முனிவர் போல வேடமணிந்து உயிர் பிழைத்தனர். மேலும் சிலர் பாடகர் போல வேடமிட்டுத் தப்பினர். மற்றும் சிலர் கூத்தர் போல வேடம் புனைந்து ஓடி ஒளிந்தனர். பொருநர், "யானையை ஏரில் எருதாகப் பூட்டி வாளைக் கோலாகத் தாங்கிப் போர்க்களத்தை உழுதவன் செங்குட்டுவன்" என்று அவனைப் பரணி பாடினர். போரின் இறுதியில் கனகவிசயர் சிறைப் பட்டனர். செங்குட்டுவன் வில்லவன் கோதையின் தலைமையில் படைவீரரை ஏவி, இமயத்தினின்று பத்தினியின் உருவம் பொறிக்கத்தகுந்த சிலையைக் கொண்டுவருமாறு ஏவினான். தேவாசுரப்போர் பதினெட்டு ஆண்டுகள் நடந்தது; இராம-இராவணப் போர் பதினெட்டு மாதங்கள் நடந்தது; பாண்டவர் - துரியோதனர் போர் பதினெட்டு நாட்கள் நடந்தது; செங்குட்டுவனும் கனகவிசயரும் செய்த போர் பதினெட்டு நாழிகையில் முடிந்தது என்பது ஈண்டு அறியத்தகும்.

## பகைவர் தலைமீது சிலை

இமயமலையிலிருந்து எடுக்கப்பட்ட கல் கனக விசயர் முடிமீது வைத்துக் கங்கைக் கரைக்குக் கொண்டுவரப்பட்டது. கங்கையில் முறைப்படி நீராட்டப்பட்டது. கங்கையின் தென் கரையில் சிறந்த முறையில் பாடி வீடு அமைக்கப்பட்டது. பூப் பந்தர்களும், மணிமண்டபங்களும், மன்னன் பள்ளி யும், நன்மலர்ப் பொய்கையும், நாடக அரங்கும் பிறவும் பாடி வீட்டை அழகு செய்தன. செங்குட்டு வன் மணிமண்டபத்தில் அமர்ந்து போரில் பெரு வீரம் காட்டி உயிர்விட்ட கரி வீரரையும், பரி வீரரை யும், வாள் வீரரையும், தேர் வீரரையும், பிற வீரரை யும் பாராட்டிப் பேசினன்; வெற்றி வீரர்களுக்குப் பட்டங்களும் பரிசில்களும் வழங்கினன்.

## மாடல மறையோன்

அவ்வமயம் **மாடலன்** என்ற மறையவன் செங்குட்டுவன் முன் தோன்றி, "எம் வேந்தே நீ வாழ்வாயாக! மாதவியின் கானல் வரிப் பாட்டுக் கனகவிசயருடைய முடியணிந்த தலைகளை நெரித்தது. கடல் சூழ்ந்த இவ்வுலகை ஆட்சிபுரியும் காவலனே, நீ வாழ்க!" என்ருன். செங்குட்டுவன் அவனை நோக்கி, "நான்மறையாளனே, நீ உரைத்த மொழி யின் பொருள் யாது?" என்று கேட்டான். மாடலன், "சேரர் பெருமானே பூம்புகார்க் கடற் கரையில் மாதவி பாடிய வரிபாட்டைத் தவருகக் கருதிக் கோவலன் அவளைப் பிரிந்து, கண்ணகி யுடன் மதுரையை அடைந்தான். அந்நகரில் பாண்டியன் அநீதியால் கோவலன் கொல்லப்பட் டான். கணவனை இழந்த கற்பரசி நின்னுட்டின்கண் புகுந்து ஆரிய அரசரது முடித்தலைமீது ஏறினள்.

யான் இங்கு வந்த காரணத்தைக் கேட்டருள்: நான் அகத்தியன் உறையும் பொதியில் மலையை வலம் செய்தேன்; குமரித் துறையில் நீராடி மீள்கின்றேன்; முன்வினைப் பயனால் மதுரை மாநகருக்குச் சென்றேன்; வெற்றிச் சேனையுடைய பாண்டியனைக் கண்ணகி தன் சிலம்பினால் வெற்றி கொண்டாள் என்ற செய்தியினைக் கேட்டேன். மாதரி என்னும் ஆயர் நல்லாள், கோவலன் குற்றமற்றவன். மன்னனே தவறிழைத்தவன். யான் அடைக்கலப் பொருளைக் காக்கும் தகுதியை இழந்தேன். குடிகட்கு நிழல் செய்யும் குடையும் நீதி வழங்கும் செங்கோலும் வழுவின' என்று கூறிப் புலம்பி, இருள் மிக்க இடையாமத்தில் தீப்பாய்ந்து இறந்தாள். கவுந்தியடிகள் உண்ணா நோன்பை மேற்கொண்டு உயிர் விட்டார். மதுரை மாநகரம் எரியுண்டதும் பிறவும் கேட்டுக் காவிரிப்பூம்பட்டினம் சென்றேன்; கோவலன் உறவினருக்கு மதுரையில் நிகழ்ந்த வற்றைக் கூறினேன். தன் மகனுக்கும் மருகிக்கும் பாண்டியனுக்கும் நேர்ந்தவற்றைக் கேள்வியுற்றுக் கோவலன் தந்தையான **மாசாத்துவான்** கொடிய துயரினை அடைந்தான்; தன் பெருஞ் செல்வத்தைத் தானமாக அளித்தான்; பௌத்த சமயத் துறவியானான். கண்ணகியின் தந்தையான **மாநாய்கன்** ஆசீவகத் துறவியானான். மாநாய்கன் மனைவி இறந்தாள். மதுரை நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற மாதவி, தன் தாயை நோக்கி, 'நீ மணிமேகலையைக் கணிகையர் வழியில் விடாதே' என்று கூறித் தன் கூந்தலைக் களைந்து பௌத்த பிக்குணியானாள். வருந்தத் தக்க இக்காட்சிகளைக் கண்ட நான், மனம் நொந்து கங்கையில் நீராட

வந்தேன். பெருமானே, நீ வாழ்வாயாக!" என்று விரிவாகக் கூறினான்.

இச்செய்திகளைக் கேட்ட சேரர் பெருமான், "நெடுஞ்செழியன் இறந்த பின்னர் வளமிக்க பாண்டியநாடு என்ன நிலையில் இருக்கின்றது?" என வினவினான். மாடலன் மன்னனை நோக்கி, "கொற்கை நகரில் இருந்து ஆண்ட **வெற்றி வேற் செழியன்** பொற்கொல்லர் ஆயிரவரைக் கண்ணகி தேவிக்குப் பலி கொடுத்தான்; பின்பு தானே பாண்டியர் ஆசனத்தில் அமர்ந்தான். இப்பொழுது அவனே பாண்டிய மன்னன்" என்று பகர்ந்தான்.

### பாசறை நிகழ்ச்சி

அவ்வமயம் ஞாயிறு மறைந்து வெண்ணிலவு வானத்தில் தோன்றியது. சேரவேந்தன் அதனை உற்று நோக்கினான். அதுகண்ட காலக் கணியன் எழுந்து, "மண்ணாள் மன்னவ, நீ வாழ்க! நீ வஞ்சியி லிருந்து நீங்கிய காலம் முப்பத்திரண்டு திங்களாகும்" என்று கூறினான்.

மன்னன் தனக்கென்று அமைந்த இருக்கையி லிருந்து மாடலனை வருவித்து, "இளவரசராகிய சோழர் ஒன்பதின்மரும் இறந்த பின்பு, சோழன் எவ்வாறு நாட்டை ஆண்டு வருகிறான்?" என்று கேட்டான். மாடலன், "எம் தலைவனே, நீ வாழ்க! தூங்கெயில் மூன்றும் தொலைத்தவன் ஒரு சோழன். புறவின் துயரினைத் தீர்க்கத் தன் உடலினை அரிந் தவன் ஒரு சோழன். இப்பெருமக்கள் வளர்த்த செங்கோல் பிற்காலத்திலும் வளையாதன்றோ? வானம் பொய்த்து வற்கடம் மிக்க காலத்திலும் சுரந்து காவிரி பரந்து பாய்தலின் சோழனுக்குச் சிறிதும் தீதில்லை" என்று விடை பகர்ந்தான்.

சேரன் மகிழ்ந்து ஐம்பது துலாம் பொன்னை அவனுக்கு உதவினான்; ஆரியநாட்டு அரசராகிய நூற்றுவரை (நூற்றுவர் கன்னரை)த் தம்நாடு செல விடுத்தான்; தன்னிடம் தோல்வியுற்ற கனக விசயரை ஆரியப் பேடியோடு தமிழ்வேந்தர்க்குக் காட்டி வருமாறு கஞ்சுக மாந்தர் ஆயிரவர்க்குக் கட்டளையிட்டான்.

**வஞ்சி மீளுதல்**

மறுநாள் காலையில் சேரன் செங்குட்டுவன் வெற்றி மிகுந்த தன் படைகளுடன் வஞ்சி மூதூரை நோக்கிப் புறப்பட்டான்.

**அந்தப்புரத்தில்**

செங்குட்டுவன் அரண்மனை செல்வ வளம் வாய்ந்தது. அதில் அமைந்த அந்தப்புரம் அழகு மிக்கது. அரசியின் கட்டில் ஓவியங்கள் அமைந்த மேற்கட்டியினை உடையது. வைரமும் மாணிக்கமும் பதிக்கப்பெற்ற பொற்றகடு அடிக்கப்பட்டது. அக் கட்டிலின்மீது, அன்னப்பேடை உதிர்த்த மென்மை வாய்ந்த தூவியைச் செறித்த படுக்கை இருந்தது. அதன் மீது அரசமாதேவி அமர்ந்திருந்தாள். கணவனது பிரிவால் அவளது முகம் வாட்டமுற்றி ருந்தது. அப்பொழுது முதுபெண்டிராகிய செவிலி யர் அவளிடம் போந்து, "அம்மையே, சேரவேந்தன் வெற்றிபெற்று மீண்டுவருகிறான். உனது பிரிவுத் துயரை நீக்குவாயாக" என்று பல்லாண்டு கூறி வாழ்த்தினர்.

அந்தப்புரத்தில் பணி செய்துவந்த கூனும் குறளும் அரசியைப் பணிந்து, "மன்னர் பெருமான் வருகின்றான். நினது நறிய மலர்க் குழல் ஒப்பனை பெறுவதாகுக" என்று கூறினர்.

**நால்வகைப் பாடல்கள்**

கள்ளை உண்ட வேட்டுவன் காவலைத் தவறிய தால் தினைப் புனத்தில் யானை நுழைந்தது. செங் குட்டுவன் வெற்றிபெற்று மீள்வகை அறிந்த குறமகளிர் உயர்ந்த பரண்மீதிருந்து குறிஞ்சிப் பாடலைப் பாடினர். அப்பாடலைக் கேட்ட யானையும் அயர்ந்து உறங்கியது. கொழுநன் வரவை எதிர் பார்த்திருந்த கோப்பெருந்தேவியும் அப்பாடலைக் கேட்டாள்.

வயலை உழுதுகொண்டிருந்த உழவர் தம் எருது களை நோக்கி, "நமது மன்னர் பெருமான் பகைவர் மதிலை அழித்து, கழுதை பூட்டின ஏரினை உழுது, வெள் வரகை விதைத்துத் திரும்பி வருகின்றான். நாளை அதன் பிறந்தநாள் விழா. அந்நாளில் பகை யரசர் விடுதலை பெறுவர். நீங்களும் நாளை வயல் வேலையிலிருந்து விடுதலை பெறுவீர்கள்," என்னும் பொருள்கொண்ட மருதப் பாடலைப் பாடினர். அப் பாடலும் அரசமாதேவியின் செவிகளை நிறைத்தது.

குளிர்ந்த பேரியாற்றில் நீராடுவோர் இட்ட தொய்யிற் குழம்பும் பொற் சுண்ணமும் மலர்களும் பரவி இந்திர வில்லைப்போல் விளங்கிய பெரிய நீர்த் துறைகளில், குவளை மலர்களை முள்ளிப்பூ மாலையுடன் முடித்த குடுமியின்கண் தாமரை மலரை அணிந்த கோவலர், தாம் மேய்க்கும் ஆனிரைகளை நீருண்ண விட்டு, விற்கொடியையுடைய சேரலன் வந்தான். இமயத்திலிருந்து அவன் கொண்டுவந்த பல ஆனிரை களுடன் நீங்களும் சேருங்கள்" என்று கூறிக் குழலூதினர். அக்குழலோசையையும் கோப் பெருந்தேவி கேட்டாள்.

**நெய்தல்**

நெய்தல் நிலமகளிர் கடற்கரையில் புன்னைமர நிழலில் முத்துக்களை வைத்துக் கழங்காடினர். அம் மகளிர், "சேரர் பெருமான் வந்தான். அவன் முடித்த வஞ்சி மாலையையும் தும்பை மாலையையும் பனை மாலையுடன் சேர்த்து நாம் பாடுவோம்" என்று கூறிக் கழங்காடிக்கொண்டே பாடினர். அவர்களது இனிய பாட்டொலியும் சேரமாதேவி யின் செவியகம் சேர்ந்தது.

அவ்வமயம் வலம்புரிச்சங்கு வெற்றி தோன்ற முழங்கியது. வாகை சூடிய சென்னியையுடைய செங் குட்டுவன் பட்டத்து யானைமீதமர்ந்து வெண் கொற்றக் குடைநிழல் செய்ய வந்தான்; நகரத்தார் எதிர்கொள்ள வஞ்சி மாநகருள் புகுந்தான்.

## 6. பத்தினிக் கடவுள்

**சாக்கைக் கூத்து**

மாநகர் புகுந்த மன்னவன் தன் மாதவியோடு அளவளாவிக்கொண்டிருக்கையில், பறையூர்க் கூத்தச்சாக்கையன் அங்குத் தோன்றி அம்மை யப்பர் திருக்கோலமணிந்து ஆடத் தொடங்கினான். அவன் ஒரு காலில் அணிந்த தண்டை ஒலித்தது; கையில் தாங்கிய பறை ஆர்த்தது; விழிகள் அவன் கருத்தினை வெளிப்படுத்தின; அவன் தலையில் அணிந்த சடை பரந்து அலைந்தது; அவனது மற் றொரு காலில் அணிந்த பாடகம் அசையவில்லை; சூடகம் என்னும் தோள்வளை நடுங்கவில்லை; மேகலை ஒலிக்கவில்லை; மெல்லிய இடமார்பு ஆடவில்லை: இடக்காதணி அசையவில்லை; நீலமணி போன்ற

கூந்தல் அவிழவில்லை. இங்ஙனம் உமையை இடங் கொண்டு இமையவன் நடித்த கொடுகொட்டி என்னும் நடனத்தை ஆடிக் காட்டினான். அரசன் மகிழ்ந்து அவனுக்கு வரிசை நல்கி விடுத்தான்.

## சோழ பாண்டியர்

சாக்கையன் சென்ற பின்பு, சோழ பாண்டியர்க்குக் கனகவிசயரைக் காட்டி வருமாறு சேரன் ஏவிய நீலன் முதலியோர் சேரனைப் பணிந்தனர். நீலன் மன்னனை நோக்கி, "அரசே, நினது கட்டளைப்படி கனகவிசயரைக் கொண்டுசென்று, சோழ வேந்தனைக் கண்டோம்; கனகவிசயரைக் காட்டி வடநாட்டுப் போரை விளக்கினோம். அச் சோழன், 'போர்க்களத்தில் வாளும் குடையும் நழுவ விட்டுப் பகைவர்க்கு அஞ்சி ஓடிய வேந்தரைச் சிறைப்பிடித்தமை சேர மன்னனுக்குச் சிறப்பைத் தராது' என்றான். பின்னர் நாங்கள் பீடுமிக்க மாடமதுரையை அடைந்தோம்; பாண்டியர் பெருமானைப் பார்த்தோம். அவ்வரசன், 'சேரனுக்கு ஆற்றாது அஞ்சித் தவக்கோலம் கொண்டோடிய ஆரிய அரசரை இங்ஙனம் சிறைப்பிடித்து வருதல் முறையன்று; சேர வேந்தன் செயல் புதுமை வாய்ந்தது,' என்றான். இதுவே யாங்கள் கொணர்ந்த செய்தி" என்று கூறினான்.

## மாடலன் அறிவுரை

சோழபாண்டியர் கூற்றைக் கேட்ட செங்குட்டுவன் சினங்கொண்டு எழுந்தான். அவ்வளவில் மாடல மறையோன் எழுந்து, "அரசே, வாழ்க நின் கொற்றம்! நின் சீற்றம் ஒழிவதாக! நின் பெருமையை அறியாதார் யாவர்? நீ ஐம்பது

யாண்டுகள் கழிந்து மூதுமைப் பருவத்தை அடையும் நிலையிலுள்ளனை. நீ இதுகாறும் மறக்கள வேள்வி செய்தனையே யன்றி, அறக்கள வேள்வி செய்ய வில்லை. நின் முன்னோருட் பலரும் மறக்கள வேள்வி யினையே செய்தனர். ஆதலால் அவர்தம் பெயர் இவ்வுலகில் மிகுதியாகப் பரவவில்லை. உயிர்க்கு உறுதியைப் பயக்கவல்லது அறக்கள வேள்வியே யாகும். வீடு பேற்றை அடைதற்குரிய அவ்வேள்வி யைச் செய்க. சோழ பாண்டியர்மீது சினங்கொள் ளேல். நினது கொற்றம் வாழ்க!" என்று அறி வுரை பகர்ந்தான். மாடலன் அறிவுரை மன்னன் உள்ளத்தில் பாய்ந்தது. அவன் சீற்றம் தணிந்தான்.

**கண்ணகிக்குக் கோவில்**

கனகவிசயரும் பிறரும். வஞ்சியை அடுத்த வேளாவிக்கோ மாளிகையில் தங்கினர். அறநூலில் வல்ல அந்தணர், ஆசான்; பெருங்கணி முதலியோர் சென்று இமயத்தினின்று கொணர்ந்த பத்தினியின் உருவம் செதுக்கப்பட்ட சிலையைக் கோவிலில் எழுந் தருளச் செய்தனர்; அத்திருவுருவத்திற்கு வேண்டும் அணிகலன்களை அழகுற அணிவித்தனர். குட முழுக்கு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

இங்ஙனம் விழா நிகழ்வதைக் கண்ணகியின் செவிலித்தாயும், தலைமைத் தோழியும், தேவந்தி என்னும் பார்ப்பனத் தோழியும் அறிந்து சேர நாட்டுக்கு வந்தனர். அவர்களுடன் மாதிரியின் மகளான ஐயையும் வந்தனள். நால்வரும் செங்குட்டு வனைப் பணிந்து தம் வரலாற்றை அறிவித்தனர். கண்ணகியின் தாயும், கோவலன் தாயும், மாதரியும் இறந்ததைத் தெரிவித்தனர்; மாதவியின் மகளான

மணிமேகலை துறவு பூண்ட செய்தியையும் கூறினர். பின்னர் அவருள் முதல் மூவரும் ஐயை என்பாளைப் பத்தினிச் சிலைக்கு முன் நிறுத்தி, "மாபத்தினி, உன்னை அடைக்கலமாகக் கொண்டு பாதுகாத்து நீ அடைந்த துன்பத்தைக் கேட்கப் பொறாது உயிர் நீத்த மாதரியின் மகள் இவள். நாங்கள் நால்வரும் நின்னைக்கண்டு வணங்க வந்தோம்" என்று கூறித் தொழுது நின்றனர்.

### பத்தினிக் கடவுள்

அவ்வமயம் விண்ணில் ஓர் உருவம் வெளிப்பட்டது. அது கால்களில் சிலம்பும், கைகளில் வளையல்களும், காதுகளில் தோடுகளும், கழுத்தில் மணிகளும் வேறுபல அணிகளும் அணிந்து திகழ்ந்தது. அதனைக் கண்ட செங்குட்டுவன் வியப்புற்றான். விண்ணில் தோன்றிய அவ்வுருவம், "தோழிகாள், என் கணவனைக் கொலையுண்ணச் செய்த தென்னவன் தீதிலன். மதுரையில் நிகழ்ந்தவை வினைப்பயனால் விளைந்தவை. யான் அத்தென்னவன் திருமகள். அவன் தேவரோடு இன்புற்று இருக்கிறான். நான் இம்மலையில் இருக்க விரும்புகிறேன்; இவ்விடத்தை விட்டு அகலேன். நீங்கள் என்னுடன் விளையாடலாம்," என்று கூறியது. அது கேட்ட தேவந்தி முதலியோர் மிக்க மகிழ்ச்சி அடைந்து கண்ணகித் தெய்வத்தைப் போற்றிப் புகழ்ந்தனர். முடிவில் அத்தெய்வம்," செங்குட்டுவன் வாழ்க!" என்று சேரர் பெருமானை வாழ்த்தி மறைந்தது.

### மணிமேகலையின் துறவு

செங்குட்டுவன் தேவந்தியை நோக்கி, "மணிமேகலை என்ற பெயரைக் கூறினையே. அவள் யாவள்?"

என்று வினவினன். தேவேந்தி சேரவேந்தனை நோக்கி, "பெருமானே, மணிமேகலை என்பவள் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். அவள் யாவரும் கண்டு வியக்கத்தகும் பேரழகுடையவள். மாதவி துறவுபூண்ட பின்னர் மணிமேகலையும் பௌத்த பிக்குணியாயினள். பேரழகியான மணிமேகலை இங்ஙனம் துறவுக் கோலத்தை மேற்கொண்டதை அறிந்த சோழவேந்தனும் குடிகளும் பெருந்துயர் அடைந்தனர். மணிமேகலை பௌத்த சமயப் பெரியாரான அறவண அடிகளிடம் அறவுரை கேட்டுத் துறவு நெறியில் வாழ்ந்துவருகின்றாள். அரசே, நினது கொற்றம் வாழ்க!" என்று மணிமேகலை வரலாற்றைக் கூறி முடித்தாள்.

### பாசண்டச் சாத்தன்

அப்போது அவள்மீது பாசண்டச் சாத்தன் என்னும் தெய்வம் ஆவேசித்தது. அவள் தெய்வ மாடினள். அத்தெய்வம் மாடலனை நோக்கி, "மாடல, யான் பாசண்டச் சாத்தன் என்னும் தெய்வம். யான் கூறுமாறு செய்: உன் கமண்டலத்திலுள்ள நீரைப் பத்தினிக் கடவுளை வழிபட வந்துள்ள இச்சிறுமியர் மூவர்மீதும் தெளிப்பாய். இவர் தம் முற்பிறப்பினை உணர்வர்," என்றது.

மாடலன் அத்தெய்வம் தெரிவித்தபடியே செய்தான். உடனே சிறுமியர் மூவரும் தனித்தனியே புலம்பலாயினர். முதற் சிறுமி: "யான் பெற்ற மகளே, உன் கணவனை கோவலன் கூடா வொழுக்கத்தினனாய் இருந்தான். அதனால் யான் பெரிதும் மனம் வருந்தினேன். நின் கணவன் வீடு வந்ததும் எனக்கும் அறிவியாமல் நீ அவனுடன் மதுரைக்குச்

சென்றனே. உற்றார் பெற்றார் இல்லாத அம்மதுரை யில் கணவனை இழந்து துன்புற்றனே," என்று புலம்பி அழுதாள்.

இரண்டாம் சிறுமி, "யான் பெற்ற மகனே, கற்பிற் சிறந்த காரிகையை மறந்து நாடகக் கணிகை யிடம் நாட்டம் வைத்தனே; அவளிடம் வெறுப்புற்று, ஒருவருக்கும் அறிவியாமல், மனைவியோடு மதுரை சென்றனே; அங்கு வீண்குற்றம் சுமத்தப்பெற்று வாளுக்கு இரையாயினை. என்னிடம் வந்து பேசாயோ!" என்று புலம்பி நொந்தாள்.

மூன்றாம் சிறுமி, "ஐய, உன்னையும் உன் மனைவி யையும் கவுந்தி அடிகள் என்பால் அடைக்கலப்படுத் தினர். நான் உங்கள் இருவரையும் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யுற்றேன். நான் வையை யாற்றுக்கு நீராடச் சென்றபோது நீ கொலையுண்ட செய்தியைக் கேள்வியுற்றேன்; உடனே மனையில் வந்து பார்த் தேன்; நின்னைக் காணேன்; நீ எங்கு ஒளிந் தனையோ!" என்று புலம்பினாள்.

அச்சிறுமியர் புலம்பியதைக் கேட்ட சேர மன்னன் வியப்புற்று மாடலனை நோக்கினான். மாடலன் மன்னனை நோக்கி, "பெரும, முதற்சிறுமி முற்பிறப்பில் கண்ணகியின் தாயாக இருந்தவள்; இரண்டாம் சிறுமி கோவலன் தாய். மூன்றாம் சிறுமி இடைக்குல மடந்தை மாதரி என்பவள். முதல் இருவரும் வஞ்சி மாநகரிலுள்ள அரட்டன் செட்டி யின் இரட்டைப் பெண்களாகப் பிறந்தனர். மாதரி என்பவள் திருமால் கோவில் அர்ச்சகருக்கு மகளா கப் பிறந்தாள்" என்று கூறினான்.

**"தந்தேன் வரம்"**

மாடலன் கூற்றைக் கேட்ட செங்குட்டுவன் வியப்புற்றான்; வீரபத்தினியின் கோயிலுக்கு வேண்டும் நிலங்களை அளித்தான்; நாள்தோறும் வழிபாடு நடைபெறப் பெருஞ் செல்வத்தை உதவி னன். செக்குட்டுவன் நண்பரான மாளுவ வேந்தரும் இலங்கைக் கயவாகு வேந்தனும் பிறரும் பத்தினிக் கடவுளைப் பணிந்து, "அம்மையே, சேரர் பெருமா னுக்குக் காட்சி அளித்ததைப் போலவே யாங்கள் கட்டும் கோவில்களிலும் எழுந்தருளி எங்கட்கும் காட்சி அளித்தருள்" என்று வேண்டினர். அப்போது, "தந்தேன் வரம்," என்று ஒரு குரல் வானத்தே எழுந்தது.

## 7. நற்பண்புகள்

**கடமை உணர்ந்த காவலன்**

சேரன் செங்குட்டுவன் பத்தினி வரலாற்றை உரைத்த சாத்தனரை நோக்கி, "உரிய காலத்தில் நாட்டில் மழை பெய்யாவிடில் துன்பமே; குடிகளுக் குத் துன்பம் நேராமல் காத்தல் பொறுப்புணர்ச்சி யுடைய சிலராற்றன் முடியும். இவற்றை நோக்க, அரச குடியிற் பிறத்தல் துன்பமே அன்றி இன்பம் தருவதொன்றன்று" என்று கூறினன். இக் கருத்தை வெளியிட்ட காவலன் எத்தகைய பொறுப் புணர்ச்சி மிக்கவன் என்பது இனிது விளங்குகிற தன்றோ ?

**செங்கோல் ஆட்சி**

செங்குட்டுவன் முப்பத்திரண்டு திங்கள் சேர நாட்டில் இல்லை என்பது முன்பே குறிக்கப்பட்டது.

இவ்வளவு நீண்ட காலம் மன்னன் இல்லாதிருந்தும், நாட்டில் அமைதி நிலவியிருந்தது வியப்பேயன்றோ? வேந்தன் வடவரை வென்று வெற்றிமாலையோடு திரும்பி வருகிறான் என்பதை உணர்ந்ததும் தினைப் புனக் காவல் புரிந்த மலைநாட்டு மங்கையரும், மருத நில உழவரும், முல்லை நிலக் கோவலரும், நெய்தல் நில நங்கையரும் அவனது வெற்றியைப் பாராட்டி உள்ளம் உவந்தனர் என்பதை நோக்க, சேர வேந்தன் தன் குடிகளிடம் எத்தகைய நன்மதிப்பைப் பெற்றிருந்தான் என்பது வெள்ளிடை மலைபோல் விளக்கமாகும்.

**பேரரசன்**

சேர வேந்தன் நெடுங்காலம் நாடு நீங்கிப் பாடி வீட்டில் தங்கியபோது அவனது நாட்டின்மீது பகைவர் எவரும் படையெடுத்து வரவில்லை என்பதை நோக்க, செங்குட்டுவன் தென்னிந்தியாவில் இணை யற்ற பேரரசனாக இலங்கினான் என்பது தெளிவாகத் தெரிகிறதன்றோ?

**வீரர் போற்றும் வேந்தன்**

பண்பட்ட படைகளை அடக்கி ஆளத்தகும் பெரு வீரனையே படைவீரர் மதிப்பர். செங்குட்டுவன் இவ்விலக்கணம் பெற்றிருந்தமையால் சேர வீரர் அவனை மதித்தனர்; ஒவ்வொரு போரிலும் அவனுக்கு வெற்றியையே வழங்கினர். அப்பெரு மகனும் ஒவ்வொரு போரின் தொடக்கத்திலும் வீரர்க்குப் பெருஞ்சோறு வழங்கினான்; போரின் இறுதியில் பட்டங்களும் பரிசுகளும் நல்கினான். இங்ஙனம் சேரர் பெருமான் தன் வீரரை மதித்து

நடந்தமையால், வீரர் அவன் சொற்படி நடந்தனர். இச்சீரிய பண்பு வெற்றி வேந்தனுக்கு இன்றியமையாதது.

## சிறந்த பக்தன்

செங்குட்டுவன் சிவனருள் நிறைந்தவன்; நாடோறும் சிவபூசனை செய்தவன். அவன் வடநாடு நோக்கிப் புறப்பட்டபோது சிவனது படையலைத் தனது முடியிலும், திருமால் படையலைத் தோளிலும் ஏற்றனன் என்பதை நோக்க, அவனது சமய சமரச நோக்கம் நன்கு வெளியாகும். அவனது கோநகரில் சமணர், பௌத்தர், ஆசீவகர் முதலிய பல சமயத்தவரும் இருந்தமை, அவனது சமயப் பொறையையும் குடிகள் தத்தமக்கு விருப்பமான சமயத்தைத் தழுவலாம் என்ற உரிமையை அவன் வழங்கியிருந்தனன் என்பதையும் வலியுறுத்துகின்றது.

## சிறந்த கணவன்

கணவன் மனைவியை மதித்து நடந்தாற்றான் மனைவியும் கணவனைத் தன் உயிராகக் கருதுவாள். இதனைச் செங்குட்டுவன் நன்குணர்ந்தவன். அவன் தன் மனைவியான இளங்கோவேண்மாளை நன்கு மதித்து வந்தான் என்பது,

> "உயிருடன் வந்த ஒருமகள் தன்னினும்,
> செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னினும்,
> நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?"[10]

என்று தன் மனைவியை மதித்துக் கேட்டதிலிருந்து தெளிவாகும். தன் மாதேவியின் மூதுரையை ஏற்று நடக்கும் இயல்பு அவனிடம் இருந்தது.

10. காட்சிக்காதை, 107—109.

"காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக வானகத்து;
அத்திறம் நிற்கநம் அகல்நா டடைந்தஇப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"[11]

என்று தன் கோப்பெருந்தேவி கூறியதனைச் செங்குட்டுவன் செவிமடுத்துப் பத்தினிக் கடவுளுக்குக் கோவில் எழுப்பி விழாவயர்ந்தனன் அன்றோ?

## பெருநாள்

செங்குட்டுவன் பிறந்த நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டது. அந்நன்னாளில் சிறைப் பட்டவர் விடுதலை பெற்றனர்; வஞ்சி மூதூர் அலங்கரிக்கப்பட்டது; குடிமக்களுள் ஒவ்வொரு வரும் தமது பிறந்த நாள் போலக் காவலனது பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர். அந்த நாளை அனைவரும் விடுமுறை நாளாகக் கருதி னர் என்பது உழவர் கூற்றால் துணியப்படும்.

## புலவர் புரவலன்

செங்குட்டுவன் அந்தணரையும் அறவோரை யும் புலவரையும் பெரிதும் போற்றி ஆதரித்து வந்தான். அவன் அள்ளி அள்ளிக் கொடுக்கும் பெரு வள்ளலாக விளங்கினான். அவனது பேரன் பிற்கு உரியராகப் பரணரும் சாத்தனாரும் திகழ்ந் தனர். **சாத்தனார்** பௌத்த சமயத்தினர்; மணிமேகலை என்னும் உயரிய காவியத்தைச் செய் தவர். **பரணர்** சங்கப் புலவருள் ஒருவர்; மிகச் சிறந்த புலவர். அவர் பதிற்றுப்பத்து என்னும் நூலில் செங்குட்டுவன்மீது ஐந்தாம் பத்தைப் பாடி

11. காட்சிக்காதை, 111—114.

யவர்; ஐந்தாம் பத்தில் செங்குட்டுவனுடைய வீரச் செயல்களையும், வள்ளல் தன்மைகளையும் விரிவாகப் பாராட்டியுள்ளார். சேரர் பெருமான் அப்புலவர் பெருமானை மிக்க மரியாதையுடன் பாராட்டி வந்தான்.

## முடிவுரை

சங்க காலத்தில் தமிழரசர் தமிழகத்தை ஆண்டனர்; தங்கள் தாய்மொழியாம் தமிழைத் தம் உயிர் போல மதித்தனர். இயற்றமிழில் வல்ல புலவரையும் இசைத்தமிழில் வல்ல பாணரையும் நாடகத் தமிழில் வல்ல கூத்தரையும் நன்கு போற்றினர். அப் போற்றுதலால் முத்தமிழ் வாணர் பசிப்பிணியின்றித் தமிழைப் பாங்குற வளர்த்தனர். தமிழ் மன்னர் தமிழகத்தைச் சேர்ந்தவராதலின், தமிழ்க் குடிகளைத் தம் உயிர்போலக் காத்து வந்தனர்; சமயத் துறையிலும் பிற துறைகளிலும் உரிமை வழங்கினர்; கல்வியை நன்கு வற்புறுத்தினர்; கற்றோரை நன்கு மதித்துப் போற்றினர். ஒழுக்கத்திற் சிறந்த உத்தம வேந்தரால் குடிகள் நல்லொழுக்கத்திலும் நல்லறிவிலும் சிறந்து நல் வாழ்வு வாழ்ந்தனர்.

Dr. T.P.M. LIBRARY ... MADURAI KAMARAJ UNIVERSITY